1994

"Prevention is better than Cure."

# A MANUAL

ON

# The Rearing and Breeding of Cattle

BY

K. M. APPIAH, L. M. & S.,
*Assistant Surgeon, Bangalore.*

குடகுதேசத்திய

கொரவண்ட அப்பய்யா அவர்களால்

இயற்றப்பட்ட

# கோரட்சவிண.

தமிழ் முதற்பதிப்பு.

Madras:
PRINTED BY ADDISON & CO., MOUNT ROAD.

1890.

*All Rights Reserved.*

# PREFACE.

THIS pamphlet was first published in Kanarese in October 1888; and the first edition being soon exhausted, owing chiefly to the kind patronage of the Government of His Highness the Maharaja of Mysore, the second and third editions were issued in 1889.

Believing that a Tamil translation would prove of some use to the ryots of Southern India, I have ventured to get it rendered into easy Tamil.

The aim of this little book is to explain in easy language the elementary facts connected with the rearing and breeding of cattle. The construction of cattle sheds, the care of pasture grounds, the preservation of fodder by the method known as "Ensilage," the common and the contagious diseases of cattle, together with their diagnosis and treatment are also briefly considered.

Several books and essays connected with the subject have been consulted, among which "A Manual of the more Deadly Forms of Cattle Disease in India, by G. H. B. Hallen, Esq.," and "Diseases of the Ox, by J. H. Steel, Esq., M.R.C.V.S.," require special mention.

It has been truly said that ignorance is the mother of many evils; and if this manual will be of some use in the removal, partial though it be, of the ignorance that prevails in Southern India in connection with the rearing and breeding of cattle, I shall consider myself amply rewarded for my trouble.

BANGALORE,
*August*, 1890.

K. M. APPIAH, L.M.S.,
*Asst. Surgeon, Bangalore.*

AGRICULTURAL COLLEGE,
*25th January*, 1889.

I have carefully perused Asst. Surgeon K. M. Appiah's manual in Kanarese on the rearing and breeding of cattle. The manual treats succinctly of many points of importance connected with cattle stock. It will prove of great value to the ryots of Mysore Province, who have of late years sustained such heavy losses of their stock from rinderpest and other fatal diseases. There is no doubt that with the help of this manual they will be able to cope with the most important cattle diseases.

The recipes given in the manual are of proved efficacy, and the drugs entering into their composition are cheap and procurable in ordinary bazaars.

(Sd.) SH. D'SILVA,
*Ag. Veterinary Lecturer, College of Agriculture.*

* * * *

I think your book on cattle a most useful one. The description of diseases and their remedies appear clear and just the kind of thing which the ryots need to be acquainted with. I hope the book will have a wide circulation. * * *

J. A. VANES,
*Wesleyan Mission.*

# முகவுரை.

கோஜாதிப்பிராணிகளைக் காப்பாற்றவேண்டிய முறைக
குறித்துச் சாஸ்திரோக்தமாயெழுதப்பட்டதோர் சிறிய
கமாயினும் கன்னடபாஷையிலில்லாதிருந்த பெருங் கு
வக்கண்டு கூடியவரையில் விஷயங்களையெல்லாம் சங்
த்து ஒருசிறிய புத்தகமெழுதி 1888௵ அக்டோபர்
த்தில் வெளிப்படுத்தினேன். அதையே 1889௵ அ
ாபர்மாதத்தில் மூன்றுமுறை வெளியிடப்பட்டது.

அதைக் கன்னட பாஷையினின்றும் தமிழில் மொழி
ர்த்து வெளியிட்டால் கன்னடபாஷாக்ஞானம் பெற
க்கும் தமிழர் பலருக்கும் பெரும்பயனை யுண்டுபண்ணு
ாயிருக்குமென்று அனேக புத்திமான்கள் எனக்கு அப்
தைக்கப்போது சொல்லிக்கொண்டு வந்ததை யானும் சி
ு ம-ா-ா-ஸ்ரீ, திருவூர் சேஷாசலம் பிள்ளை அவர்களைக்
ண்டு தமிழில் மொழிபெயர்க்கச்செய்து ம-ா-ா-ஸ்ரீ,
லோ. கஜராஜ முதலியார் அவர்களைக்கொண்டு பரிசோதி
து வெளியிட்டிருக்கிறேன். எனக்குபகரித்த இவர்
ருவரும் செய்தநன்றியை என்னால் ஒரு[illegible]ம் மறக்கற்
தன்று. இதில் கன்னடநடை கொஞ்ச[illegible]கலந்திருப்ப
ப்போன்றே சில வழக்கச் சொற்களையு[illegible]ண்டிருப்ப
டு சில நூதன அவுடத முறைகளையும் [illegible]த்திருக்கின்

பசுக்களினால் மனிதர்க்குண்டாயிருக்கும் பலவேறு
கப்பட்ட பயன்களை இப்புத்தகத்தின் முதற்பிரகரண
ல் சுருக்கமாய்க் குறித்திருக்கிறேன். ஆயினும் அவை
ப்பாக்கிலும் அதிவிசேஷமான இன்னொரு பெரும் பய
ண்டு. அத்தகைய பயனை நமக்குண்டுபண்ணும் பசுக்க
ளுக்கு நாம் எவ்வளவுநன்றி பாராட்டினும் அற்பமாகவே
க்குமென்று நான் சொல்லத் துணியமாட்[illegible]வேன். அப்
ன் அவைகளிடத்துண்டாகும் பால் வெண்ணெய் முத
வைகளிலிருந்தல்ல; அவைகளுக்குக் கா[illegible]க்குரி
தல் அவைகளுடைய மடியீதுண்டாகும் முத்துக்களிலிருந்தே
கப்பட்ட பாலைக் கொண்டு மனிதவகுப்பினருக்கு அம்மை

குத்துவதினாலுண்டாயிருக்கும் பெரும்பயனே யென்பது பலருமறிந்த விஷயமே. முன்னுக்கு அம்மைவராமல் தடுப்பதற்கும் வந்தாலும் இயற்கையாய் வந்துற்றபோதுண்டாகக் கூடிய பிராணாபாயம், அவஸ்தைத், அங்கவீனம் முதலிய கெடூரங்களை யில்லாமற்செய்து காப்பாற்றுவதற்கும் த[illegible]செய்யும் பெருமைபூண்டு விளங்கும் பிரத்தியக்ஷ சஞ்சீவியாகிய இப்பாலை நமக்குப் பசுக்கள் கொடுத்துவருவதைக்கண்டும் கேட்டும் கோஜாதிப் பிராணிகளுக்கு ஜனங்கள் அசட்டையினால் உபசாரக் குறைவுசெய்துபோதருவது எவ்வளவு இரக்கத்தைத் தோன்றச்செய்யு மென்பதைப் புத்திமான்கள் சிந்திக்கவேண்டும்.

இச்சிறிய புத்தகத்தைப் படித்துப் பார்க்கும் விவேகிகளெல்லாம் இதிலுள்ள குற்றங்களை என்மீது அன்புகொண்டு பாராட்டாமல் குணங்களைக் கிரகித்துக்கொள்ளுவதோடு பிறருக்கு மிவ்விஷயத்தில்சொல்லி என்னை ஆதரிக்கவேண்டுமென்று வந்தன பூர்வகமாய் வேண்டிக்கொள்ளும்.

பெங்களூர்,
1890௵ ஆகஸ்டு

சஜ்ஜனவிதேயன்,
கோ. மு. அப்பய்யா.

# அட்டவணை.


க-ம் பாகம். பக்கம்

க. முகவுரை ... ... ... ... க
Introduction ... ... ... ... 1

உ-ம் பாகம்.

உ. இக்காலத்தில் பசுக்களுக்கிருக்கிற உபசாரங்கள் ... ச
The indifferent way in which cattle are taken care of at present ... ... ... 4
ங. இக்காலத்தில் பசுக்களை உபயோகித்துக்கொண்டிருக்கும் வகை ... ... கூ
The way in which cattle are worked at present ... 9
ச. இனிமேல் பசுக்களைக் காக்கவேண்டிய வகை ... கஉ
The right mode of rearing cattle ... 12
ரு. கோசந்ததியை விர்த்திசெய்யும் வகை ... கஎ
Cattle breeding ... ... ... 17
சா. கோஜாதிகளுக்கு வரும் ரோகாதிகள் ... உஉ
Cattle diseases ... ... ... 22
எ. கோஜாதிப்பிராணிகளுக்கு நோயுண்டாவதற்குக் காரணங்கள் ... ... ... உரு
The general causes of cattle diseases ... ... 25
அ. மாடுகளுக்குத் தொற்றுவியாதி வராமல் தடுக்கும் வகை ... ... ... ... உசா
How to prevent the spread of contagious diseases in cattle ... ... ... ... 26

ங-ம் பாகம்.

க. ரோகவிவரணம். தொற்றுவியாதி ... ... ஙo
The definitions and diagnosis of diseases—Contagious Diseases ... ... 30
உ. பெரியதோர்வு - கோமாரி - கொள்ளைநோய் - பிச்சைநோய் - வெக்கை ... ... ... ஙஉ
Rinderpest—Cattle plague ... ... 32
ங. கால்நோய் - வாய்நோய் - வாய்ச்சுரம் - காற்சுரம் - வாய்க்கோமாரி - காற்கோமாரி ... ... ஙசா
Foot and mouth disease; Eczema contagiosa; Aphtha Epizootica; Murrain; Eczema Epizootica. 36

௪. சுவாசாசய நோய் ... ... ... ௩௯
Pleuro-pneumonia; Zimotica Contagiosa; "Lung-disease" ... ... ... ... 39
௫. கருங்கால்-மண்ணீரற்சன்னி, அடைப்பான் காய்ச்சல், அடைப்பான் ... ... ... ௪௧
Black quarter, Splenic Apoplexy, Congestive fever, Anthrax ... ... ... 41
௬. தொண்டை அடைப்பான் அல்லது கொடும்புண்ணுள்ளதொண்டை ... ... ... ௪௩
Malignant Sore-throat, Swollen-throat, Blain, "Hawks," Gloss Anthrax ... ... 43
௭. கழிச்சல் ... ... ... ... ௪௫
Diarrhœa, Looseness of bowels ... ... 45
௮. சீதபேதி, இரத்தபேதி ... ... ... ௪௬
Dysentery, Bloody flux ... ... ... 46
௯. இரத்த மூத்திரம் ... ... ... ௪௭
Red-water, Black-water, or Bloody urine ... 47
௰. இருமல் ... ... ... ... ௪௮
Bronchitis ... ... ... ... 48
௰௧. சுரம்-காய்ச்சல் ... ... ... ௪௯
Fever ... ... ... ... 49
௰௨. வயிற்ற[illegible]சம் ... ... ... ௫௦
Hoven, Tympany, Fogsickness, Dew-blown, "Blown". ... ... ... 50
௰௩. அஜீரணம் ... ... ... ௫௧
Impaction of the rumen, Plenalvia, "Grain-sick," "Mawbound" ... ... ... 51
௰௪. சொறி சிரங்கு ... ... ... ௫௩
Mange, Acariasis ... ... ... 53
௰௫. முறிவு ... ... ... ... ௫௩
Fracture ... ... ... ... 53
௰௬. இல்பிசகுபடல்-பொருத்துப்பெயர்வு ... ௫௪
Dislocation—Luxation ... ... ... 54
௰௭. குடல் வெளிப்படல் ... ... ... ௫௫
Prolapsus of Rectum ... ... ... 55
௰௮. கற்பகோசம் வெளிப்படல் ... ... ௫௬
Prolapsus of Uterus ... ... ... 56
௰௯. பிரசவம்-கன்றுபோடல் ... ... ௫௭
Parturition ... ... ... ... 57
௨௰. கண்ணோய் ... ... ... ... ௫௮
Ophthalmia ... ... ... ... 58
௨௰௧. பால்மடிநோய் ... ... ... ௫௯
Mammitis ... ... ... ... 59
௨௰௨. அவுடத பிரகரணங்கள் ... ... ... ௬௧
Recipes ... ... ... ... 61

# "PREVENTION IS BETTER THAN CURE."

## கோரக்ஷணை.

க-ம் பிரகரணம்.

---

ஞானத்தைக்கைக்கொள்பவராய் முயற்சியுள்ளோராய் நற்பயன்களை அடைய இச்சைகொள்ளும் விவேகிகளான உலகத்தாருக்கு வந்தனபூர்வகமாய்த் தெரியப்படுத்திக்கொள்ளும் விண்ணப்பமாவது :—

கடவுளால் உண்டாக்கப்பட்டிருக்கும் அநேக சிருட்டிகளில் மனிதன் பகுத்தறியும் விவேகம்பெற்றிருப்பதால் சிரேஷ்டன் என்று சொல்லப்படுகிறான். இம்மனிதன் நற்பயன்களை அடைவதற்காக உபகாரப்பிராணிகளையும், தீய பயன்களை அடைவதற்காக அபகாரப்பிராணிகளையும் கடவுள் படைத்திருக்கவேண்டுமென்று சிலர் யூகிப்பார்கள். ஆனால் மொத்தமாய் நோக்கி விசாரிக்குங்காலத்தில் கடவுள் படைப்பெல்லாம் இஷ்டப்பிராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்திற்கும் துணையாகவிருப்பதால் மனிதனது நன்மையின் பொருட்டே உண்டாயிருக்கவேண்டுமென்று பெரியோர்களால் யூகிக்கப்பட்டிருக்கின்றன.

மனிதனுடைய பிரயோசனத்திற்காக சிருட்டிகர்த்தனால் உண்டாக்கப்பட்டிருக்கிற பிராணிகளில் பசுவானது உத்தமபிராணியாயும் மனிதனுக்கு அதிகப் பிரயோசனத்தைத் தருவதாயுமிருக்கின்றது.

மனிதர்களுக்குங் கோஜாதிப்பிராணிகள் பால் தயிர் வெண்ணெய்முதலிய உபயோகமுள்ள வஸ்துக்களைக் கொடுப்பதினாலும், உழுதல் இழுத்தல் சுமத்தல்முதலிய வருத்தமான காரியங்களுக்கு உதவியாயிருப்பதினாலும் அவைகளிடத்து நன்றியறிந்தவர்களாய் அவைகளுக்குப் பதில் உபகாரரூபமாகிய போஷணையைத் தங்கள் பிரயோசனங்களைக்குறித்தாயினும் மனிதர்கள் செய்தேதீரவேண்டியது நியாயமென்று

பூலோகத்தைப்படைத்த கடவுள் ஒருவனிருக்கவேண்டுமென்று சம்மதிக்கும் ஆஸ்திகரும், இல்லையென்று சொல்லும் நாஸ்திகரும் நிராக்ஷேபமாய்ச் சொல்லுவார்கள்.

பூர்வகாலத்தில் பசுக்களுக்கு வீடுகளிலும் புற்புலங்களிலும் ஆகாரங்களைக் குறைவின்றிக்கொடுத்தும், அவைபடுத்துக்கொள்ளும் இடங்களைச் சுத்திசெய்தும், அவைகளுக்குக் குளிர்காற்று முதலியவைகளால் நேரிடக்கூடிய வருத்தங்களுக்கு இடங்கொடுக்காமல் சுகமாகவிருக்கும்படி உபசாரங்களைத் தேடியும், அவைகளுக்கு வந்தணுகும் வியாதிகளைத் தக்க சிகிச்சைமுதலியவைகளால் நீக்கியும் காப்பாற்றிவந்தார்கள். அக்காலத்தில் விவசாயக்காரர்களுடைய வீடுகளிலும் ஏனையோர் வீடுகளிலும் கூடியவரையில் மாடு கன்றுகள் அதிகமாயிருந்த காரணத்தால் அவரவர்களுக்கு வளமான புசிப்பிற்கும், பயிரிடும்வேலைக்கும், தானியமுதலிய பதார்த்தங்களை வண்டிகளால் இழுத்துப்போவதற்கும், பிரயாணம் செய்வதற்கும், சாணம்முதலியவற்றால் எரு முதலியவை ஏற்பாடு செய்துகொள்வதற்கும் அனுகூலமுண்டாயிருந்ததோடு கடைசியாய் அவைகளுடைய தோலினால் செருத்தி பாதரக்ஷைமுதலியவைகளைச் செய்வித்துக்கொள்ளும்படியான அனுகூலத்தையும் பெற்று, கோதனம் என்னும் செல்வச்சகாயத்தினால் தனதானிய சம்பன்னராய் முன்னோர்கள் வாழ்ந்துவந்தார்கள். பிறகு நாள் செல்லச்செல்ல பசுக்களுக்கு உபசாரமும் போஷணையும் குறைவடைந்து இப்போது அவைகளை (பசுக்களை) உபசரிக்கவேண்டுமென்பது மனிதனுக்கு ஓர் "விதி" அல்லவென்னும் அசட்டையில் வந்திருக்கின்றது. இவ்வகையாகவே இனிமேலும் குறைவை அடையுமானால் பலவிதமான தீமைகள் நேரிடுமென்று யூகிக்கவிடந்தருகிறது.

இவ்வகையாயிருப்பதினால் இப்பூலோகத்திலுள்ள மனிதரெல்லாருக்கும் முக்கியமாயிருக்கும் கோரட்சணை விஷயத்தை ஒவ்வொருவரும் தங்கள் கடமையாகவிசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. பசுக்களைக்காப்பாற்றவேண்டிய வகைகளையும், அவைகளுக்கு நேரிடும் நோய்முதலிய வருத்தங்களைநீக்கி அவைகளைப் பாதுகாக்கவேண்டியவழிகளையும் சுருக்கமாயும் தெளிவாயும் அன்னியநாட்டுப்பாஷைகளில் எழுதப்பட்டிருக்கும் சில புத்தகங்களின் உதவி அன்னியருக்கிருப்பதுபோல் இந்துக்களுக்கில்லாதிருப்பது வெகு குறைவாகவிருக்கின்றது. அதி

லும் (கன்னடம் தமிழ் தெலுங்குமுதலிய) திராவிடதேசங்களில் இவர்களுக்கு (இந்துக்களுக்கு) உபயோகமாகும் புத்தகங்கள் பெரும்பாலும் ஏற்படாமலிருப்பது சிந்தனைக்கிடந்தருவதினால் இங்கிலீஷ்முதலிய அன்னியபாஷைகளிலிருக்கும் புத்தகங்களின் உதவியாலும் உலோகானுபவத்தினாலும் வைத்திய சாத்திரப்பயிற்சியாலும் சிகிச்சைமுறைகளினாலும் காட்சிப்பிரமாணத்தினாலும் தெரியும்படியான முக்கியாம்சங்களைச் சுருக்கி பாலபோத உபயுக்தமாய் ஆரம்பத்தில் சக்தியுள்ளவர்கள் சில சிறு புத்தகங்களைக் கன்னடம் தமிழ் தெலுங்குமுதலிய பாஷைகளில் எழுதி வெளிப்படுத்தினால் நன்றாயிருக்குமென்று அநேக புத்திமான்கள் ஆசைகொண்டிருப்பதை அறிந்து இதை யானும் யோசிக்கலானேன்.

உலகத்திற்கு உபகாரமான இந்தக்காரியத்தைத் திருத்தியாகும்படி சரிவரமுடித்து நல்லபிரயோசனத்தை உண்டாக்குவதற்குப் போ[illegible]ன வல்லமை [illegible]க்கில்லாதிருக்கினும் சம்பாதித்திருக்[illegible]கொண்டே கூடியவரைக்கும் குறைவில்லாமல் சாத[illegible]ணமானதொரு சிறிய புத்தகமாயினும் எழுதி மேற்குறித்திருக்கும் கொள்கையை எப்படியேனும் முடிக்கவேண்டுமென்னும் அவா எனக்குண்டாயிற்று.

அதனால் என எண்ணம் பிரயோசனத்தை அடையச் செய்யவேண்டுமென்று கடவுளையும் சத்புருஷர்களாகிய மஹாஜனங்களையும் நன்மனதுடன் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

# ௨-ம் பிரகரணம்.

## இக்காலத்தில் பசுக்களுக்கிருக்கின்ற உபசாரங்கள்.

சில தலைமுறைகளுக்கு முன் என்றால் நமது பெரியோர்கள் காலத்திற்கு இப்பால் பசுக்களுக்கு நேரிட்டிருக்கும் உபசாரம் வெகு குறைவாயும் ஒழுங்கற்றதாயும் எவ்வளவோ குறைவடைந்திருக்கின்றதை இதனடியில் எழுதியிருப்பதினால் தெளிவாக விளங்கும்.

தட்டுதேசத்தின் அநேகவீடுகளில் இப்போது பசுக்களுக்கு நடத்திவரும் உபசாரங்கள் :—

தொழுவத்திற்கு (மாட்டுக்கொட்டாய்) வரப்போகவிருக்கும் வழியில் சுமார் ௯௰ மார்தூரம் வரைக்கும் முழங்கால் பதியும்படியான சேறாயிருக்கும். தொழுவத்தின்பட்டி (எதிர்வாசல்) யில் மாடு கன்றுகளின் கால்கள் முழுமையும் புதையும்படியான சேறாகவேயிருக்கும். தொழுவத்தினுள்ளோவெனின் முழங்கால[illegible]பள்ளமேடுகளினால் வரையில்லாப் பூமியாயிருப்பதேயன்றி மட்டமான சமபூமியாகவிருக்காது. அதில் எவ்வாறு மாடு கன்றுகள் படுத்துச் சுகமாக நித்திரை செய்யக்கூடும். இஃதன்றி நான்குகால்களையும் சரியாகவூன்றி நிற்பதற்கு அனுகூலமானவிடம் கிடையாது. அந்நிலத்தில் முக்கிய நாட்களில் சேர்ந்திருக்கும் மூத்திரம் சாணம் தின்றுமிகுந்த புல்முதலியவையெல்லாம்சேர்ந்து அழுகி எக்காலமும் ஓதமாகவேயிருக்கும். அன்றியும் மாடு கன்றுகள் வெளியில் மழையால் நனைந்துவர, அந்நீர் இவ்விடத்தில் ஒழுகுவதால் முன்னிலும் ஓதம் அதிகமாகும். சிலதொழுவங்களின் மேற்கூரை பழுதடைந்து மழைநீர்ஒழுகி உள்ளே விழுந்துகொண்டிருக்கும். சிலவற்றிற்கு மண்சுவரில்லாமல் உருட்டுமூங்கில்களால் சுற்றிலும் வேலிகட்டப்பட்டிருக்கும். அவைகளின் சந்துகளில் நுழைந்துவரும் குளிர்காற்றுகளினால் பசுக்கள் நடுக்கங்கொண்டிருக்கும். இவ்வகையான தொழுவங்களில் இராக்காலங்கழிக்கும் பசுக்களின் நிலைமையைக் கொஞ்சம் விசாரித்துப் பார்க்கப்புகுந்தால் அதிக மனத்தாங்கலுக்கு இடமுண்டாகிறது. எப்படியெனின் தரையோ சமமாயில்லாமையால் நன்றாக நிற்பதற்கு அனுகூலமில்லை. குழிகளில் நீர் நின்றிருக்கின்றது. மேலிருந்து மழைநீர் ஒழுகிக்கொண்டிருக்கின்றது. வெளியிலிருந்து விபரீதமான குளிர்காற்று வேகமாக

உள்ளே வீசிக்கொண்டிருக்கிறது. இதற்குள் மழையில் நனைந்துவந்த பசு தன் சரீரத்தில் நடுக்கங்கொண்டு நித்திரையினால் பாரமாயிருக்குந் தலையைத் தூக்கி யுறங்கிவீழ்வதோடு அரைக்கண்விட்டுக்கொண்டு அசைபோட அனுகூலமில்லாமல் இரவைக்கழிக்கின்றது.

அவைகளில், நோயினாலாயினும் வயதினாலாயினும் பலம் குறைந்த மாடுகள் அங்கு நிற்கமுடியாமல் அந்நிலத்தின் மேல்படுத்தாலும் அல்லது கால் நழுவி வீழ்ந்தாலும் அக்குழிகளிலேயே சேர்ந்து சிதலமேறி அவ்விடத்திலேயே நெட்டுயிர்த்துக்கொண்டு (பெருமூச்சுவிட்டுக்கொண்டு) சொல்வதற்கு முடியாததுயரத்தை அனுபவிக்கின்றன. சிலமாடுகள் அவ்வேதனை மிகுதியினால் அவ்விடத்திலேயே பிராணனை விடும். உதயகாலத்தில் எட்டுமணிக்கு மாடுகளை மேய்க்கும் சிறுவன்வந்து கதவைத்திறந்து எவ்விதத்தடைகளையும் நோக்காதவனாய்த் தயவின்றி அடித்து மாடுகளை வெளிப்படுத்துகிறான். இராத்திரியில் ஆகாரமும் நித்திரையும் வெகு குறைவானதாலும் அம்மாடுகள் அந்தத்தொழுவத்தின் வாசலிலும் வழியிலுமிருக்கின்ற சேற்றைத் தாண்டிப்போகவேண்டியவையாதலாலும் அதிகக்கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டுவருகின்றன. வெளியே சென்றபின்பு மாடுகள் மேய்வதற்குப் புற்புலங்களில்லை. மேய்ச்சல் கொள்ளவேண்டுமாயின் இரண்டொரு மைல்தூரம் செல்லவேண்டுமேயல்லாமல் தொழுவத்திற்குச் சமீபித்த விடங்களில் புல்லில்லை. ஓரிடத்தில் காப்பித்தோட்டம்; ஓரிடத்தில் வாழைத்தோட்டம். இவ்வாறு எங்குபார்த்தாலும் பிரவேசிக்கக்கூடாத தடைகளாயிருக்கும். மாடு கன்றுகள் மேய்வதற்கென்று கவர்ன்மெண்டிலிருந்து கொடுத்திருக்கப்பட்ட "ஓடை" என்னும் புற்புலத்திலெல்லாம் இக்காலத்தில் காப்பி—கிச்சிலி முதலியவைகளை நட்டுப் பயிர்செய்யும் தோட்டங்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். அன்றியும் கவர்ன்மெண்டார் பசுக்களுக்கு விட்டிருக்கும் "பாலை" என்னும் புல்விளையும் மைதானத்திலும் இக்காலத்தில் காப்பித்தோட்டங்களாயிருப்பதால் பசுக்களுக்கு மேய்வதற்கிடமில்லாமலிருக்கின்றது. ஆனால் காப்பி—கிச்சிலிமுதலியவைகள் விளையாத பாழ்நிலங்களை அற்ப சொற்பமாய் விட்டிருக்கிறார்கள். இவ்விடங்களிலும் லண்டானா வென்னும் முட்செடி விளைந்து ஓங்கி முக்காலே மூன்றுவீசபாகம் ஆக்ரமித்துக்கொண்டிருப்பதால் மிகுந்த வீசபாகத்தில்தான் பசுக்கள் வயிற்றை

நிறைத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. இனிவரும் பத்தெட்டு வருஷங்களுக்குள் இவ்வாறு மிகுந்திருக்கும் எல்லாவிடத்தையும் லண்டானா வென்னும் பேய் ஆக்ரமித்துக் கொள்ளுமென்று யூகிக்கக்கூடியதாயிருக்கின்றது. அதன் பிறகோ பசுக்களை வெளியேவிட்டு மேய்க்கும் யோசனையை நீக்கிப் பட்டினங்களில் காப்பாற்றும்விதம் போன்று வீடுகளிலேயே கட்டிவைத்துக்கொண்டு வளர்க்கவேண்டியதாயிருக்குமென்று தோன்றுகிறது. இவ்வகையான தாழ்ந்த நிலையில் மாடே வருடத்தில் எட்டுமாதம் புல்சம்பாதித்துக் கொண்டு உயிர் வாழவேண்டியதாயிருக்கின்றது.

தைமாதமாகிய ஜனவரிமாதத்தில் பாணைகளின் புல்லெல்லாம் உலர்ந்துபோகும். அதற்குப்பின்பு கொல்லை கழனிகளின் வரப்பின்மேலிருக்கும் புல்லைத்தின்று ஜீவிக்கும். அப்பால் கோடைகாலம்பெருக எல்லாவிடங்களிலுமுள்ள புல்லெல்லாம் உலர்ந்துபோக மாடு கன்றுகளுக்கு மேய்ச்சலில்லாமல் அவைபடும் கஷ்டத்தை இவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆங்காங்குள்ள புதர்களில் நுழைந்து கிடைத்த தழை செத்தைகளைத்தின்று பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும் பிரயத்தனத்தைச் செய்துகொண்டிருக்கும். இவ்வாறு ஆகாரமில்லாமல் தோல் எலும்புகளுக்குள் பிராணன் உலாவிக்கொண்டிருக்கும் காலங்களிலும், மழை விபரீதமாய்ப் பெய்யும் காலங்களிலும், தொழுவத்தில் ஆகார நித்திரைகளில்லாமல் இரவைக்கழிப்பதாலும், பகலில் நித்திராணிசரீரத்தினால் காற்றுமழைகளைத் தடுத்துக்கொண்டு அங்குமிங்குமோடி மேய்ந்து வயிற்றை நிறைத்துக்கொள்ளக்கூடாமல் துற்பல நிலையிலிருக்கும். இக்காலத்திலும் "பெரியநோவு" "கழலை" (தொண்டைகட்டிக்கொள்ளல்) முதலிய நோய்கள்தோன்றி கணக்கிட முடியாத மாடுகளைக்கொன்று நாசப்படுத்தும். மாடுகள் முன்பே பலவீனமடைந்திருக்க இவ்வித மஹாநோய்களுக்குட்பட்டால் அவைகளை மரணத்துக்குத் தப்பச்செய்வது வெகு பிரயாசையாக விருக்கின்றது.

வீட்டின் எசமானன் (தலைவன்) தனது கொல்லை கழனிகளில் விளையும்பயிர் பச்சைகளின் புல்லுகளைப் பதனஞ்செய்து சேர்த்துக் காப்பாற்றிவைத்துக்கொண்டு மாடுகளுக்கு வெளியில் மேய்ச்சல் கிடைக்காதகாலத்தில் இவைகளைக்கொடுத்துக் காப்பாற்றவேண்டியது தருமமாகவிருக்க, அத்தலைவன் விவேகமின்றி பணத்தாசையால் தனக்கு விளைந்தபயிரினாலுண்டாகிய புற்களை விலையாக்கிப் பணத்தைச்

சேர்த்துக்கொள்ளுகிறான். மாடுகளின் நித்திய உபயோகத்திற்கு வேண்டியதைவிட அதிகமாய் விளைந்திருக்குங்காலத்தில் அதிகமாய் விளைந்திருக்குமவற்றை அறுத்து முன்னுக்கென்று சேர்த்துவைப்பதாவது அல்லது சுலப சாதனையால் புற்களை விளைவித்து அவைகளைச் சமயத்திற்கு உபயோகமாகும்படி சேர்த்துவைப்பதாவது செய்யப்பட வேண்டியதா யிருக்கினும் தூரதிருஷ்டி போதாமையால் அவ்வாறு செய்வதில் பிசகிப்போகிறான். முக்கியமாய் தங்கள் மாடுகளுக்கு வேண்டிய ஆகார விஷயத்திலாவது, அவை படுத்துறங்கு மிடத்தைச் சுத்திசெய்து செவ்வையாயிருக்கச்செய்யும் வகையிலாவது தலைவன் கொஞ்சமேனும் யோசிப்பதேயில்லை. "கண்டவிடம் போகட்டும், அகப்பட்டால் மேயட்டும், தீர்ந்தால் படுக்கட்டும்," என்று சொல்லுவானேயன்றி அவைகளுக்குப் போதுமான ஆகாரத்தையும் இதர அநுகூலங்களையும் செய்து கொடுக்கவேண்டியகடமை அப்பசுக்களுக்குத் தலைவனாயும் மனிதனாயு மிருக்கின்ற அவன் தன்கடமையென்று எவனாவேனும் சிந்திப்பதில்லை.

மாடுகளுக்கு நோய்வரின் தகுந்த சிகிச்சைசெய்ய வல்லவர்கள் அதிகக்குறைவாக விருக்கின்றனர். தக்கமருந்துகளையும் முக்கியமாக ஆகாரமுதலிய உபசாரங்களையும் நன்குக அறிந்திருக்கிறவர்கள் கொஞ்சமாகவே யிருப்பார்கள். அவர்களிலும் கொஞ்சம் அறிந்தவரையிலாயினும் சரியாய்ச் செய்பவர்கள் வெகு குறைவாகவே யிருப்பார்கள்.

மாடுகள் நோய்முதலிய வருத்தங்களினால் சாங்காலம் வந்து நெருக்கமான விடத்தில் விழுந்து தலைகீழாகி மூச்சை உட்கொள்ளவும் சுலபமாய் வெளிவிடவும் கூடாமல் வருத்தத்துடன் நோயை அநுபவித்துக் கொண்டிருந்தாலும் அத்தன்மையானவைகளைச் சமமாயிருக்கும் பூமியில் படுக்கச்செய்து அவை ஆயாசமில்லாமல் பிராணனை விடுவதற்காயினும் அநுகூலம்செய்து கொடுப்பதில்லை. இவ்வாறு விழுந்துகிடக்கும் மாடுகளைப்பார்த்துப் பிராணனிருக்கும் போதே காகங்கள்வந்து அவைகளின் கண்களைக்கொத்தி யிழுக்கின்றன. வேதனையால் மாடு கூக்குரலிடுகின்றது. அதற்குள் கழுகு இறங்கிவந்து அதன் தேகத்தின் நானாபாகங்களையும்கொத்தி யிழுக்கின்றது. மாடு மீளவும் முன்னிலும் மிகுதியாகவே கூக்குரலிடுகின்றது. இதற்கு மத்தியில் நாய் நரிகள் வந்துகூடி கண்டகிடைத்த விடங்களிலெல்லாம் கடித்து இழுக்கின்றன. இவ்வளவாயினும் அம்மா...

உயிரிருக்கின்றது. இவ்வாறு கிழக்கிலிருந்து நாயும் மேற்கிலிருந்து நரியும் தெற்கிலிருந்து கழுகும் வடக்கிலிருந்து காகமும் வந்து மாட்டைக்கடித்தும் கொத்தியும் மாமிசத்தைத் துண்டுதுண்டாய்ப் பிடுங்கிக்கொண்டிருக்கும்போது இந்த இம்சைகளைச் சகிக்கமுடியாமல் அப்பசு தனது சங்கடத்தை வெளியிடும் நிமித்தம் சக்தியுள்ளவரையிலும் கோரமான கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றது. அதனைக்கேட்டோர் எப்போதும் மறக்கக்கூடாமல் நினைத்தபோதெல்லாம் ஆ! தெய்வமே! அப்பசுவுக்கு அப்பேர்ப்பட்ட துன்பமுண்டாயிற்றல்லவா? என்று சொல்லிக்கொண்டு நெட்டுயிர்ப்பெறிந்து விசனப்படவேண்டியதாயிருக்கும்.

சுமார் ௨௭, ௨௮ வருஷங்களுக்குமுன் சேற்றின் குழியில் ஒரு கிழஎருமை விழுந்து எழுந்திருக்கக்கூடாமல் மேல் விவரித்தபடி அதற்குப் பிராணஹானி பிராப்தமாய் அது பட்ட கஷ்டத்தைப்பார்த்ததும், அதன் பிராணசங்கடத்தின் கூக்குரலைக்கேட்டதும் எனக்கு நேற்று நடந்ததாய் இன்றும் நினைப்பில் வருகின்றது. அது என்றைக்கும் எனது நினைப்பிலிருந்து புறம்போகாதென்று தோன்றுகின்றது. ஐயோ! மாடுகளை இவ்வாறு பராமரிப்பது அநியாயமல்லவா?

---

## ௩-ம் பிரகரணம்.

---

**இக்காலத்தில் பசுக்களை உபயோகித்துக்கொண்டிருக்கும்வகை.**

பசுக்களை உபசரிக்கும்வகை மேற்கூறியிருக்கிறதல்லவா? தலைவன் அவைகளை உபயோகித்துக்கொண்டு பலன் அடையும்வகையைக் கொஞ்சம் பார்ப்போமா!

பசு கடவுள் கட்டளையால் கன்றைப்பெறுகின்றது. அக்கன்றின் ஆகாரத்திற்கென்றே பசுவின்மடியில் தெய்வசங்கற்பத்தினால் பாலுண்டாயிருக்கின்றது. அக்கன்று தனக்கு ஆகாரமாயிருக்கின்றபாலை வயிறாக்குடிப்பதற்குத் தலைவன் விடுகிறதில்லை. தலைவன் தனது குழந்தைக்கென்றாலோ அதன் தாயினுடையபாலையெல்லாம் குடிக்கவிட்டும் அதுவும் போதாதென்று பசுவினிடமிருந்து கன்றுக்கென்றிருக்கும் பாலை அதற்கில்லாமல் கறந்துகொண்டு குடிப்பிக்கிறான். அவ்வளவேயல்ல. அதிக அற்பமான பாலைக் கன்று குடிக்கட்டுமென்று விட்டு, உடனே அதைப்பிடித்துக் கட்டிப்போட்டுப் பசுவின்கால்களை வலித்துக்கட்டி மிகுந்த பாலையெல்லாம் அவன் கறந்துகொண்டு, தயிர் மோர் வெண்ணெய் முதலியவைகளைச்செய்து அவனும் அவன் குடும்பத்தாருமுண்டு களிப்படைகிறார்கள். கன்றுக்கென்றிருந்த பாலைக் கறந்துகொண்டபிறகு தலைவி கன்றைக் கட்டிப்போட்டு அதற்கு முன்பாக அகப்பட்ட புல் தழைகளைத் தின்பதற்கு எறிவாள். அல்லது "புல்கண்டவிடத்தில் மேய்ந்து நீர்கண்டவிடத்தி[illegible] குடித்துவா போ," என்று கன்றைக் காட்டுக்க[illegible]த்[illegible]வாள். இவ்வாறு துரத்தப்பட்ட கன்று வெய்ய[illegible]ற்கால[illegible] [illegible]ய்ந்து உயிர்வாழ்வதற்குத் தகுந்த புல் [illegible]விகைகள் [illegible]போதுமானவளவாயில் கிடையாமல் வெப்பமான வெய்யிலினால் சோர்ந்து நாள் செல்லச்செல்ல மெலிந்து பசியின் கொடுமையைப் பொறுக்கமுடியாமல் கிடைத்த அசுசியான உணவுகளை மேய்வதாலும் அசுத்த நீரைக்குடிப்பதினாலும் அஜீரணமுதலிய நோய்கள் அதற்கு உண்டாவதற்குக் காரணமாகின்றது. இதனால் இளங்கன்றுகள் அநேகமாக மடிகின்றன. மழைகாலத்திலென்றாலோ குளிர் காற்று மழைகளின் காரணத்தால் சீதளமேறி அநேகமாக மடிந்துபோகின்றன. இவ்வளவு அபாயமான அவஸ்தைகளிலும் தப்பிநின்று கிடைத்த ஆகாரத்தைத்தின்று பிழைத்த கன்றுகளுக்கு நான்குமாத

கள் முளைப்பதற்குள்ளாகவே தலைவன் இதோ! பார்! இவ்வருஷம் உழுதற்றொழிலுக்கு இதுவொரு எருதாயிற்றென்றுசொல்லி அதன் கழுத்தில் நுகத்தடியைவைத்துப் பழக்க ஆரம்பிக்கிறான். பிழைத்திருப்பதற்கு வேண்டிய புல் நீர் வேண்டியகாலத்தில் கிடைக்காமல் எவ்வாறோ வயிற்றை நிரப்பிப் பிராணனைமாத்திரம் காப்பாற்றிக்கொண்டு விலாவெலும்பும் முதுகெலும்புகளும் புறந்தோன்றும் ஸ்திதியிலிருக்கும்படியான அவ்விளைத்தகாளை ஏரை இழுக்கக்கூடாமல் அயர்வாய் நிற்குமாகில் அப்போதே உழவன் கண்டவிடங்களிலெல்லாம் கைகொண்டமட்டும் தாறுமாறாயடிப்பான். காளை முன்செல்லவோ ஏரை இழுக்கமாட்டாது. பின்னடைந்தாலோ அடிவிழுகின்றது. இவ்வாதையைச் சகிக்கமாட்டாமல் வருவதெல்லாம் வரட்டுமென்று நிலத்தின்மேல் விழுந்துவிடும். அப்போதும் அம்மனிதன் முன்னிலும் அதிகமாயடிக்கத் தொடங்குவான். அக்காலத்தில் காளை கூக்குரலிட்டு நீர்ப்பெருக்குக் கண்ணிலெடுக்கக் கண்ணைமூடிக்கொண்டுஉடலையொடுக்கிக்கொள்ளும், அவ்வுழவனோ அவ்வளவிலும் விடாமல் அதன்வாலை முறுக்கி யொடிப்பான். அவ்வேதனையைச் சகியாமல் காளை யெழுந்து சக்தியற்றதாய் மீளவும் விழும். அக்கொடியனோ அதன் வாலைத் தன் பற்களினால் கடிப்பான். ஆசனவழியில் கோலை நுழைப்பான். முட்கோலினாலும் குத்துவான். சாட்டியாலுமடிப்பான். காளை இச்சித்திர இம்சைகளைச் சகிக்காமல் எழுந்து மீளவும்விழும். அவ்வுழவனோ அதன் கண்களுக்குக் "காந்தாரி" மிளகாயையும் மூக்குத்தூளையும் இடுவான். அதினுடைய மூக்கையும் வாயையும் [illegible]பிடித்துக்கொண்டு சுவாசம் விடாதிருக்கச்செய்கிறான். ஆசனத்திற்குக் கொள்ளிக்கட்டையை யூன்றுகிறான். இந்த [illegible]வாதைகளைச் சகிக்காமல் காளையானது எழுந்து பிராணன் போனாலும்போகட்டுமென்று நடக்கத்தொடங்கும். இவ்வாறு இளைத்தகாளைகளையும்எருதுகளையும் கொண்டு காலை ௬ மணிமுதல் பகல் ௰௨ மணிவரையிலும் சில சமயத்தில் ௧ மணிவரையிலும் உழுகின்றார்கள். ஏர்விட்டபின்பு எருதுகளின் சரீரத்தின்மீது ஒட்டிக்கொண்டிருக்கும் புழுதிகளைக்கழுவாமல் துரத்திவிடுகிறார்கள். அவ்வெருதுகள் மேய்ச்சல்கொள்ள வேண்டுமானால் வெகுதூரம் போகவேண்டியவைகளாயிருக்கின்றன. எவ்வளவுதூரம் போனாலும் காப்பித்தோட்டங்களும் மற்றப்பலனைத்தரும் பூமிகளுமாயிருப்பதால் புற்புலங்களில்

லாமல் மேய்வதற்குப் புல் கிடைக்கிறதில்லை. மேய்ச்சலுக்குச் சென்றவிடத்தில் காற்று மழைகள் விபரீதமாய் நேர்ந்தால் இவ்வேழை எருதுசகிக்கமுடியாமல்கிடைக்கும் சொற்பமேய்ச்சலையும்விட்டுக் காற்று மழைகளுக்குத் தப்பித்துக் கொள்ளும்பொருட்டு மரத்தடியிலாவது புதர்களிலாவது மறைந்துநின்று தேகத்தை ஒடுக்கிக்கொண்டு படபட வென்று உதறல்பிடித்துக் கொண்டிருக்கும்போது மேய்ப்பன் கோலை யெடுத்துக்கொண்டுவந்து "அ[illegible] இங்கியா வொளித்துக் கொண்டே. நீ ஒளித்துக்கொண்டா நாளைக்குப் பெரியகழ்ணியை உங்கொப்பன் உழுவானோ? இருட்டாச்சு நடநட," என்று தாறுமாறுயுளறி அடிமேலடிப்படித்து ஓட்டிக்கொண்டு வீட்டிற்குச் செ[illegible]லுவான். இரவில் தொழுவத்திற்குவந்து அங்கு போட்டிருக்கும் ஒரு கற்றைப்புல்லில் கொஞ்சம் தின்று குளிரின் கொடுமையைச் சகிக்கமுடியாமல் நிலம் சமமாகவிருந்தால் அப்புல்லின்மேலேயே படுத்துறங்கிவிழும். இவ்வாறு உழுது வருத்தப்பட்டு மேய்ச்சலும் தூக்கமும் போதாமல் மெலிவடைந்திருக்கும் எருது சில மாதங்களுக்குள்ளாகவே இவ்வுலகத்தைவிட்டு நீங்கவேண்டியதாகிறது.

மாடுகளுக்கு நோய்வந்தபோது இது இவ்வகையான நோய் என்று தெரிந்துகொண்டு அதற்குத்தக்க சிகிச்சை செய்வதற்குத் தலைவனுக்கு வைத்திய சாத்திரம் தெரிந்திருப்பதில்லை. எருது மேய்ச்சல்கொள்ளாதிருப்பதைப்பார்த்துச் சிலர் உடனே அதைக் கீழேதள்ளிச் சூட்டுக்கோலைக் காய்ச்சிச் சூடுபோடுவதுண்டு. இதனால் சாந்தமாகும்வியாதியாயிருந்தால்மாத்திரம் சாந்தமா[illegible]. அல்லாத பக்ஷத்தில் சிக்கித்த[illegible] கால்களை நீட்டிக் கண்களைத் திறந்து வைகுண்டப்ராப்தியாகும். பெரியநோவு வந்தபோது உடைந்துவிடக்கூடும் சட்டியோட்டிற்குச் சுண்ணம்பொட்டிட்டுத் தொழுவத்திலிருத்துவதுமுதலிய பலவிதமான தந்திரங்கள் செய்வார்கள். சில சமயத்தில் "போகிறதெல்லாம் போகட்டும் பிழைத்து வருவதெல்லாம் வரட்டும்" என்று சொல்லி மாடுகளையெல்லாம் காட்டுக்கு ஓட்டிவிடுவதுமுண்டு.

கன்றுபோட்டு முதிர்ந்த பசுக்களுக்கும் உழைக்கும் சக்தியற்ற கிழவெருதுகளுக்கும் தலைவனுடைய உபசாரம் ஒன்றுமிருப்பதில்லை. அன்றியும் இராக்காலத்தில் அவை தொழுவத்திற்குவந்தனவோ? இல்லையோ? என்னும் விசாரணை அவனுக்கிருப்பதேயில்லை. ஆகாயத்தில் இராணப்பருந்

துகள் வட்டமிட்டுக்கொண் டிருப்பதைக்கண்டால் "நமது கபிலையோ காளிங்கனோ எங்கோ செத்திருக்கவேண்டு" மென்று சொல்லுமவர்களுமுண்டு. தலைவனுடைய உபசாரம் இவ்வளவு பராமரிக்கை (அசட்டை)க்கு வந்திருக்கின்றது.

---

## ௬-ம் பிரகரணம்.

---

### இனிமேல் பசுக்களைக் காக்கவேண்டியவகை.

பசுக்களை வைத்துக் காப்பாற்றவேண்டிய யாவரும் அவைகளால் தங்களுக்குண்டாகும் பிரயோசனங்களையெல்லாம் நன்றாய் அறிந்து அவைகள்மூலமாய் அடையவேண்டிய உபகாரங்களைக் காலக்கிரமமாய் அடைவதற்காகத் தக்க நன்றியுடன் அவைகளைச் செவ்வையாய்ப் பாதுகாத்து உபயோகித்துக்கொண்டு வரவேண்டியது. மாடுகள் இராக்காலத்தில் சுகமாக நித்திரைசெய்யும்பொருட்டுத் தொழுவத்தின் நிலத்தை ஈரமும் சீதளமுமில்லாதவகையாய் மூன்று நான்கு அடியுயரத்தில் மட்டமாகச் சமனிட்டுக் கட்டவேண்டியது. சுற்றிலும் சுவர்களும், அவைகளைச்சுற்றிலும் மழையினால் தாழ்வாரத்தினின்றுவிழும் நீர் ஓடிப்போவதற்குக் கால்வாய்களுமிருக்கவேண்டும். அதைச்சூழ்ந்த பூமி உயரமாயும் அங்கிருந்து தொழுவத்தின் நிலத்திற்கு நீரூறிச் சீதளமுண்டுபண்ணுவதாயுமிருக்கப்படாது. அதற்காக அதைச் சுற்றிலும் ஆழமான கால்வாயிருக்கவேண்டும். சுவர் ௰௨ அடியுயரமிருக்கவேண்டும். காற்று மழை குளிர் அதிகமாயிருக்கும் குடகுதேசத்தைப்போன்ற விடங்களில் [illegible] யரத்திற்கு மேலும் மற்ற விடங்களில் மூன்றடியுயரத்திற்கு மேலும் நல்ல காற்றும் வெளிச்சமும் வெளியிலிருந்து உள்ளே வருவதற்காக ஆங்காங்கு சுவரில் பலகணிகளு (ஜன்னல்களு)ம் அவைகளுக்குத்தக்க கதவுகளுமிருக்கவேண்டும். பத்தடியுயரத்திற்குமேல் சுவரினுடைய மேற்பாகத்தில் மாடுகள் உச்சுவாச நிச்சுவாசங்களினால் கெடுக்கப்படும் காற்று வெளியில்போவதற்காக ஆங்காங்கு சிறிய சாளரங்களுமிருக்கவேண்டும். தொழுவத்தின்வாசற்படி விசாலமானதாகவிருக்கவேண்டும். தொழுவத்தின் மேற்புறமெங்கும் ஒழுகாதபடி மூடியிருக்கவேண்டியது. நிலத்தை உறுதிப்படுத்தியிருக்கவேண்டியதுடன் பள்ளமேடுகளில்லாம லிருக்கவே

௧௨ அடி சுவர்
௬௰ அடி வாட்டமான நிலம்
௮ அடி மாடு நிற்கும் சம நிலம்
௧௯ அடி தொட்டி அகலம்



ண்டுமேயல்லாமல் கேவலம் சமமட்டமாகவிருக்கப்படாது. தொழுவத்தின் நீளத்திற்கும் மத்தியில் கொஞ்சம் பள்ளமாகவும் நீளச்சுவரினுடைய பக்கத்தின் நிலம் கொஞ்சமுயரமாகவு மிருக்கவேண்டும். சுவரிலிருந்து ஒரு முழத்தூரம்விட்டுப் பலகைகளினுலாவது மூங்கில்களினுலாவது நீளத்திற்கும் தொட்டியைப்போற்செய்து அதனுள் ஆகாரத்தைப் போட்டு அந்தத்தொட்டிக்கு நேராக எருதின் தலையிருக்கும்படி யொவ்வொன்றையும் வெவ்வேறு கயிற்றினுல் சிறிது சிறிது தூரத்தில் கட்டவேண்டியது. இவ்வாறு செய்வதால் உணவைச்சேதப்படுத்திக் கொள்ளாமல் உண்ணும். அன்றியும் அவற்றின் சிறுநீர் நடுவிலிருக்கும் பள்ளத்தில் பாய்ந்து செல்லும். அவ்வாறு பாய்ந்து செல்லும் சிறுநீர் வெளிப்பட்டுப்போக தொழுவத்தின் குறுக்குச்சுவருக்குக்கீழ் ஓர் வழிசெய்து வெளியில் ஓர் தொட்டிவைத்து அதில் விழச்செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் நிலமும் கெட்டுப்போவதில்லை. சுகமுமதிகமாகும். மாடுகளுக்குக் குளிரினுலும் கொசு ஈ முதலியவைகளாலும் பாதையுண்டாகாதபடி தொழுவத்தின் மூலைகளில் வேண்டிய அளவு உமி செத்தை முதலியவைகளையிட்டுக் கொஞ்சமாய்த் தீமூட்டவேண்டும்.

நாள்தோறும் காலையில் தொழுவத்திலிருக்கும் சாணமுதலிய கூளங்களை யெடுத்துவிட்டுத் தொழுவத்தின் வாசற்படியைத் திறந்துவைக்கவேண்டியது. அதனுல் நல்ல காற்று உள்ளே நுழைந்து நிலத்தை யாற்றுவதோடு மாடுகளின் உச்சுவாச நிச்சுவாசங்களினுலும் மலமூத்திராதிகளாலும் கெடுக்கப்பட்டு அநாரோக்கியத்திற்கிடமாயிருக்கின்ற காற்றையும் புறம்போகச்செய்யும்.

மாலையில் மாடுகள் வருவதற்குமுன்பே அவை சுகமாய்ப் படுத்துறங்க அனுகூலமாய் நன்றாயுலர்ந்த மெதுவான பொடிப்புல்லை நிலத்தில் பரப்பி மேய்ச்சலைத் தொட்டியில் போட்டிருக்கவேண்டும்.

மழைகாலத்தில் மாடுகள் நனைந்து நீர்வடியவந்தால் அவைகளைத்தொழுவத்தின் வாசற்படியின் அருகில் நிற்கச் செய்து நீர் கொஞ்சமும் தேகத்திலில்லாமல் நன்றாய்த்துடைத்து உள்ளே விடவேண்டும். காற்றுமழையால் நனைந்து குளிர்பிடித்துவந்தால் அவைகளைத் தொழுத்தின் வாசற்படியின் புறம்பே நிற்கவைத்து வெந்நீர்வார்த்து உலர்ந்த வஸ்திரத்தினுல் ஈரத்தைத்துடைத்து உள்ளே விடவேண்டும்.

காலை மாலைகளில் மாடுகள் நிற்பதற்காக தொழுவத்திற்

கெதிரில் பட்டியொன்றிருக்கவேண்டியது. அந்த நிலம் நீராவது சேறுவது இல்லாமல் உலர்ந்திருக்கவேண்டும். அவ்விடத்தில் தொட்டிகளைவைத்து அல்லது கட்டி அவைகளில் மாடுகளுக்குக் குடிப்பதற்காக சுத்தமான நீர், கழுநீர்முதலானவைகளை வார்த்துவைத்தல்வேண்டும். மாடுகள் சுகமாக மேய்வதற்குப் புற்புலங்களிருக்கவேண்டும். அவைகளைச் சுற்றிலும் கொடுக்காப்புளி முதலிய முட்செடிகளை நட்டு வேலிவளைத்துக் காப்பாற்றவேண்டும். பத்துப்புற்புலங்களிருந்தால் அவைகளில் மாடுகளை வரிசையாய் மேய்த்துக்கொண்டுபோனால் பத்தாவதில் புல்முடிவாவதற்குள் முதலில் மறுபடியும் புல் விளைந்திருக்கும்.

இப்புற்புலங்களைக் கொஞ்சம் உழுது இலேசாக எருவிட்டு உத்தமசாதிப் புற்களைநட்டு விளைவிப்பது அநேக பிரயோசனங்களைத் தருவதாகும். சில சாதிப்புற்கள் வெகு சீக்கிரத்தில் விளையும். அவ்வகைப் புற்களையே விளைவித்தால் புல் விசேடமாய் விளைந்து பசுக்களுக்கு மேய்ச்சல் திருப்திகரமாயிருக்கும்.

மழைகாலத்தின் முடிவில் மித மீறி விளைந்திருக்கும் புல் தழைமுதலிய ஆகாரவஸ்துக்களை அவை விளையாத கோடைகாலத்தில் பசுக்களுக்கு உபயோகிக்கும் பொருட்டு ஒன்று சேர்த்து வைக்கும்படியான முறையை இதன்கீழ் விவரிக்கின்றேன்.

உயர்ந்த ஓர்பிரதேசத்தில் ஆறடியாழமாயும் வேண்டிய அளவு நீளமும் அகலமாயும் ஓர்குழிவெட்டி அதனுள் மழைநீராலாவது வேறுவகையான எவ்வகைநீராலாவது ஓதங்கொள்ளாமலிருக்க (அந்தச்) சுற்றிலும் நீர்பாய்ந்து செல்லுவதற்கு ஆழமான கால்வாய் வெட்டவேண்டும்.

சேர்த்து வைப்பதற்குரிய புல்-தழை-தண்டுமுதலியவைகளை அவை முதிர்ந்து மழை அல்லது பனியினால் நனைந்து ஈரமாயிருக்கும்போது அறுத்து அந்த ஈரம் ஆறிப்போவதற்கு முன்பேயென்றால் அந்த நிமிஷமே யாவையும் சீராய் அக்குழியில்போட்டு அதன்மேல் பலகைகளையிட்டு மனிதர்களைக்கொண்டு மிதிக்கச்செய்வதோடு பாரமான கல்முதலியவைகளை யேற்றிக் கூடியவரையில் அப்புல், தழைகளைச் செவ்வையாய் அழுத்தி இடையில் சந்துகொடாமல் செய்து அங்கிருக்கும் காற்றையெல்லாம் வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு புல் தழைகளைப்போட்டு அவைகளை அழுத்தி அக்குழியை நிறைப்பதுமன்றி நிலத்தின் மட்டத்திற்குமேல்

ஆறடியுயரம்வரைக்கும் புற்போரிட்டு அதனையும் அழு த்தி அதன்மேல் அக்குழியைத் தோண்டியெடுத்த மண்ணை யெல்லாம் போடவேண்டும். அவ்வாறுபோட்ட மண்ணை அக்குழியின் ஓரத்திற்கு இரண்டு அல்லது மூன்று அடி தூ ரம்வரைக்கும் பரப்பி அந்தமண்ணைக் குழியின் நீளத்திற்கு மத்தியில் உயரமாகவும் பக்கங்களில் வாட்டமாகவு மிருக் கும்படி செய்து மண்ணைமிதித்துத்தட்டிக் கெட்டியாக்க வேண்டும். இவ்வாறு செய்யப்பட்டது ஒருவேளை வெடிக் குமானால் அவ்வெடிப்பில் காற்று நுழையாதபடி மூடிச் சரிப் படுத்தவேண்டும்.

இந்தப்படி வைக்கும் புல் தழைகளின்மீது பாரத்திற் காக நான்கடிகனம் மண்போடவேண்டுமென்பது முக்கிய மாக விருக்கின்றது.

இவ்வாறு சேர்த்துவைத்திருக்கும் ஆகாரவஸ்துக்கள் மூன்றுமாதங்களுக்குள் ஆகாரத்திற்குத் தகுந்தபடி பதப்ப டுகிறதில்லை; மூன்று மாதத்திற்குமேல் ஆறுமாதத்திற்குள் அவை பதப்பட்டு ஆகாரத்திற்கு யோக்கியமாகும். அவ் வாறு பக்குவமான உணவை உபயோகத்திற்கு எடுக்குங் காலத்தில் ஒருபக்கத்திலிருந்து மண்ணையெடுத்து அங்கிருந் தது ஒருநாளைக்குப் போதுமானதை வெட்டி யெடுத்துக் கொண்டு அவ்விடத்தைப்பாய்முதலியவைகளால்மூடிக் காற் றுமழைகளால் மிக்கபாகம் கெட்டுப்போகாதிருக்கும் வகை யாய்க் காப்பாற்றிக்கொண்டு வரவேண்டும். புல், தழைக ளால் இவ்வகைப் பக்குவமடைந்த உணவில் அரையடி கன முள்ள வோர்கட்டி சாதாரணமான ஓர் எருதிற்காவது பசு விற்காவது ஒருதினத்திற்குப் போதுமான ஆகாரமாயிருக் கும்.

ஓர் நடை மாடு ஓர்வருடமெல்லாம் மேய்ந்து ஜீவிப்ப தற்குப் போதுமான புல்விளையும்படியான விடத்தில் விளைந்த புல்லை இவ்வாறு சேர்த்துவைத்தால் ஐந்து நடைமாடுகளை ஒருவருடகாலம் நன்றாய்க் காப்பாற்றலாமென்று அநுபவத் தினால் தெரிந்திருக்கின்றது.

இவ்வாறு சேர்த்துவைப்பதற்குப் பலவிதமான புற்க ளையும் நானாவிதமான தழை தளிர் தண்டுமுதலியவைகளை யும் பசுக்களுக்குத் தக்கவைகளையப் பார்த்து உபயோகிக்க வேண்டும்.

இப்படிச் சேர்த்து வைக்கவேண்டிய புற்களைப் பூவிடுவ தற்குக் கொஞ்சமுன்பே அறுத்து வைக்கவேண்டியது.

அக்டோபர் நவம்பர்மாதங்களாகிய கூதிர்காலத்தில் கழனியின் வரப்புகளில் நன்றாய் விளைந்திருக்கும் புற்களை இவ்வாறு சேர்த்துவைத்திருந்தால் மார்ச்சு ஏப்றல் மேமாதங்களாகிய வேனிற்காலத்தில் மாடுகளுக்கு நல்லஉணவாகும்.

கழனி கொல்லை தோட்டங்களில் விளையும் நெல் கேழ்வரகு சோள முதலிய பயிர் பச்சைகளின் புல்தண்டுகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு புற்புலங்களில் போதுமான மேய்ச்சல் கிடைக்காமலிருக்குங் காலங்களில் மாடுகளுக்குப் போடவேண்டும். தவிட்டையும் துவரை அவரை முதலிய தானியங்களின்பொட்டுகளையும் வைத்துக்கொண்டிருந்தால் காலஸ்திதியைப் அறிந்து மாடுகளுக்குப்போடலாம்.

புற்புலங்களின் சமீபத்தில் நீரோடைகளில்லாதிருந்தால் அனுகூலமான விடங்களில் குளங்களைவெட்டிப் பசுக்கள் குடிப்பதற்குத் தெளிவான நீர்கிடைக்கும்படி செய்திருக்கவேண்டும்.

இவ்வாறு தொழுவத்தையும் அதற்குத்தக்க வாசலையும் உணவையும் நீரையும் அனுகூலப்படுத்திக்கொண்டு மாடுகளைக்காப்பாற்றினால் அவை ௰௫, ௨௰ வருஷம் வரையிலும் பிழைத்திருந்து போஷகனுக்கு அநேக பயன்களை யுண்டா[illegible]கும்.

இவ்வாறு செய்யாது அசட்டையாக விருப்பவர்கள் இப்போதைப்போலவே பிரதி யொருவருஷத்திலும் மைசூர் முதலிய அன்னிய தேசங்களிலிருந்து சந்தைகளுக்கு விற்பனைக்கென்று வரும் இளைத்த எருதுகளையும் எருமைகளையும் அதிகவிலை கொடுத்துவாங்கி விவசாயம்செய்யவேண்டியதாய் நேரிடுகின்றது. பயிர்த்தொழில் முக்கால்பாகம் முடிவதற்குள்ளாகவே இவ்வெருதுகளும் எருமைகளும் பெரும்பாலும் மடிந்துபோவதினால் பயிர்த்தொழில் கெட்டுப்போகின்றது. இப்போது சர்க்காருக்குக்கொடுக்குமொரு வருடத்திய பூமிக்கந்தாயத்தை (தீர்வையை)ப் பார்க்கிலும் அந்த வருஷத்திலேயே மாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய பணமதிகமாயிருக்க[illegible]மென்று தோன்றுகிறது. மாடுகளை நன்றாகக் கா[illegible] காக்காதபோது கொள்ளவேண்டிய வீண் செ[illegible]வுங்கெ முன்னுக்கு விர்த்தியாகும் மாடுகளை விற்பனை செய்துகொண்டு இலாபத்தைச் சம்பாதிக்கக்கூடியதா யிருக்கின்றது.

# ௫-ம் பிரகரணம்.

---

## கோசந்ததியை விர்த்திசெய்யும் வகை.

அப்போதைக்கப்போது நோய்கள் சம்பவித்து வைத்தியர்களைக்கொண்டு உபசரிக்கநேரிடும் பசுக்களை வைத்துக்கொண்டு தனவிரயம் தேகச்சிரமம் முதலியவைகளை அனுபவிப்பதைப்பார்க்கிலும் நோய்நேரிடுவதற்கு அவகாசம் (இடம்) குறைவாயிருக்கும் ஆரோக்கிய சுபாவத்துடன் திடமுள்ள பசுக்களைப் பரீக்ஷித்து அவைகளுடைய இனம் தெரிந்து வாங்கி வைத்துக்கொள்வதே உத்தமமாயிருக்கின்றது.

எப்பிராணி, பிறக்குங்காலத்தில் தன்தேகத்தின் நானாவிதமான அவயவங்களில் யாதொரு குற்றமின்றியிருக்கிறதோ அப்பிராணியின் தேகம் சாதாரணமான காரணத்தினால் நோய்களுக்கு இடங்கொடாமலிருக்கும்.

“ஆத்மாவைபுத்ர நாமாஸி” (தந்தையைப்போல் மகன்) “யாதாபீஜம் ததாங்குரம்” (வித்தைப்போல்முளையும்) என்னும் அறிவை விளக்கத்தக்க வாய்ப்பாடுகள் சாஸ்திரங்களில் கூறியிருக்கினும் அவற்றை அனுபவத்திற்குக் கொண்டுவருபவர் சிலரேயாகும்.

நோய்களுக்கிடமில்லாத ஆரோக்கிய சுபாவதேகம்பெற்றுள்ள கன்றுகள், அவ்வகையான இயற்கையுள்ள தாய்தந்தைகளால் பிறந்திருக்கவேண்டியதென்பது சாதாரணமாய் உலகத்தில் எல்லாரும் அறிந்த விஷயமாயிருக்கின்றது.

அறிவும் அனுபவமுமுள்ள விவசாயக்காரர்கள் தங்களுக்குவேண்டிய விளைமுதலை விளைவிப்பதற்கு உத்தமமான கழனிகளை வைத்துக்கொண்டு அவைகளுக்கு நல்ல எருவைப் போதுமானவரையில்விட்டு உத்தமவழியால் விவசாயம்செய்து பயிரைத்தக்கவாறு காத்து நன்றாய் விளைந்தபிறகு அவைகளுள் உத்தமமான கதிர்களை ஆராய்ந்து அவற்றிலும் தேர்ந்த தானியமணிகளைச்சேர்த்து பதமறிந்துலர்த்தி முன்னுக்கு விதைப்பதற்கென்று செவ்வையாய மூ[illegible]டை[illegible]ளாய்க்கட்டிப் பாதுகாத்துச் சமயம்வந்தபோது பூமி[illegible]அவ்விதைகளை விதைத்து மீளவும் பயிர்செய்துகொண்டு தங்கள் தானியமேம்பாட்டை அபிவிர்த்திக்குக் கொண்டுவருவதைப் போன்றே தங்கள் விவசாயத்திற்கும் வேறு அநேகவிதமான உபயோகத்திற்கும் அதிகப் பிரயோசனகரமான கோசாதிப்

பிராணிகளின் ஆரோக்கியம்-ஆயுள்-அபிவிர்த்தி முதலியவை
செய்யவேண்டியது முக்கியமல்லவா? இதை மறந்திருப்பது
அல்லது அசட்டையினால் விட்டிருப்பது தங்கள் யோக
க்ஷேமத்திற்கே அதிகத் தீங்கையுண்டாக்குமென்பதனைத்
தாங்களே அறியாதவர்களாயிருக்கின்றார்கள்.

இச்சிறிய புஸ்தகத்தைப் படிக்கும் விவேகிகளெல்லாம்
இனிமேலாயினும் இவ்விஷயத்தைக் கிரகித்துக்கொண்டு
சாஸ்திரங்களை அநுசரித்துப் பெரியோர்களால் சொல்லப்
பட்ட உண்மையை முக்கியமாய்க்கைக்கொண்டு கோஜாதிப்
பிராணிகளை மேனிலைக்குக் கொண்டுவந்து, அவைகளால்
மனிதர்களுக்காக வேண்டிய சகல நன்மைகளையுமடைந்து
சுகித்திருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

பசுக்களை இப்போது அவைகளிருக்கும் தாழ்ந்த நிலை
யிலிருந்து மேனிலைக்குக் கொண்டுவரவேண்டுமானால் மேலு
ரைத்திருக்கும் "தந்தையைப்போல் மகன்" என்னும் பிர
மாணத்தை அநுசரித்து உத்தமஜாதியாயும் உத்தமதேககு
ணங்கள்பொருந்தியதாயும் யௌவனமடைந்திருக்கும் (மூன்
றுவருஷம்பூர்த்தியான) காளைகளையும், அவ்வகையான பசுக்
களையும் தெரிந்தெடுத்து மேற்கூறியவகைக்குச் சரியாய்க்
காப்பாற்றி அவைகளைக்கொண்டு கோசந்ததிகளை உண்டாக்கி
விர்த்திசெய்துவந்தால் அப்பிராணிகளைக் குணவிசேஷத்து
டன் சிலகாலத்திற்குள் மேனிலைக்குக் கொண்டுவரக்கூடும்.

சந்ததியில் நேரிட்டுவரும் வியாதிகளின் பரமாணுக்கிரு
மிகள் (வியாதி வித்துக்கள்) சுக்கில சோணிதங்களில் பரவி மக்
கள் தேகங்களுக்குள்புகுந்து நாளடைவில் வளர்ந்து அந்
நோயைக்காட்டும். ஆகையால் இப்பேர்ப்பட்ட சந்ததிநோ
ய்க்குறிப்புகளும் தேகத்தில் குற்றங்குறைகளுமில்லாத திட
மும் ஆரோக்கியசுபாவமும் பெற்றிருக்கும் உத்தமபசுக்களை
யும் காளைகளையும் தெரிந்தெடுத்துக்கொண்டு அவைகளால்
கிரமமாக சந்ததிகளை யுண்டாக்கி விர்த்திசெய்து காலக்கிர
மத்தில் உத்தேசித்தவண்ணம் நல்ல நிலைக்குக்கொண்டுவரக்
கூடும்.

[illegible] எருதுகள் கொல்லை கழனிகளை உழுவதற்
கும், தானியமுதலியவற்றைச் சுமப்பதற்கும், செக்குமுத
லிய யந்திரங்களுக்குக் கட்டுவதற்கும், வண்டிகளில் நிறை
த்த பாரத்தை இழுப்பதற்கும், பிரயாணிகளின் வண்டிகளை
இழுத்துக்கொண்டோடுவதற்கும், மீதேறிச்செல்பவர்களைச்

சுமந்துபோவதற்கும் நமக்கு உபயோகமாகிறதினால் அவ்வவ் வேலைகளின் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு நெடுங்காலம் சிராகவாழ்வதற்குத் தேகத்திடகுணவிசேஷங்களுள்ள உத்தமஜாதிக் கூளிகளினால் அவைகளுக்குத்தக்க உத்தமஜாதிப்பசுக்களில் சந்ததியை உண்டாக்கி விர்த்திக்குச் கொண்டுவரவேண்டும். வித்தும் நிலமும் மேன்மையுள்ளனவாகவிருந்தாலன்றி நல்லபலன் உண்டாகாது. ஆதலால் உத்தமமான கூளிகள் அவைகளுக்கேற்ற பசுக்களுடன் கூடினால் நல்ல கன்றுகள் உண்டாகுமென்பது நியாயமறிந்தவர்களுக்கெல்லாம் தெரியாததல்ல. ஆனால் கன்றிலிருக்கும் (காளையின்) புருஷாம்சம்யாது? (பசுவின்) பெண்ணம்சம் யாது? என்னும் விசாரணைமாத்திரம் அநேகருக்குச் சூனியமாயிருக்கின்றது.

இவ்விஷயத்தில் சாஸ்திரமறிந்தவர்கள் விவேகானுபவத்தினால் கண்டு வெளியிட்டிருக்கும் பிரமாணங்களை அடியில் குறிப்பிடுகிறேன் :—

(க) வெவ்வேறு சாதியான நாற்காலுயிர்களின் புணர்ச்சியாலுண்டாகும் கன்றினுடைய தேகரசனை, தேகத்தோற்றம், கால் தலை கொம்புமுதலிய புற அவயவங்கள், எலும்பு, சதை இவையெல்லாம் தந்தையின்கூறென்றும், உள் அவயவங்களும், குணவியற்கையும் தாயின் கூறென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது.

(உ) ஓரேசாதியான் நாற்காலுயிர்களின் புணர்ச்சியாலுண்டாகும் கன்றின்கூறுகள் அதன் தாயதந்தைகளின் வயது, தேகத்திடம்-வீரியம்-சந்ததிகுணங்கள் முதலானவைகளை அனுசரித்துநிற்கும். அப்படியாயினும் அனுபவசித்[illegible]த்தின்படி அதனுடைய தேகரசனை தேகத்[illegible]றம், தேகத்திடம் முதலியவைகளும், புற அவயவங்களும் தந்தையின்கூறென்றும், அக்குணவியற்கையெல்லாம் தாயின் கூறென்றும் தெரியவருகின்றபடியால், அதற்குத்தக்கதாய்த் தந்தைகளை அனுசரித்து அவைகளைக்கொண்டு சந்ததியையுண்டாக்க[illegible]வேண்டும்.

இவ்வாறு ஆராய்ந்தெடுத்த சந்ததிகளில் உத்தமமான காளைகளையும் பசுக்களையும் சேரச்செய்து சந்ததிகளையுண்

டாக்கி அவைகளால் உண்டாகும் நல்ல கன்றுகளைப் பீஜந்துடன் வளர்த்து இவைகளைக்கொண்டு கோசந்ததிகளை விர்த்திசெய்யவேண்டும்.

இவ்வாறே ஒவ்வொரு சந்ததியிலும் நல்ல கன்றுகளைப் பொறுக்கியெடுத்துக்கொண்டு கோசந்ததிகளை யுண்டுபண்ணவேண்டியது.

சந்ததி விர்த்தியின்பொருட்டான கூளிகளைமாத்திரம் விட்டுவிட்டு மற்றவற்றின் பீஜங்களைத் தகுந்தவாறு உடைத்துக் காம்க்கொழுப்பில்லாமல் பூரணமாக நாசப்படுத்தவேண்டும். கன்றுகளுக்கு ஆறு மாதமாவதற்குள் பீஜங்களை உடைத்து நாசப்படுத்தவேண்டும். பசுக்களையும் எருதுகளையும் ஒரேயிடத்தில் சேர்த்துவைக்கலாகாது. வெவ்வேறு மந்தைகளாக வெவ்வேறு மேய்ச்சலிடங்களில் மேய்த்துப் பிரத்தியேகமான தொழுவங்களில் கட்டிவரவேண்டும்.

பெண்கன்றுகள் வளர்ந்து நான்கு வருஷம் நிறைந்து தேகத்திடம்பெற்று கன்றைப்பெறும்படியான காலம்வந்தபோது அவற்றின் காமக்களிப்பின் குறிகளைக்கண்டு அவைகளைக் காளையுடன் இரண்டொருநாள்மாத்திரம் விட்டுப் பிறகு வேறுபடுத்தவேண்டும்.

சந்ததிவிர்த்திக்கென்று வைத்துக்கொண்டிருக்கும் காளையை நல்ல ஆகார உபசரிப்புகளினால் எப்போதும் சுகமாக வைத்திருந்து பசுக்கள் கருப்பந்தரிக்கும் (சினையாகும்) காலம்வந்தபோது நான்கைந்து தினங்களுக்கொருதடவை அதை யொவ்வொரு பசுவுடன் இரண்டொருநாள் விட்டிருந்து பிறகு நான்கைந்துநாள் பசுக்களோடு சேரச்செய்யாமல் அதன் பலபுஷ்டியைக் காப்பாற்றவேண்டும்.

பசு, காளையைச்சேர்ந்த பத்தாமாதத்தில் அல்லது உஅடு நாட்களில் கன்றைப்பெறும் காரணத்தினால், எந்தக் காலத்தில் பசு கன்றைப்பெற்றால் அக்கன்றுக்குக் குளிர் காற்று மழை முதலியவைகளினால் ரோகமும் வாதையும் வெய்யிலின் உஷ்ணமும் ஆயாசமுமில்லாமல் வளர்வதற்கு அனுகூலமுமாயிருக்குமோ அந்தக்காலத்தை எதிர்நோக்கி அதற்குப் பத்துமாதங்களுக்குமுந்திக் காளையையும் பசுவையும் சேரச்செய்யவேண்டியது.

அக்டோபர்மீ டு௳யில் பசு கன்றைப்பெறவேண்டுமென்று நாம் எண்ணங்கொண்டால் ஜனவரிமீ சு௳யில் பசுவையும் காளையையும் ஒன்று சேரச்செய்யவேண்டியது.

ஒவ்வொரு தொழிலுக்கு ஒவ்வொருசாதி மாடு அமைந்திருப்பதால் அதைத்தெரிந்தெடுத்து அந்தந்தசாதி மாடுகளைக்கொண்டு அவ்வச்சந்ததிகளைப் பெருகச்செய்து அந்தந்தத் தொழில்களுக்கு உபயோகித்துக்கொள்வது அதிக நன்மையைத் தரும். இவ்வாறு நானாவிதப் பிரயோசனங்களைக் கொண்டிருக்கும் பலசாதிகளில் இக்காலத்தில் பேர்போயிருக்கும் (பேர்பெற்றிருக்கும்) சில்சாதியின்பெயரைத் தெரிந்தவரையில் இதன்கீழ்ச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

## மைசூர்தேசத்தில்.

### I. அமிர்தமாஹால் மாடு.

இதில்,

(1) ஹள்ளிக்கார மாடு.
(2) ஹாக்ல்வாடி மாடு.
(3) சித்திரதுர்க்க மாடு.
(4) ஹொரகை மாடு.

## சென்னையைச்சேர்ந்த ஜில்லாக்களில்.

(1) நெல்லூர் ஜில்லாவைச்சேர்ந்த ஓங்கோல் கூடலூர் தாலூக்காக்களில் கிடைக்கும் நெல்லூர் மாடு.

(2) புங்கனூர் மாடு.

(3) மஹாதேஸ்வரக்குன்றின் மாடு. இதில் பிளிகிரிரங்கனப்பெட்டா மாடு.

(4) பாகூர் மாடு.

## அரேபியாதேசத்தில்.

### (1) எடன் மாடு.

மேற்சொல்லியவைகளில் ஹள்ளிக்காரமாடுகளே, பாரமேற்றியவண்டிகளையும் பிரயாணவண்டிகளையும் இழுத்துக்கொண்டு வேகமாயோடுவதற்கும் உழுவதற்கும் நல்லசாதியெனப்பெயர்கொண்டவை. ஹொரகைமாடுகள் பிரயாண வண்டிமுதலியவைகளை இழுத்துக்கொண்டு மிகுந்தவேகத்துடன் ஓடத்தகுந்தவையென்று கீர்த்தியடைந்தவை. நெல்லூர் பசுக்கள் சாந்தமுடையவையென்றும் மிகுந்த எல்லாஜாதிப் பசுக்களைப்பார்க்கிலும் அதிகப் பால் கொடுப்பவையென்றும் புகழ்பெற்றன. புங்கனூர் பசுக்கள் அதிகப்பால்கொடுப்பதில் பேர்பெற்றவை. எடன் எருதுகள் சாதுக்களென்றும் உழுவதற்குத் தகுந்தவையென்றும் எண்ணப்பட்டவை.

## ௩-ம் பிரகரணம்.

---

### கோஜாதிகளுக்த வரும் ரோகாதிகள்.

ஒவ்வொரு பிராணிக்கும் அதனதன் ஆகாரநித்திரை போகசாதனங்களைச் சம்பாதித்துக்கொண்டு உண்டு உறங்கி சுகித்திருப்பது தேகத்தின் நித்திய தொழிலென்னப்படும். இந்த நித்தியதொழிலில் ஏதாவதொன்றை யெந்தப்பிராணிக்கு எக்காலத்தில் செய்யக்கூடாமையாகின்றதோ அக்காலத்தில் அப்பிராணி "அசௌக்கியம்" அல்லது "நொம்பளமுள்ளது," ஆயிருக்கின்றதென்று தெரிந்துகொள்ளவேண்டியது. அப்பிராணியின் எவ்வவயவம் தனது இயற்கையான வேலையைச் செய்யக்கூடாமையாகவிருக்கின்றதோ அவ்வவயவம் நோய்கொண்டிருக்கின்றதென்று சொல்லப்படும். நடக்கமுடியாத காலும், பேசமுடியாத வாயும், வேலைக்குதவாதகையும், நோக்கக்கூடாதகண்ணும் நோயினால் பிடிக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளவேண்டும். கை வேலைசெய்துகொண்டும் கால் நடந்துகொண்டும் கண் பார்த்துக்கொண்டும் வாய் பேசிக்கொண்டும் இருக்க, கை கால் கண் வாய் இவை தனக்குண்டென்று எந்தப்பிராணிக்குத் தோற்றுமலிருக்கின்றதோ அந்தப்பிராணி தனது அவயவங்கள் சுகமாயிருக்கின்றனவென்று நம்பிக்கைகொண்டிருக்கவேண்டியது. வேண்டுமென்று கிரகித்துத் தான் பார்க்காமலிருந்தாலும் தனக்குக் கண்ணிருக்கிறதாகவும் காலிருக்கிறதாகவும் இவ்வாறு எந்தப்பிராணியின் மனதிற்குத்தானாகவே தோன்றிக்கொண்டிருக்குமோ அந்தப்பிராணி தனது கண் கால்கள் சுகமாயில்லையென்று தெரிந்துகொள்ளவேண்டியது.

ஒவ்வொரு அவயவத்தின் இயற்கையானவேலையில் எப்போது ஏற்றத்தாழ்வாகுமோ அப்போது அந்த அவயவத்தின் நிலைபேதப்பட்டிருக்கின்றதென்று பாவிக்கவேண்டியது. புசித்த அன்னம் வாந்தியானால் அப்போது அன்னகோசத்தின் நிலைகெட்டிருக்கிறதென்றும், பேதியானால் குடலின் நிலை கெட்டிருக்கிறதென்றும், இரவில் படுத்தபோது நித்திரை வாராதிருக்கின் மூளையின் நிலை கெட்டிருக்கிறதென்றும், சுகந்தவஸ்துக்களின் பரிமளம் தெரியாமலிருக்கின் கிராணேந்திரியத்தின் (மூக்கின்) நிலை கெட்டிருக்கிறதென்றும் தெரிந்துகொள்ள வேண்டும்.

தேகத்தின் சுபாவநிலை கெட்டு வித்தியாசப்பட்டிருக்கும் நிலையுண்டானால் அது "அசௌக்கியம்," "ஆலசியம்" "அனாரோக்கியம்," "ரோகம்" என்று இத்யாதிபேர்களால் அழைக்கப்படும். இவ்வகையான ரோகங்கள் பேசத்தெரிந்த மனிதர்களுக்கு வந்தால் தங்கள் தேகத்தில் உண்டான பேதங்களையும் அவற்றினிடங்களையும் அவைகளாலுண்டாயிருக்கும் வேதனைகளையும் அன்னியருக்குக்காட்டுவதற்கும் விவரிப்பதற்கும் வல்லவராயிருப்பார்கள். பேசத்தெரியாத குழந்தைகளும், ஊமைகளும், பிரக்ஞையற்றோர்களும், மதிமயக்கங்கொண்டோர்களுமாகிய இவர்கள் தங்கள் தேகநிலைகளை அவ்வாறு பிறருக்குச்சொல்லச் சக்தியற்றவர்களாயிருக்கின்றார்கள். மாடுகன்றுகள்முதலிய பசுப்பிராணிகள் தங்கள் மனோபாவங்களைச் சுசாதி (ஒரேசாதி) யில் ஒன்றுக்கொன்று தெரிவிக்கும்படியான குறிகளிருப்பதாய் நமக்குத்தெரியவருகின்றமையால் நம்மைப்போலவே அவைகளுக்குமிருக்கக்கூடிய பாஷைகளைப் புத்தி அதிகரித்திருக்கும் மனிதர்களுக்குள் இதுவரையிலும் எவரும் கற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் அப்பிராணிகளுக்கு நோய்கள் உண்டானகாலத்தில் அப்பலவிதமான நோய்களினால் உண்டாகும் பலவகையான குறிகளைக்கொண்டு இன்னின்னகுறிகளிருந்தால் இன்னின்ன நோய்களேயாகுமென்று சூட்சுமநோக்கினாலும் விவேகத்தினாலும் யூகித்து அநுபவதிருஷ்டாந்தங்களினால் திடப்படுத்தவேண்டியது. இவ்வாறு திடப்படுத்திய வியாதிகளில் இன்னவியாதிக்கு இன்னமருந்தென்று அநுபவநிதரிசனங்களால் தெரிந்து வந்திருக்கும் சிகிச்சைகளைச் செய்து வியாதியைப் போக்கவேண்டும்.

நோயின்குறிகள் சாதாரணமாய் நோயுண்டான அவயவங்களின் இயற்கையான செயல்களை அனுசரித்தே அவைகளில் ஏறக்குறைய விபரீத நடக்கையைப் பெற்றிருக்கும். சுவாசகோசத்திற்கு நோயுண்டானபோது சுவாசம் அதிகரிக்கும். உச்சுவாச நிச்சுவாசக் கிரியைகளில் பிரயாசையிருக்கும். குடல்களுக்கு நோய்வந்தபோது மலத்தில் வித்தியாசம்தோன்றும். காலுக்கு நோய்வந்தபோது நொண்டி நடக்கும். ஆதலால் இப்பேர்ப்பட்ட குறிகளைக்கண்டு நோய்களையும் அவைகளின் தானங்களை (இடங்களை) யும் அறிந்துகொள்ளவேண்டும். சாதாரணமாய் முகம் கண் மூக்கு நாக்கு மலம் மூத்திரம் சரீரம் ரோமம் கொம்பு காது சேஷ்டை இவைகளைப்பார்த்துச் சுபாவமான ஆரோக்கிய நிலையை

யும், ரோகத்தினாலுண்டாயிருக்கும் அநாரோக்கிய நிலையையும் ஒத்திட்டு அவைகளின் தாரதம்மியங்களைப் பகுத்து ரோகத்தின் உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டியது.

முகம்:—களைகுறைந்து தலைதொங்கி அரைக்கண்விட்டுச் செவி மடங்கித் தேகத்திலிருக்கும் அதிக ஆயாசத்தைக்காட்டும். அல்லது தலை நிமிர்ந்து சிவப்பானகண்களை வெறித்து விழித்துச் செவி நெட்டையாய் நீண்டு நாசித்துவாரங்கள் பெருகி மூளையில் ரோகமுண்டாயிருக்கிறதென்று குறிப்பிக்கும்.

கண்கள் :—இரத்தம் நிறைந்து சிவப்புநிறமாயும் பித்தமேறி மஞ்சள் நிறமாயும் நீர்வடிந்துகொண்டுமிருந்தால் தலைக்குள்ளிருக்கும் ரோகங்களையும் காமாலை வியாதியையும் நேத்திரவியாதிகளையும் காட்டும்.

மூக்கு :—உட்பாகம் சிவப்பாயும் சூடாயும் நீர்வடிந்துகொண்டு சிறிய கொப்புளங்களெழும்பி மூச்செறியும்போது துவாரங்கள் பெருகி சுவாசகோசத்தின் ரோகங்களைத் தெரியப்படுத்தும்.

வாய் :—உட்புறம் சிவப்பாயும் சூடாயும் உமிழ்நீர்வடிந்துகொண்டும் சிறிய கொப்புளங்களும் புண்களுமுண்டாய் நாக்கும் தடிப்பாய் அன்னகோசத்தின் வியாதிகளை வெளிப்படுத்தும்.

மலம் :—தெளிவாயும் துர்க்கந்தமாயும் இரத்தங்கலந்தும் இருந்துகொண்டு குடல்களின் வியாதிகளைத் தோன்றச் செய்யும்.

மூத்திரம் :—சிவப்பாயும் மஞ்சள்நிறமாயும் கொஞ்சம் அல்லது மிகுதியாயுமிருந்துகொண்டு இரத்தம் கலந்திருக்குமாயின் காய்ச்சலையும் காமாலையையும் மூத்திரக்காய்கள் மூத்திரப்பை மூத்திரத்துவாரம் இவைகளின் ரோகங்களையுமுணர்த்தும்.

சரீரம் :—இளைத்தும் வீங்கியும் கட்டிகள் கட்டிக்கொண்டும் மஞ்சள்நிறமாயும் துர்நாற்றம் வீசியும், தோல் கொம்பு மூக்கு வாய் இவைகள் சூடாயும் மயிர் சிலிர்சிலிர்த்து வயிறுப்பி செவி வளைந்து அசைத்துக்கொண்டுமிருந்தால் காய்ச்சல் காமாலைமுதலிய பல ரோகங்களையுமறிவிக்கும்.

சேஷ்டைகள் :—அந்தஅந்த இடங்களின் தொழில்களை அனுசரித்திருக்கும். பசு, தன்னுடையதேகத்தில் ஓரிடத்

தையே நக்கிக்கொண்டிருத்தல், ஒரு இடத்தையே தேய்த்துக்கொண்டிருத்தல், தேகபளுவை ஒரேபக்கத்தில் சாய்த்துநிற்றல், நொண்டல், கால்களை யிழுத்துக்கொண்டு நடத்தல், நடையும் பந்தித்ததுபோல தம்பித்திருத்தல், நடுக்கலெடுத்தல், நிலத்தைக் காலினால் கீறுதல், நிற்காமலோடியாடல், நின்றவிடத்திலிருந்தே சுழன்றுதிரிதல், ஒவ்வொரு நிமிஷத்திலும் படுத்துப் படுத்தெழுந்திருத்தல், கண்களில் நீர்பெருகி கூச்சலிட்டுப் பரிதபித்தல், க்ஷணத்திற்கு க்ஷணம் வாயைத்திறத்தல், பல்கிட்டிக்கொள்ளல், தலையும் செவியும் தொங்கிப் போதல், இருமல், மூச்சைக்கட்டிக் கட்டிவிடுதல், அசைபோடும்போது உமிழ்தல், மேய்ச்சல் கொள்ளாதிருத்தல், கண்களை மூடாமலிருத்தல், அல்லது பிரதி நிமிஷத்திலும் (அடிக்கடி) மூடிமூடித்திறத்தல், ரோமங்கள் சிலிர்த்தும் முதுகையொடுக்கிச் சுருக்கிக்கொண்டும் நிற்றல், முக்கிக்கொண்டிருத்தல், மனிதர்களைப் பாயப்போதல் கறக்கும் பசுக்களாயின் பால் குறைந்து போதல் முதலியனவாம்.

---

## எ-ம் பிரகரணம்.

---

### கோஜாதிப்பிராணிகளுக்கு நோயுண்டாவதற்குக் காரணங்கள்.

ஆகாரத்தை மிதமீறி யல்லது மிதங்குறைந்து உண்பதினாலும், மிகவும் இளைய அல்லது மக்கியழுகிய புல்தழைகளை உண்பதினாலும், விஷமூலிகைகளையும் மண்முதலிய அஜீரண பதார்த்தங்களையும் உண்பதினாலும் பேதியும் இரத்தபேதியுமுண்டாகும். இவை காரணமாகக் காய்ச்சல் முதலிய வியாதிகள் நேரிடும்.

குடிப்பதற்குச் சுத்தமான நீர் கிடையாமல் கண்டவிடத்திலுள்ள கலங்கல் அசுசியான நீரையும், தொற்றுவியாதிகளின் விஷங்களும் மூலிகாதிகளின் விஷங்களும் கலந்திருக்கும் நீரையும் குடிப்பதினால் குடல்வியாதிகளும் தொற்றுவியாதிகளும் சம்பவிக்கும்.

நித்திரை செய்வதற்குக் குளிர்காற்று மழை முதலியவைகளின் பாதைகளில்லாதபடி தொழுவத்தில் வசதியற்றிருப்

யதைப்பற்றி மாடுகள் இரவில் நித்திரை செய்யக்கூடாமையாயிருப்பதினால் சரீரம் மெலிவடைந்து நானாவிதமான நோய்களுக்கு இடமாகிறது.

வேலை:—தேகம் பொறுக்கக்கூடாத அவ்வளவு வருத்தத்தைத் தரும் பலமான வேலையைச்செய்வதினால் இளைத்து அற்பநிமித்தங்களினாலேயே பலவிதமான ரோகங்களுக்கிடங்கொடுக்கும். இவ்வாறு மெலிவுற்றமாடுகளுக்குப் பெரியநோவுமுதலிய நோய்கள் நேரிட்டால் அவை பிழைப்பது அருமையாயிருக்கும்.

குளிர், மழை:— இவைகளின் காரணத்தால் துர்ப்பலஸ்திதிக்கு வந்திருக்கும் மாடுகளுக்கு இருமல்முதலிய சுவாசகோசத்தின் வியாதிகள் தோன்றும்.

வெய்யில் அதிகமாயிருந்தால் அவ்வெப்பமிகுதியால் தேகத்தில் மிகவும் பலம் குறைந்து காய்ச்சல்—பேதி—இரத்தபேதி—மூளைரோகம் முதலியவை சம்பவிக்கும்.

பெரியநோவு (கோமாரி) கால்வியாதி முதலிய தொற்றுவியாதிகளின் விஷங்கள் படுவதினால் அந்த அந்தத் தொற்றுவியாதிகள் நேரிடுகின்றன.

வீழ்தல் அடிதாக்கல்முதலிய கொடியசெயல்களால் மாடுகளுக்கு அபாயங்கள் நேரிட்டு எலும்புகள் கொம்புகள் முதலானவை முறிந்துபோம். சரீரத்தில் காயங்களாகும். கைகால்களின் பொருத்துகள் (கீல்கள்—மூட்டுகள்) பிசகிப்போம். இவைகளால் அசௌக்கியம் காணும்.

பாம்பு முதலிய விஷஜெந்துக்கள் கடிப்பதினாலும், துப்பாக்கியின் குண்டுபடுவதினாலும், இவைபோன்ற நானாவகையரான அகஸ்மாத்தான உபத்திரவங்களால் மாடுகள் சுகக்கேடுறவழியாம்.

---

## ௮-ம் பிரகரணம்.

---

### மாடுகளுக்குத் தொற்றுவியாதி வாராமல் தடுக்கும்வகை.

கஷ்டசாத்தியமான வைத்திய உபசாரங்கள் செய்து வந்தநோய்களை நீக்கிக்கொள்வதைப்பார்க்கிலும் நோய்கள் வாராதபடி விவேகத்துடன் காப்பாற்றிக்கொள்வதே உத்தம

மாயிருக்கின்றது. ஆதலால் தொற்றுவியாதிகள் வராதவகையாயும் வந்தாலும் பிரபலிக்காமலும் செய்யவேண்டிய கிரமச்சூத்திரங்களை இதனடியில் குறிப்பிக்கின்றேன்.

க-வது சூத்திரம்:—சந்தைகளிடத்தும் திருவிழாக்களிடத்தும் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் மாடுகள் நானாதேசங்களிலிருந்து வருபவையாதலால் தொற்றுவியாதிகள் பரவியிருக்கும்படியான விடங்களிலிருந்து அவ்வியாதிகள் இம்மாடுகளுக்கும் தொற்றிவந்திருக்கலாமென்றும், அவ்வியாதிகள் முன்னுக்கு இவைகளிலும்காணப்படுமென்றும், இவைகளால் மற்றமாடுகளுக்கும் அவை (வியாதிகள்) தொற்றிக்கொள்ளுமென்றும் ஊகைசெய்து கீழ்ச்சொல்லப்படும் சூத்திரங்களை அனுசரித்து நடந்துகொள்ளவேண்டியது.

உ-வது:—சந்தைகளிலிருந்தும் திருவிழாக்களிலிருந்தும் வாங்கிக்கொண்டுவரும்படியான மாடுகளை உடனே வீட்டிலிருக்கும் மந்தையில் சேர்க்கக்கூடாது. அவைகளைத் தொழுவத்திற்குக் கொண்டுவந்து கட்டவும்கூடாது. புற்புலங்களில்விட்டு மேய்க்கவும்கூடாது. நீர்குடிக்குமிடத்தில் இதரபசுக்களுடன் சே[illegible]து நீர்குடிப்பிக்கவும்[illegible]து. அப்பேர்ப்பட்டவைகளை [illegible]சையும் மூன்றுமாதவரையிலும் பிரத்தியேகமா[illegible]னவிடத்தில் பிரத்தியேகமாகவே கட்டிவைத்துப்புல்லையும் நீ[illegible]ாயும் பிரத்தியேகமாகவே கொடுத்துக்கொண்டு வரவேண்[illegible]ம். இனிமேல்சொல்லப்படும் வியாதிகளின் "ரோகங்களுண்டாதும் காலங்களி"லுடைய அவதிகள் மீறும்வரைக்கும் அவ்வாறுவைத்திருந்து அதன்பிறகு மந்தைகளுடன் சேர்க்கவேண்டும்.

ந-வது:—இம்மத்தியகாலத்தில் புதியமாடுகளைக் காலைமாலைகளில் பரீக்ஷித்து அவைகளிடத்து நோய்காணப்படுமாயின் உடனே வேறுபடுத்தி அக்கணமே இனிவிவரிக்கும் வகையாய்ச் செய்யவேண்டிய தொழுவத்தில்கட்டி வைத்தியோபசாரங்களைச் செய்யவேண்டும்.

ச-வது:—மாடுகளை ஓரூரினின்றும் மற்றோரூருக்கு ஓட்டிக்கொண்டுபோகுங்காலத்தில் இடையில் இதரபசுக்களாயினும் வண்டிகளாயினும் தங்கியிருந்தவிடங்களில் இவைகளைத் தங்கும்படி செய்யக்கூடாது. அவை நீர் குடித்தவிடங்களிலும் இவைகளுக்கு நீர்காட்டக்கூடாது. ஏனென்றால் அவ்விடங்களில் நோய்கொண்ட மாடுகள் நின்றிருந்தால் அவ்விடங்களிலும் அவைகளின்மேல் விழுந்துகிடக்கும்

புல்-தழை-மலம்-மூத்திர் முதலிய கசுமாலம் அல்லது குப்பைகளிலும் அந்நோய்களின் விஷபரமாணுக்கள் (வியாதி விந்துகள்) கலந்திருந்து இவைகளுக்கும் தொற்றிக்கொண்டு அவ்வியாதிகளை இவைகளிடத்தும் உண்டுபண்ணும்.

௫-வது :—இவ்வாறு ஓட்டிக்கொண்டு போகும் மாடுகளை ஒருநாளையில் ௰—௰௨ மைலுக்குமேல் நடத்தக்கூடாது. அதிக வெப்பங்கொண்டிருக்கும் வெய்யிலில் நடப்பித்துக் கொண்டு போகக்கூடாது. ஆங்காங்கு புல் நீர்கொடுத்துக் கொண்டு வரவேண்டும். இவ்வாறு ஓட்டிக்கொண்டுவந்த மாடுகளை உடனே மந்தையுடன்சேர்க்காமல் இனிமேல்சொல்லப்படும் ரோகங்களுண்டாகும்காலத்தின் அவதிமீறும்வரைக்கும் பிரத்தியேகப்படுத்திக் காலைமாலைகளில் பரீக்ஷித்துக் கொண்டு வரவேண்டியது.

௬-வது :—தொற்றுவியாதி மந்தையில் கண்டவுடனே அந்நோய்கொண்டமாட்டை மந்தையிலிருந்து வேறாக்கி இனி சொல்லும்வகையாய்ச் செய்யவேண்டிய தொழுவத்தில் கட்டி உபசரிக்கவேண்டியது. மற்றமாடுகளை ௪, ௫ கடைகள் சேர்ந்த மந்தைகளாகப்பிரித்து ஒவ்வொரு மந்தையையும் வெவ்வேறாக நோய்கொண்டமாடுகளிருக்கும் தொழுவத்திலிருந்து வீசும் காற்று இவைகளுக்குப் படாதிருக்கும் திக்கில்வைத்துப் பார்த்துக்கொள்ளவேண்டும். நோய்தீர்ந்த மூன்றுமாதங்களுக்குமேல் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து வைக்கலாம்.

௭-வது :—ஊரின்மேல் வீசும் காற்றுப்போகும் திக்கில் என்றால் ஊருக்கு மேற்கிலிருந்து காற்றுவீசினால் கீழ்திக்கில் ஊரைவிடத் தூரமாயும் ஊரினுடைய மாடுகன்றுகள் விசேஷமாகப் போகாதிருக்கும்படியானதுமாகிய ஓர் விசாலமானவிடத்தில் சுவரோ அல்லது வேலியோ வளைத்துக்கட்டி, அதனுள் காற்று மழை வெய்யில் குளிர்முதலியவை பசுக்களுக்கு வந்தணுகாவண்ணம் தடுக்கும்படியானதோர் தொழுவத்தைக்கட்டி இதர மாடுகன்றுகள் நாய்நரிகள் பிரவேசியாமலிருக்கத் தக்கவேற்பாடு செய்யவேண்டும்.

௮-வது :—அவ்விடத்தில் நோய்கொண்ட மாடுகளைவைத்து வைத்திய சிகிச்சைகளையும் உபசாரங்களையும் செய்யவேண்டும். அவைகளுக்குத் தக்க வைத்தியோபசாரங்களைச் செய்பவர்கள் தங்கள் உடைகளைமாற்றிக் கைகால்முகங்களைச்

சுத்திசெய்துகொள்ளாமல் வேறிடங்களுக்குப்போகவும் இதரபசுக்களைத்தொடவுங்கூடாது.

௯-வது :—நோயுள்ள வெருதுகளின் படுக்கைமுதலியவைகளுக்கு உபயோகித்த உலர்ந்த புல் தழைமுதலியவைகளை அவ்விடத்திலோர் மூலையில் எரித்துவிடவேண்டும். ஈரமாயிருக்கும் புல் தழைகளையும் சாணம் மூத்திரமுதலிய வெல்லாக்கசுமாலங்களையும் அவ்விடத்திலோர் மூலையிலேயே ஆறடிகளைவிட அதிக ஆழமானதோர் குழிதோண்டி அதில்போட்டு அதன் ஓரத்திற்கு மூன்றடியாழம்வரையில் நிறைத்து அதன்மேல் கொஞ்சம் சுண்ணும்பையிட்டுப்பிறகு உலர்ந்திருக்கும் பொடிமண்ணையும்போட்டுக் குழியை மூடி அழுத்தமாய் நிலத்தைக் கெட்டிசெய்யவேண்டும்.

௧௦-வது :—அத்தொழுவத்திற்கு மிகுதியாய்க் காற்று நுழையவும் போகவும் தகுந்த பலகணிகளிருக்கவேண்டும். நாள்தோறும் தொழுவத்தின் கதவையும் பலகணிகளையும் மூடி யொருமணிநேரம்வரையில் அதனுள் கந்தகப்புகையிடவேண்டும். காற்று உட்செல்லும்படியான நுழைவாயல்களில் உலர்ந்த புல் தழைகளைக்குவித்து எரிப்பது பிரயோசனத்தை யுண்டுபண்ணுவதாயிருக்கும்.

௧௧-வது :—தொழுவத்தின்நிலத்தை நாள்தோறும் சுத்திசெய்து அதன்மேல் சாம்பல், உலர்ந்திருக்கும் பொடிமண், சுண்ணப்பொடி, "மெக்டூகல்ஸ் பௌடர்" முதலியவைகளைப் போடவேண்டும்.

௧௨-வது :—நோய்களெல்லாம் முற்று மொழிந்தபின் தொழுவத்தின் சுவர்களையும் அதன்கூரையின் மரமுட்டுகளையும் கழுவி இரண்டொருநாள் கந்தகப்புகையைக் கொடுத்துப் பிறகு சுண்ணும்படிக்கவேண்டும். எல்லாக்கசுமாலங்களையும் நிலத்தின் மேற்பாகத்தின் மண்ணையும் அரையடி மட்டத்திற்குச் செதுக்கியெடுத்து ஆழமானகுழியில் புதைக்கவேண்டும். நிலத்தின் மண்ணை வெட்டித்திருப்பி அதன்மேல் வெளியிலிருந்து புதிய மண்ணைக்கொண்டுவந்து போட்டு நிலத்தைச் சரிப்படுத்தவேண்டும்.

௧௩-வது :—நோய்களெல்லாம் குணமான சிலதினம்வரைக்கும் மாடுகளை வெளியே மேய்வதற்கு விடக்கூடாது. அவைகளுக்கு அரிசிக்கஞ்சியையும் பச்சைப்புல்லையும் ஆகாரமாய்க்கொடுத்து அவைகளை வெகு சுசியாக வைக்கவேண்டியது. ரோகங்கள் விர்த்தியாயிருக்குந்தருணத்தில் நல்ல

ஸ்திதியிலிருக்கும் மாடுகளுக்கும் பச்சைப்புல்முதலிய நல்ல மேய்ச்சல்களையே கொடுத்துக்கொண்டுவரவேண்டும்.

கச-வது:—நோய் நீங்கியமாடுகளை இதரபசுக்களுடன் விடுவதற்குமுன்பே அவைகளை வெந்நீர்வார்த்துப் புங்காங் கொட்டையினுல் நன்ருக்த்தேய்த்துக் கழுவவேண்டியது. இவ்வாறு கழுவும் வெந்நீரில் சுய-பாகங்களுக்கு க-பாகம் "கார்போலிக் ஆஸிட்" என்னும் மருந்தைச்சேர்த்துக்கொள்வது உத்தமமாகவிருக்கும்.

கரு-வது:—தொற்று வியாதிகளினுல் இறந்துபோன மாட்டுப்பிணங்களைத் தோலோடு குறைந்தபக்ஷம் நான்கடி மண்ணின்கீழ்ப் புதைக்கவேண்டும். தோலையுரித்தால் அதற்கு வேண்டிய உப்பு-சுண்ணும்புமுதலிய பதார்த்தங்களைச்சேர்த்து அதன் துர்நாற்றத்தை யுடனே நாசம்செய்யவேண்டும்.

கசு-வது:—பெரிய நோவு - கால்வியாதி முதலியவைகளின் "ரோகமுண்டாகுங்காலங்கள்" ஒரு மாதத்திற்குள்ளென்றும், "ப்ளூரோநியுமோனியா" (சுவாசாசயவியாதி) யின் அ[illegible]லம் மூன்றுமாதங்களாயிலுமிருக்குமென்று அநுபவத்தினுல் தெரியவருகின்றது.

கஎ-வது:—தொற்றுவியாதியால் இறக்கும் மாடுகளைத் தின்பதற்குப் பறையர் சக்கிலிகளுக்காகிலும் நாய் நரிகளுக்காகிலும் விடாமல் தோலோடு ஆறடியாழமான குழியில் புதைக்கவேண்டும்.

கஅ-வது:—தொற்று வியாதி யுண்டாயிருக்கும் பசுக்களின் பாலைக் கன்றுகளுக்கு உண்பிக்கப்படாது. மனிதர்களும் உபயோகிக்கப்படாது.

---

## கூ-ம் பிரகரணம்.

---

### ரோகவிவரணம். தொற்றுவியாதி.

எந்நோய் தன்னுல் பீடிக்கப்பட்டப் பிராணியைப் பரிசிக்கும் மற்றொருபிராணிக்கும் தொற்றிக்கொண்டு அதனையும் பீடிக்குமோ அந்நோயைத் "தொற்றுவியாதி," எனப்படுகிறது. இப்படிப்பட்ட தொற்றுவியாதிக்கு மூலகாரணம் சுவாசுஷ்டி (சாளரம்) யிலிருந்து வீட்டிற்குள் நுழையும்படியா

ன வெய்யிலில் ஓடியாடிக்கொண்டிருக்கிறதாகக்காணும் அணுக்களைவிட அதிகசூட்சுமமான ஓர்வகைக்கிருமியாயிருக்கின்றது. இக்கிருமியை அந்த அணுக்களைப் பார்ப்பதுபோலல்லாமல் சூட்சுமபதார்த்தங்களைப் பார்க்கும் (பூதக்) கண்ணாடியின் உதவியால்தான் பார்க்கக்கூடும்.

வெவ்வேறாய் ஒவ்வொரு ரோகத்திற்கும் அதனதன் சுஜாதியான பீஜப்பிராணி யொன்றிருக்கும்.

வியாதிவித்துகளான இப்பேர்ப்பட்ட அதிசூட்சுமப்பிராணிகள், பெரிய மிருகங்களான பசுக்கள்முதலிய பிராணிகளின் தேகங்களில் வசதியானவிடத்தில் சேர்ந்தால் அவ்விடத்தில் ஒன்றுக்கு நூறாய்ப்பெருகி இரத்தமுதலிய வழியாய்ச் சரீரமெங்கும் வியாபித்து(பர்வி)ஜாதிக்குரியநோயை அத்தேகத்தில் உண்டாக்கி அந்நோயின் சுபாவநியதியின்படி விர்த்தியாய் அதன் அவதியை அனுசரித்துப் பரிபக்குவமாய்க் காலக்கிரமத்தில் சாந்தமடைந்து நீங்கிப்போம்.

வைத்திய சிகிச்சையைக்கொண்டு நோயின்மூலத்தை நீக்கினால் பிராணியின் தேகம் நோயைநீக்கித் தன்னுடைய பூர்வ ஆரோக்கிய நிலையை அடையும். அஃதெவ்வாறென்றால் முள் தாக்குண்ட கால் நொண்டுதலடையும். அதற்கு மூலகாரணமான முள்ளை யெடுத்துவிட்டால் கால் தானாகவே குணப்படும்.

வியாதிவித்துகளான கிருமியாதி சூட்சுமப்பிராணிகள் எண்ணுவதற்குமுடியாத அவ்வளவு மிகுதியாய்ப்பிறந்து இதரமிருகம் பசுக்கள்முதலிய பிராணிகளின் பெரிய சரீரங்களுக்குத் தொற்றிக்கொண்டு விர்த்தியாய் அந்நோய்களைப் பெருகச்செய்யும். இவ்வாறாயிருப்பதால் ரோகத்தினால் பீடிக்கப்பட்டப் பசுக்களினுடைய தேகத்திலிருந்து வெளிப்படும்படியான மலம் மூத்திரம் உமிழ்நீர் மூக்குச்சளி வேர்வை முதலிய பொருள்களிலெல்லாம் வியாதிவித்துகள் நிறைந்திருக்கும். இதன்றி அம்மிருகப்பசுக்களின் சுற்றுமுற்றிலும் ஆடிக்கொண்டிருக்கும் காற்றிலும் அவ்வித்துகள் கலந்துகொண்டிருக்கும். அம்மிருகப்பசுவாதிகளின் தேகத்தைப் பரிசிக்கும் பதார்த்தங்களெல்லாவற்றிற்கும் வியாதிவித்துகள்தொற்றிக்கொண்டு அவைகளுடன் வேறிடங்களுக்கும் சென்று அங்குள்ள மிருகப்பசுவாதிகளின் தேகங்களிலும் சேர்ந்து பிரபலித்துக்கொள்ளும். ஆகையால் சுகமாகவிருக்கும் மாடுகளுக்குச் சுகவீனமாயிருக்கும் மாடுகளின் பரிச

மாவது, அல்லது அவைகளின் மலம் மூத்திரம் உமிழ்நீர் சளி வேர்வைமுதலிய எவ்விதக் கழிபொருளாவது அவைகளுக்குட்பட்ட வேறு பொருள்களாவது படக்கூடாது. அன்றியும் அம்மாடுகளின் சுவாசத்தையாவது அவற்றின்மேல் வீசித்திரும்பும் காற்றையாவது நல்ல மாடுகள் சுவாசிக்கக் கூடாது.

தொற்றுவியாதிகளுக்குக் காரணமாயிருக்கும் கிருமிகள், சுகமாகவிருக்கும் பசுவின் உடலில் நுழைந்தபிறகு அங்குதானே விர்த்தியாய் நிலைத்து அவ்வுடலில் அந்நோயை நிலைநாட்டி அதன் குறிகளை வெளிப்படுத்துவதற்கு அவ்வியாதிவித்துகளின் தொகைக்குத்தக்க காலவிளம்ப (தாமதம், ஆலசியம்) மாகும். இம்மத்தியகாலத்தை (வியாதிவித்து ஒரு மிருகத்தின் உடலில் சேர்ந்து முதல் அந்நோயின் குறிகளை வெளிப்படுத்துங்காலம்வரைக்கும்) "ரோகமுண்டாகும்காலம்" என்றழைக்கலாம். இந்த "ரோகமுண்டாகும்கரலம்," சிலரோகங்களுக்குக் கொஞ்சமாயும் சிலவற்றிற்கு மிகுதியாயிருக்கின்றது.

---

## வியாதிகள்.

---

### பெரியநோவு-கோமாரி-கொள்ளைநோய்-பிச்சைநோய்-வெக்கை.

### RINDER-PEST, CATTLE-PLAGUE.

பெரியநோவென்பது நோய்களுக்குள் விசேஷமாய்த் தொற்றிக்கொள்ளும் தோஷமுள்ளதாயும் அதிகக்கடின சுபாவமுள்ளதாயும் இருப்பதினால் இதனை ஒருமகாவியாதியென்று சொல்லப்படும். இதன் மூலகாரணம் முன்னுரைத்தபடி பரமாணுரூபமான சூட்சுமஜெந்துவாயிருக்கின்றது. இதன் "ரோகமுண்டாகும் காலம்," ௨௪ மணிமுதல் ௨௧ நாள்வரைக்கும் நீடித்திருக்கும். என்றால் சுகமாயிருக்கு மோர் பசு பெரியநோவினால் பீடித்துக்கொண்டிருக்கும்படியான வேறோர்பசுவையாவது அதன் மல மூத்திராதி கெட்டவஸ்துக்களையாவது பரிசித்தபின்பு ௨௪ மணிக்குமேல் ௨௧ நாளுக்குள் சுகமாயிருந்த அப்பசுவினது தேகத்தில் அந்நோயின் குறிகள் அடியில் வருமாறு காணப்படும்:—

குறிகள்:—நோயின் ஆதிமுதல் அந்தியம்வரைக்கும் காலத்தை மூன்றுபங்குசெய்து ஒவ்வோர்பாகத்திலும் காணவரும் குறிகளை நோக்கில் முதற்பங்கில்: பசு தன் முதுகைவளைத்துத் தேகத்தைக் குறுக்கிக்கொண்டு மயிர்கூச்செறிந்து காதுகளைத் தளரவிட்டு, உடலில் முதுகு புயம் பின்கால் இவைகளின் மேலிருக்கும் தோலை இழுத்துக்கொண்டும் நான்கு கால்களையும் ஒன்றாகச்சேர்த்து ஊன்றிக்கொண்டும் நடுக்கங்கொண்டும், ஆயாசத்தினால் மேய்ச்சலையும் விட்டு நின்றிருக்கும். சுரத்தினால் வாய்சூடாகவிருக்கும். வாயினுட்பாகம் சிவப்பாயிருக்கும். பொடியிருமல் உண்டாயிருக்கும். மலம் கட்டியிருக்கும். மலத்தின்மேல் சீதமிருக்கும். தாகமிருக்கும். முதுகின் நடுத்தண்டெலும்பில் நோயிருக்கும். கோட்டுவாயும் பற்கடிப்புமுண்டாயிருக்கும்.

இரண்டாம்பங்கில்: சுரம் அதிகமாயிருக்கும். தோல்-வாய்-கொம்பு-கால்-காதுகள் சிலசமயத்தில் சூடாயும் சிலசமயத்தில் குளிர்ச்சியாயும் காணும். மூச்சு அதிகரிக்கும். மேய்ச்சலையும் அசைபோடுதலையும்விட்டுவிடும். கண்ணிலிருந்து பீளைகாணும். முதுகெலும்பின்நோய் அதிகரித்து நடக்க முடியாமல் மாடு படுத்துக்கொண்டு ஒருபக்கமாய் தலையை வளைத்துக்கொள்ளும். தாகமதிகமாயிருக்கும். விழுங்குவதற்கு வருத்தமாயிருக்கும். இழுப்புமிருந்திருக்கும். தாடை உதடு இவற்றினுட்பாகம் அதிகச் சிவப்பாயிருக்கும். மலம் மிகவும் பந்தித்திருக்கும். மலத்தின்மேல் சீதமும் இரத்தமுமிருக்கும். பசு முக்கும்.

மூன்றாம்பங்கில்: கண்களிலிருந்து பீளையும் வாய்மூக்குகளிலிருந்து சளியும் அதிமாய்வந்துகொண்டிருக்கும். மூச்சிலிடம் அதிகத்துர்நாற்றமிருக்கும். வாயினுட்புறமெல்லாம் தோலுரிந்து புண்ணாயிருக்கும். மூக்குக் கண்களிலும் புண்ணிருப்பதுண்டு. எதிர்ப்பற்கள் ஆடும். பேதி ஆரம்பித்து முதல் கெட்டியாயும் பின்பு அதிக இளகலாயும் சீதம் இரத்தம் கலந்தும் போய்க்கொண்டிருக்கும். அதிலும் மிகவும் அதிகமான துர்நாற்றமிருக்கும். தாகம் அதிகமாயிருக்கும். சில வேளையில் சரீரத்தில் ஊதலுண்டாகும். தோல், கொம்பு காது கால்கள் குளிர்ச்சியடைந்திருக்கும். கர்ப்பம் தங்கியிருந்தால் அதுவெளிப்பட்டுப்போகும். பலம் குறைந்து மாடு படுத்தெழுந்திருக்கக்கூடாமலிருக்கும். சங்கடத்தினால் முக்கிக்கொண்டிருக்கும், கடைசியாய் நோய்கண்ட இர

ண்டு நாட்களுக்குமேல் ஆறு நாட்களுக்குள்ளாகப் பசு இச் சங்கடத்திலிருந்து நீங்கிச் சுவர்க்கலோகப்பிராப்தியாகும்.

வெய்யிற்காலத்தில் இந்நோய் வருமாகில் சிலசமயங்களில் பசுவின்மடிமீதும் தொடைகளின் நடுவிலும் அடிவயிற்றின்மேலும் ஓர் வகைச் சிரங்குவருவதுண்டு. அது அதிகமாய் வருமாயின் இரத்தபேதி குறைந்து பசு பிழைக்கும்.

இந்நோய் சாதாரணமாய் மூன்றுநாள்முதல் ஒன்பது நாள்வரைக்கும் சிலசமயத்தில் ஒன்றிலிருந்து பதினாறுநாள் வரையிலும் தங்கியிருக்கும்.

பெரிய நோவுக்கேற்ற ஔஷத சிகிச்சைகள் :—மந்தையில் இந்நோய் ஓர்மாட்டிற்குக்கண்டவுடனே அதனை மந்தையிலிருந்து வேறுபடுத்திச் சிகிச்சையின்பொருட்டுக்கட்டியிருக்கும் தொழுவத்தில்வைத்து உபசரிக்கவேண்டியது. இந்நோயின் வித்துகளான சூக்ஷ்மக்கிருமிகள் நோய்கொண்ட மாட்டைச் சுற்றி வீசும்காற்றில் நூறு கஜதூரம் வியாபித்திருக்கும். ஆனால் இதன் சிகிச்சைக்கென்று கட்டியிருக்கும் தொழுவம் மனிதர்வசிக்கும் வீடுகளுக்கும் மற்றுமுள்ளப் பசுமந்தைகளுக்கும் நூறு கஜங்களைப்பார்க்கிலும் தூரமாகவேயிருக்கவேண்டியதாயிருக்கிறது. இத்தொழுவத்திற்கு நூறு கஜதூரப் பிரதேசங்களின் (இடங்களின்) சுற்றுமுற்றிலும் வேறு மாடுகன்றுகள் போகப்படாது.

வைத்திய சிகிச்சைகள் :—இதரநோய்களைப்போலல்ல. இதில் வைத்தியத்தைப்பார்க்கிலும் உபசாரமேமுக்கியமானது.

பெரியநோவு-கால்வியாதி முதலிய அநேக நோய்கள், மனிதர்களுக்குண்டாகும் அம்மை (வைசூரி) முதலியநோய்களைப்போல அவற்றின் சுபாவநிபந்தனைகளின்படிக்கிரமமாக விர்த்தியாவதும் சாந்தமாவதுமேயன்றி மனிதர் எண்ணத்திற்குட்பட்டு அவைகளின் கிரமங்களை விட்டுச் சாந்தமாகிறதில்லை. ஆதலால் கடினமாக விருக்கும் அவஸ்தைகளை அப்போதைக்கப்போது தகுந்த வைத்தியோபசாரங்களினால் உபசாந்தி செய்துகொண்டு கரைசேரவேண்டியதேயன்றி வேறு வழியில்லை.

சகலநோய்களிலும் தேகத்தின்பலம்குறைவடையாமல் காலக்கதிகளை அநுசரித்துத் தகுந்த ஆகாரங்களைக்கொடுத்துக்கொண்டு உபசரிப்பும் செய்துகொண்டுவந்தால் பசுவின்

தேகம் ரோகத்தைச் செயிக்குமென்பது சாஸ்திர சம்மதமாகவிருக்கின்றது.

ஆதியில் மலம் பந்தித்திருக்கும் காலத்தில் ஒருநாளைக்கு இரண்டொருமுறை சமுதல் எ துலாம்வரைக்கும் உப்பையாவது அல்லது "எப்சம்சால்ட்" என்னும்உப்பையாவது வெந்நீரில் கரைத்துக் குடிப்பிக்கவேண்டும். இதன்றிப் பீச்சாங்குழலினால் வெந்நீரையும் ஆமணக்கெண்ணெயையும் ஆசனவழியாய்க் குடல்களுக்குள் பாய்ச்சி மலம்பந்திக்காதபடிக் குடலைச் சுத்திசெய்யவேண்டும். இரத்தபேதி தொடங்கி உச மணிகளுக்கு மேலும் மீறியாய்க்கொண்டிருந்தால் இதன்டியில் சொல்லியிருக்கும் ஔடதங்களைக் கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| சீமைச்சுண்ணாம்பு | ஜ துலாம் |
| காசுக்கட்டி | ஜ ,, |
| அபிம் | வஹ ,, |
| நிலவேம்பு | கவ ,, |

இவைகளையெல்லாம் சூரணம்செய்து ஒருசட்டாக்குச் சாராயத்தில் கலந்து ஒருசேர் அரிசிக்கஞ்சியில் கலக்கிக் குடிப்பிக்கவும்.

மேற்சொல்லியதினால் குணங்காணவிட்டால் இதனைக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| கற்பூரம் | ஜ துலாம். |
| பொட்டிலுப்பு | ஜ ,, |
| ஊமத்தைவிதை | வஹ ,, |
| நிலவேம்பு | ஜ ,, |

இவைகளைச்சூரணம் செய்து இரண்டு சட்டாக்குச் சாராயத்துடன் ஒருசேர் அரிசிக்கஞ்சியில் சேர்த்துக் குடிப்பிக்கவேண்டும். பேதி அதிகமாயிருந்தால் இததுடன் ஜ துலாம் கடுக்காய்ப்பொடியையும் கலந்து கொடுக்கவேண்டும். பேதி நின்றுபோகும் வரையில் இம்மருந்து ம—மஉ மணிக்கொருதடவைக் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். பேதி நின்றபிறகு மருந்தைக்கொடுக்கக்கூடாது.

நன்றாய் வேகவைத்து மந்தமாகவிருக்கும் அரிசிக்கஞ்சியையாவது அல்லது கேழ்வரகுக்கஞ்சியையாவது அப்போதைக்கப்போது குடிப்பிக்கவேண்டியது.

பேதி தொடங்குவதற்குமுன்பு குடிப்பதற்கு நீரைக் கொடுத்துவரலாம். பேதிகண்டபின்பு நீரைக்கொடுக்கக்கூடாது. அப்போதைக்கப்போது கொஞ்சங் கொஞ்சமாய்க் க

ஞ்சியையே கொடுத்துக்கொண்டு வரவேண்டும். மேலும், ம சூத்திரங்களில் சொல்லியிருக்கிறபடித் தொழுவத்திற்குள் கந்தகத்தைக் கொளுத்தவேண்டும். நிலத்தையும் அப்போதைக்கப்போது சுத்திசெய்யவேண்டும்.

நோய்நீங்கிப் பசுமேய்ச்சலைக் கொள்ளும்காலத்தில் சுலபமாய் ஜீரணிக்கக்கூடிய பச்சைப்புல்முதலிய பதார்த்தங்களில் கொஞ்சம் உப்பைக்கலந்து கொடுத்துக்கொண்டு வரவேண்டும். உலர்ந்த புல்முதலியவைகளை அநேகநாள்வரையிலும் கொடுக்கக்கூடாது.

இப்பெரியநோவினால் இறந்துபோன மாட்டின் துடை மாமிசத்தை யெடுத்து அதனைச்சிறுகச்சிறுகக்கொத்தி நீரைக்கலந்து நசுக்கிப்பிழிந்த சாற்றை (ரசத்தை) யெடுத்து ஒரு குப்பிகொள்ளும் அவ்வளவு நோய் கண்டிருக்கும் மாட்டிற்குக்குடிப்பித்தால் கிரமமாய் பேதி நிற்கும். மாடும் பிழைக்கும். அன்றியும் நோய் வராதிருக்கும் மாடுகளுக்கு அந்தரசத்தைக்கொடுத்தால் அவைகளுக்கு முன்னுக்கு அந்நோய்வருகிறதில்லையென்று அனுபவத்தினால் காணவருகின்றது. சிலர் மாமிசத்தை நசுக்கி அதன் ரசத்தைக் கொடுப்பதற்குப்பதிலாய் அம்மாமிசத்தையே நன்றாக வேகவைத்து அக்கஷாயத்தைக் கொடுக்கின்றார்கள். இது நசுக்கி யெடுக்கும் ரசத்தைவிட உத்தமமானதென்று சொல்லுவார்கள்.

பெரியநோவு ஒருமந்தையில் காணப்பட்டால் ௨௯-வது நெம்பர் ஔடதத்தை நாளொன்றுக்கு இரண்டொரு தடவை நோய் கொள்ளாதிருக்கும் மாடுகளுக்குக் கொடுத்தால் முன்னுக்கு நோய் நேரிடாமலிருப்பதுண்டு.

---

## கால்வியாதி-வாய்நோய்-கால்நோய்-வாய்ச்சுரம்-காற்சுரம் வாய்க்கோமாரி-காற்கோமாரி.

## FOOT AND MOUTH DISEASE; ECZEMA CONTAGIOSA; APHTHA EPIZOOTICA; MURRAIN; ECZEMA EPIZOOTICA.

இது தொற்றிக்கொள்ளும் சுபாவமுள்ள ஓர்வகையான சுரமென்று சொல்லப்படும். இதன் "ரோகமுண்டாகும் காலம்" ஒன்றுமுதல் நான்கு நாள்வரைக்கும் நீடித்திருக்கும். சுரமும், வாய்-கால் மடி இவைகளில் புண்ணாகிறதும் இந்நோயின் முக்கியகுறிகளாயிருக்கின்றன.

குறிகள்:—நடுக்கலுடன் சுரம்வந்து, வாய்-தோல்-கொம்பு-செவி-கால் முதலியவை சூடாகக்காட்டும். அன்றியும் மாடு மேய்ச்சலை விடத்தொடங்கும். பால் வற்றிப்போகும். பற்களைநெறநெறவென்று கடிக்கத்தொடங்கும். வாயிலிருந்து கோழையான உமிழ்நீர் வடிந்துகொண்டிருக்கும். சுவாசத்தில் துர்நாற்றம்காணும். மலம் கட்டியிருக்கும். இரண்டு நாட்களுக்குப்பிறகு வாயினுட்புறத்திலும் நாக்கின் மேற்புறத்திலும் வெண்மையான பெரிய கொப்புளங்கள் உண்டாகும். இக்கொப்புளங்கள் உடைந்து புண்ணாகும். வாயிலிருந்து கோழையான உமிழ்நீர் அதிகமாய்வடியும். மாடு ஒவ்வொரு நிமிஷத்திலும் உதட்டை நக்கிக்கொண்டிருக்கும். மடியின்மேல் கொப்புளங்களுண்டாகும். அன்றியும் வீக்கங்காணும். இப்பேர்ப்பட்ட மடியைத்தொட்டு முலைக்காம்புகளைப் பிடித்துக் கறந்த கைகளைக் கழுவிக்கொள்ளாமல் இதர பசுவின்பாலைக்கறந்தால் அதற்கு மிந்நோய் தொற்றிக்கொள்ளும். அம்முலைகளில் கன்றுகள் பாலுண்டால் அவைகளுக்கு மிந்நோய் உண்டாகும். மாடு தனது கால்களை ஊன்றக்கூடாமல் க்ஷணத்திற்கு க்ஷணம் தூக்கித்தூக்கி உதறிக்கொள்ளும். முதுகைவளைத்துக்கொண்டு நான்கு கால்களையு மொன்றாய்ச்சேர்த்து நின்றிருக்கும். குளம்புகளின் மேற்புறத்தில் வீக்கம் காட்டும். அவைகளின் நடுவிலும் காலின் மேலும் கொப்புளங்களுண்டாய் உடைந்து புண்களாகும்.

இப்புண்களைச் சீக்கிரத்தில் ஆற்றாவிட்டால் அவை குழைந்து அதிகத் தொந்தரைசெய்யும். குளம்பே அழுகியுதிர்ந்துபோகும். புண்ணான கால்களால் நடக்கக்கூடாமலும் வாயைக்கொண்டு மேயமுடியாமலும் சுரத்தின் கொடுமையாலும் மாடு மிகவும் சீணித்துப்போகும்.

ஆதியிலிருந்தே தகுந்த வைத்தியோபசாரங்களைச் செய்துவந்தால் ௩—௪ தினத்திற்குள் நோய் சாந்தப்பட்டு ௰—௰௫ தினத்திற்குள் மாடு சுகமடையும்.

சிகிச்சை:—மாட்டை மந்தையிலிருந்து வேறுபடுத்தி முன் சொல்லியிருக்கும் வைத்தியோபசாரத்திற்காக ஏற்படுத்தியிருக்குமிடத்தில் சுத்தமாயிருக்கும் ஒரு தொழுவத்தில் கட்டிப் புல்லையும் நீரையும் கொடுக்கவேண்டும். பசுவின் மடியிலிருக்கும் புண்களை வெந்நீரினாலும் படிக்காரநீரினாலும் கழுவி வாயை வெந்நீரினால் சுத்திசெய்யவேண்டும். கவ் து

லாம் படிக்காரத்தை ௨ சேர் ஜலத்தில் கரைத்து அதனால் புண்களைத் தினத்திற்கு ௩, ௪ முறையாக நாள்தோறும் கழுவவேண்டும்.

சுரம் அதிகமாயிருந்தால்

| | |
|---|---|
| கற்பூரம் | ௩ துலாம். |
| பொட்டிலுப்பு | ௧ ,, |
| சாராயம் | ௭ சட்டாக்கு. |

கற்பூரத்தைச் சாராயத்தில் கரைத்து அதற்குப் பொட்டிலுப்புப்பொடியைக் கலந்து இதை ஒருசேர் தண்ணீரில் சேர்த்துத் தினத்திற்கு இரண்டுமுறைக் குடிப்பிக்கவேண்டும். மலம் கட்டியிருந்தால் இதனுடன் ௨ லிருந்து ௪ துலாம் வரைக்கும் உப்பைச்சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

இதன்கீழ் உரைத்திருப்பதை அப்போதைக்கப்போது புண்களின்மேல் தடவிக்கொண்டுவரவேண்டும்.

| | |
|---|---|
| கற்பூரம் | ௧ பாகம். |
| டர்ப்பெண்டைன்தைலம் | ௰ ,, |
| தேங்காயெண்ணெய் | ௪ ,, |

இவைகளை நன்றாகக்கலந்து புண்களின்மேல் தடவவேண்டும். கால்களையும் முக்கியமாகக் குளம்பின் நடுவிலும் நன்றாக வெந்நீரினால் கழுவிச் சுத்திசெய்யவேண்டும். கொதிநீரில் கம்பளத்துண்டை நனைத்துப்பிழிந்துவிட்டு அச்சூடு கம்பளத்தினால் காலுக்கு ஒற்றுதல்செய்யவேண்டும். காலிலிருக்கும் புண்களைப் படிக்காரநீரினால் கழுவி மெல்லிய பழையதுணியையாவது அல்லது பஞ்சியையாவது அப்படிக்காரநீரில் நனைத்துப் புண்களின்மேல் போட்டு எப்போதும் ஈரமாக வைக்கவேண்டும்.

புண் சீக்கிரமாக ஆறாமல் அழுகிப்போகிறதாயும் நாறுவதாயும் காணுமாயின் இதனடியில் சொல்லும் ஔஷதங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

| | |
|---|---|
| கார்போலிக் ஆஸிட் | ௧ பாகம். |
| வெந்நீர் | ௫௰ ,, |

இவைகளை நன்றாய்க்கலந்து புண்களைக்கழுவவேண்டும்.

| | |
|---|---|
| கார்போலிக் ஆஸிட் | ௧ பாகம். |
| தேங்காயெண்ணெய் | ௬ ,, |

இவைகளை நன்றாகக்கலந்து பஞ்சியில் நனைத்துப் புண்ணின்மேல் போடவேண்டும்.

| | |
|---|---|
| அயோடோபாரம் | ௧ பாகம். |
| தேங்காயெண்ணெய் | ௮ ,, |

இவ்விரண்டையும் கலந்து புண்ணின்மேல் தடவினுல் துர்நாற்றமுடனே யெடுபட்டுப்போம். புழுக்களிருந்தாலும் சாகும். ஈக்கள் சமீபத்தில் மொய்க்கா. வெகுசீக்கிரத்தில் புண் ஆறிப்போகும். அயோடோபாரம் (Iodoform) என்னும் மருந்தும் கார்போலிக் ஆஸிட் (Carbolic Acid) என்னும் மருந்தும் இங்கிலீஷ் மருந்துகள் விற்கப்படுமிடங்களில் சொற்ப விலைக்குக்கிடைக்கும். புண்ணுக்கென்றிருக்கும் மருந்துகளில் அயோடோபாரம் அதிக உத்தமமானது.

காலின் புண் ஆறுவதற்குச்சேற்றில் நிற்கச்செய்வது அவ்வளவு பிரயோசனமுள்ளதாகாது. எனெனில் மணல் சேர்ந்து புண்ணை அரக்குவதினுல் அதிகமாவதுண்டு. அதனுல் குளம்பு அழுகி வீழ்ந்துவிடுவதுமுண்டு.

---

## சுவாசாசய நோயி.

### PLEURO PNEUMONIA; ZIMOTICA CONTAGIOSA; LUNG-DISEASE.

இஃது தொற்றிக்கொள்ளும் இயற்கையுள்ள ஓர்விதமான நோய். இதில் சுவாசமேசசூழம் அதன்மேலிருக்கும் சவ்வும் ரோகஸ்தானங்களாயிருந்துகொண்டு சுவாசகோசத்தில் இரத்தங்கட்டி ஆங்காங்கு சிறிய கட்டிகளுண்டாய் இயற்கையான இரத்த ஓட்டத்தையும் வாயு ஓட்டத்தையும் தடைப்படுத்தி இரத்தத்தின் பிராணவாயு நிறைந்திருக்கும் சுபாவத்தையும் கெடுத்துப் பிராணனை விடும்படிச்செய்யும். இதன் "ரோகமுண்டாகும்காலம்" என்றுமாதமளவரையில் நீடித்துநிற்கும். நாள்செல்லச்செல்ல நோயின்குறிகள் ஒவ்வொன்முய் வெளிப்படும். ஒரு மந்தைக்கு இந்த நோயுண்டானுல் எல்லா நடைகளுக்கும் வருமென்னும் நேமகமில்லை.

குறிகள்:—முதலில் மாடுகொஞ்சம் விசேஷசுகமாயிருப்பதாகக் காணவரும். இரண்டொருதினங்களுக்குப்பின்பு நடுக்கலுடன் சுரம்காணும். கொஞ்சம் கொஞ்சமாய் மேய்ச்சலை விடத்தொடங்கும். ஒருவகையான பொடியிருமல் தோன்றும். கறக்கும்பசுவாயிருந்தால் பால் வற்றிப்போகும். இரண்டொரு நாட்களுக்குப் பிறகு சுரம் அதிகரிக்கும். ரோமங்கள் சிலிர்ப்பெடுக்கும். வாய் சூடாயிருக்கும். அதனுட்பாகம் அதிகச்சிவப்பாயிருக்கும். சுவாசத்தில் அதிக துர்நாற்றமிருக்கும். இருமல் அதிகரிக்கும். இருமல் கா

னும்போது நோயிருப்பதுபோல்தோன்றும். உச்சுவாச நிச்சுவாசங்கள் அதிகரிக்கும். மூக்கின்துவாரங்கள் அகன்றிருக்கும். மாடு மூச்செறியும்போதெல்லாம் முக்கி முக்கி வருத்தங்கொள்ளும். முன்கால்களைப் பக்கங்களுக்குப் படாவண்ணம் வெளியேதள்ளிநிற்கும். படுக்கும்போது சுவாசகோச[illegible]ாசாளமாய் விட்டிருக்கவேண்டி மார்பின் நடுவெலும்[illegible] நிலத்தின்மேல் அழுத்திக்கொண்டு படுக்கும். ஒருபக்கத்திய சுவாசகோசத்திற்கு நோயுண்டாயிருக்கில் அந்தப்பக்கமே கீழிருக்கும்படியாய்ப் படுக்கும். மூக்கிலிருந்தும் கண்களிலிருந்தும் நீர் வடியும். நாள் செல்லச்செல்ல நோய் அதிகரித்து மாடு அதிக மெலிவடையும். தோல்-கொம்பு-கால்கள் சீதளங்கொள்ளும். அதிகத் துர்நாற்ற முள்ள மூச்சுவிடும். இருமல் விபரீதமாகும். மார்பில் நோய் அதிகமாயிருப்பதினால் இருமும்போது பலமாக இருமமுடியாமல் அடக்கியடக்கி யிருமும். பக்கத்து எலும்புகளின் நடுவில் அழுத்தினால் நோயிருப்பதினால் மாடு வருத்தமடையும். கடைசியாய் பேதி ஆரம்பிக்கும். இப்படியே காலம் கழிந்துகொண்டு வந்தால் இரத்தம் கட்டிக்கொள்ளுவதுமன்றி கட்டிகளுமுண்டாய் சுவாசாசயத்திற்குக் காற்று நுழைய வழியின்றியும் இரத்தம் சுத்தியாகாமலும் மாடு செத்துவிடும்.

சுவாசகோசத்தின் கொஞ்சப்பாகத்திற்கு மாத்திரம் இந்நோய் காணுமாகில் அம்மாடு ஒருவேளை பிழைத்துக்கொள்ளலாம்.

இந்நோய் இரண்டு சுவாச கோசங்களுக்கும் கண்டு கடினமானபோது எட்டுமுதல் பத்துநாள் வரைக்கும், கொஞ்சப்பாகத்திற்குமாத்திரம் நேரிட்டுச் சாதாரணமாயிருந்தால் இரண்டுமாதமுதல் ஆறுமாதம்வரைக்கும் நீடித்திருக்கும்.

சிகிச்சை :—இந்நோய் கண்டவுடனே மாட்டை முன்னுரைத்திருக்கும் சூத்திரங்களின்படி மந்தையிலிருந்து பிரித்துச் சிகிச்சையின்பொருட்டு ஏற்படுத்தியிருக்கும் தொழுவத்தில்வைத்து உபசரிக்கவேண்டும். உண்பதற்குப்பச்சைப் புல்லையே கொடுக்கவேண்டும். குடிப்பதற்குவேண்டிய அளவு அரிசிக்கஞ்சியையும் தண்ணீரையும் கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும்.

முதலில் சுரமிருக்கும்போது நம்பர் ௫-வது ஔடதத்

தைக்கொடுக்கவும். மலம் கட்டிப்போயிருக்கில் நம்பர் ௧௰வது மருந்தைக் கொடுக்கவேண்டும்.

கொதிநீரில் கம்பளத்துண்டை நனைத்து நீரைப்பிழிந்துவிட்டு அச்சுடுகம்பளத்தினுல் நோய் கண்டிருக்கும் பக்கத்திற்கும் மார்பிற்கும் அரைமணிநேரம் நன்ருகச் சூடேறும்படி ஒற்றுதல் செய்யவேண்டும். அதற்குப்பின் உடல்மேலிருக்கும் நீரையெல்லாம் உலர்ந்ததுணியால் துடைத்து நான்குபாகம் கடுகெண்ணெய்க்கு இரண்டுபாகம் டர்ப்பெண்டைன் கலந்து அத்தைலத்தை மார்பிற்கும் பக்கத்திற்கும் தடவி நன்ருய்த்தேய்த்துக் கம்பளத்தினுல் மார்பையும் பக்கத்தையும் நன்ருகச்சுற்றிக்கட்டி எப்போதும் சூடாயிருக்கும்படி வைத்திருக்கவேண்டும்.

மாடு அதிக அசக்தியாயிருக்கும் காலத்தில் தினத்திற்கு இரண்டொருதடவை ஒருசட்டாக்குச் சாராயத்தை ஒருசேர் கஞ்சியில் கலந்து குடிப்பிக்கவேண்டும்.

---

## மண்ணீற்சன்னி, அடைப்பான்காய்ச்சல், அடைப்பான்.

## BLACK QUARTER, SPLENIC APOPLEXY, CONGESTIVE FEVER, ANTHRAX.

---

எந்தப்பிராணிக்குந் தொற்றிக்கொள்ளும் சுபாவமுள்ள இந்நோய் இரத்தங்கெடுவதினுலுண்டாகும். இதனுல் இரத்தங்கெட்டு நாடிகளிலிருந்து வெளிப்பட்டுத் தோலின் கீழும் மாமிசத்தின் மத்தியிலும் கட்டிகளுண்டாகி அவ்விடங்களில் வீக்கமாயிருக்கும். இரத்த மாமிசங்களெல்லாம் கெட்டு அழுக ஆரம்பிக்கும்.

உலர்ந்த கரடுமுரடான புல்முதலியவைகளைத் தின்று இளைத்துப்போயிருக்கும் மாடுகள் நல்ல வளமான பச்சைப் புல்லை அதிகமாய்த்தின்பதினுல் இரத்தம் சீக்கிரத்தில் விர்த்தியாயிருக்குங்காலத்தில் பகலில் காயும் வெய்யிலிலும் இரவில் அடிக்கும் குளிரிலும் தங்குவதால் இரத்தங்கெட்டு அவைகளுக்கு இந்நோயுண்டாகும். எப்போதும் நீர் நிறைந்திருக்கும் பள்ளத்தாக்குகளில் விளைந்திருக்கும் புற்களைத் தின்பதினுலும் இந்நோயுண்டாகிறதுண்டு.

குறிகள் :—நன்ருயிருந்த மாடு இரண்டொரு மணிநேரத்திற்குள் தேகத்தை மிகவும் பிகுவாயெடுத்துக்கொண்டு நட-

க்கக்கூடாமல் நின்றிருக்கும். சில நிமிஷங்களுக்குள் முதுகினிடத்தும் கால் தொண்டை நாக்கு வயிறு முதலிய பலவிடங்களிலும் தோலின்கீழ் வீக்கங்காணும். அவ்வீக்கத்தின்மேல் விரலைவைத்து அழுத்தினால் உள்ளே காற்று நிறைந்திருப்பதாய்த் தெரிவதோடு நெறநெறவென்று சத்தமும் கேட்கும். அவ்வாறு வீக்கங்கொண்டிருக்குமிடத்தைக் கீறிப்பார்த்தால் தோலின்கீழும் மாமிசத்தின் மத்தியிலும் இரத்தக்கட்டிகள் கட்டிக்கொண்டு, அக்கட்டிகளும் அவைகளைச்சுற்றுமிருக்கும் மாமிசாதிகளும் அழுகத்தொடங்கிக் கறுப்பு வர்ணமாயிருக்கும். அவைகளில் துர்நாற்றம் வீசும். தொண்டையிலும் நுரையீரலிலும் வீக்கங்கண்டால் உச்சுவாச நிச்சுவாசங்களில் வெகு கஷ்டம்நேரிடும். தலைக்கும் மூளைக்கும் வருமாயின் மாடு சொக்கி (உணர்ச்சியற்று) விழுந்துகிடக்கும். கால்களில் வீக்கங்கண்டு விர்த்தியாய்வந்தால் கால் பந்திக்கப்பட்டு மாடு நடக்கமுடியாமல் நின்ற விடத்திலேயே நின்றிருக்கும். வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகிக்கொண்டிருக்கும். தேகத்தில் இழுப்புதோன்றும். மலமூத்திராதிகளில் இரத்தங்கலந்துபோகும். தேகபலம் வெகுசீக்கிரத்தில் குன்றிவிடும். பிராண நாடிகள் அசைவற்று மாடு நிற்கமுடியாமல் நிலத்தின்மேல்விழும். கூடவே அதன் பிராணனும் போய்விடும்.

வாதை கடினமானால் அது நேர்ந்த இரண்டுமணிநேரத்திற்குள்ளாகவும், சாதாரணமாயின் இருபத்துநான்குமணிநேரத்திற்குள்ளாகவும் மரணம் சம்பவிக்கும்.

சிகிச்சை:—முன் சொல்லியிருக்கும் சூத்திரங்களை அநுசரித்து, ரோகங்கொண்டிருக்கும் மாட்டை மந்தையிலிருந்து வேறுபடுத்திச் சிகிச்சாசாலையில் வைக்கவேண்டும். அம்மாடு மரணத்துக்கு ஆஸ்பதமென்றே கொள்ளவேண்டியது. அதிலும் வீக்கமதிகமாயும் உச்சுவாசநிச்சுவாசங்கள் கடினமாயுமிருக்குமானால் மரணம் சமீபத்திலேயே நேர்ந்திருக்கிறதாக எண்ணவேண்டும். வீக்கங்காண்பதற்குமுன்பே சிகிச்சைசெய்வதற்குக் கூடுமானால் உ-ம் நெம்பர் ஔடதத்தை எட்டு அல்லது பத்து மணிநேரத்திற் கொருதடவை கொடுத்து மலசுத்தியுண்டாகச் செய்யவேண்டியது. அரையேயரைக்கால் துலாம் கற்பூரத்தை யொரு சட்டாக்குச்சாராயத்தில் கரைத்து அரைசேர் அரிசிக்கஞ்சியில் இரண்டுமணிநேரத்திற்கொருதடவை கொடுத்துவரவேண்டும்.

தண்ணீரில் உப்பைக்கலந்து அப்போதைக்கப்போது குடிப்பிக்கவேண்டியது. இந்த ரோகம் சாதாரணமாய்க் கொழுத்திருக்கும் மாடுகளுக்கே வருவதினால் இது மந்தையில் கண்டபோது சுகமாயிருக்கும் மாடுகளுக்கு க-ம் நெம்பர் பேதிமருந்தைக் கொடுத்துப் பிறகு சாதாரணமான புல்லில் உப்பைக்கலந்து கொடுக்கவேண்டும். கட்டிவளர்க்கும் மாடுகளாயின் அவைகளைக் கொஞ்சநேரம் நடமாட அவிழ்த்துவிட்டுக் கட்டவேண்டியது.

மாட்டின் தொண்டையின்கீழ் தொங்கும் அலைதாடியில் மூன்று அங்குலப்பிரமாணம் தோலையெடுத்துத் தூக்கிப்பிடித்துக்கொண்டு அதன்கீழ் கோணியூசியினால் குத்தி ஒரு கயிற்றை அதற்குள்ளிழுத்து முடியிட்டுக் கொஞ்சநாள்வரையில் அவ்விடத்தில் புண்ணாயிருக்கச் செய்யவேண்டும்.

---

## தொண்டை அடைப்பான் அல்லது கொடும்புண்ணுள்ள தொண்டை.

## MALIGNANT SORE-THROAT, SWOLLEN-THROAT, BLAIN, HAWKS, GLOSS ANTHRAX.

---

இது இரத்தங்கெட்டு, நாக்கு தொண்டை சுவாசநாளம் முதலியவைகளிலும் அவைகளின் சுற்றுப்புறத்திலும் வெகு சீக்கிரத்தில் வீக்கங்கண்டு மேய்ச்சலையும் சுவாசத்தையும் உட்கொள்ளுவதற்குக்கூடாமல் மரணத்தையுண்டுபண்ணும்படியான தொற்றுவியாதியாயிருக்கின்றது. இவ்வியாதியால் மரணம் நேரிடுவதாயிருந்தால், வியாதி கடினமானபோது இரண்டொருமணி நேரத்திற்குள்ளாகவும் வியாதி சாதாரணமானபோது இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவும் நேரிடக்கூடும். இவ்வியாதி பத்து நடைகளுக்கு வந்தால் அவைகளில் ஒருவேளை இரண்டு பிழைக்கலாம்.

குறிகள்:—சுரம் வரும். நாக்கு, வாயின்பின்பாகம், தொண்டை, தாடைகளின் மத்தியவிடங்கள், செவிகளின் கீழ்ப்பாகம் இவ்விடங்களில் வீக்கங்காணும். வாயிலிருந்து உமிழ்நீர்வடியும். விழுங்குவதற்கும் சுவாசத்தை யுட்கொள்ளுதற்கும் கஷ்டமாகும். இருமலிருக்கும். வீக்கம் வெகு சீக்கிரத்தில் அதிகரிக்கும். விழுங்குவதற்கு அதிகக் கஷ்டமாயிருக்கும். சுவாசம் விடும்போதும் கொள்ளும்போதும் அதிக ஆயாசமும் கரகரவென்னும் சத்தமுமிருக்கும். நாக்

குத்தடிப்பாய் வாயிலிருந்து வெளியே தொங்கிக்கொண்டிருக்கும். அன்றியும் அது கருமையாய் அதன்மேல் ஆங்காங்கு புண்களாய் அவைகளிலிருந்து சீழ் ஒழுகிக்கொண்டிருக்கும். வாயிலும் சுவாசத்திலும் விசேஷதுர்நாற்றமிருக்கும். காலம் கழியக்கழிய வியாதிவிர்த்தியாகி மூச்சுவிடுவதற்கு அதிகக்கஷ்டம் நேர்ந்து கடைசியில் சுவாசம் பந்திக்கப்பட்டு மாடு இறந்துவிடும்.

சிகிச்சை:—வியாதி இன்னதென்று தெரிந்தவுடனே சிகிச்சைசெய்ய ஆரம்பிக்கவேண்டும். விழுங்குவதற்குச் சாத்தியமாயிருந்தால் நெ. ௧-வது பேதிமருந்தைக் குடிப்பிக்கவேண்டியது. அதற்குமேல் சூட்டுச்கோலைக் காய்ச்சி ஒரு செவியின் அடியிலிருந்து மற்றொருசெவியின் அடிவரைக்கும் குறுக்காயும் தாடைகளின் மத்தியிலிருந்து பின்னுக்கு நீளமாயும், தொண்டை சுவாசநாளம் இவைகளின் மேலும் சுற்றுப்புறத்திலும் நன்றாய் வெந்துபோகும்படியாய்ச் சூடு போடவேண்டும். சூடுண்டவிடங்களுக்கு நெம்பர் ௰௭-வது கொப்புளமாகும் மூலாமைத்தடவித் தேய்க்கவேண்டும். இவ்வாறு சூடுபோடுவதாலும் மூலாமைத் தடவலாலும் தோல் வெந்து புண்ணாயின் தொண்டையிலும் சுவாசநாளத்திலுமிருக்கும் நோய் குணப்படும்.

முக்கால்துலாம் படிகாரத்தை அரைசேர்த்தண்ணீரில் கரைத்து அதனால் வாயை அப்போதைக்கப்போது கழுவ வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சூடாயிருக்கும் அரிசியின் தெளிவான கஞ்சி ௩ சேர். | | | | |
| உப்பு | ... | ... | ... | ... ௧ சிட்டாங்கு |
| கற்பூரதைலம் | | ... | ... | ... ௨ ,, |

இவைகளையெல்லாம் நன்றாய்க்கலந்து அரைமணிநேரத்திற்கோர்தடவை பீச்சாங்குழலினால் ஆசனவழியாய் உள்ளே பாய்ச்சவேண்டும். கஞ்சியில் உப்பைக்கலந்து குடிப்பிக்கவேண்டும். அன்றியும் ௨௭-வது நெம்பர் மருந்தைக்கலந்துகொடுக்கவேண்டும்.

கந்தகத்தையாவது அல்லது "டார்" என்னும் எண்ணெயையாவது கட்டிநெருப்பின்மேல்வைத்து புகையச்செய்து அப்புகையை மாடு உச்சுவாசிக்கும்படியாய்ச் செய்ய வேண்டும்.

விபரீதமான வீக்கத்தினால் தொண்டை கட்டிக்கொண்டு மூச்சுவிடக் கூடாமையாயிருக்கும் காலத்தில் சஸ்திரவைத்

தியம் தெரிந்தவர் முனையும் கூர்மையுமுள்ளச் சிறிய கத்தியினால் சுவாச நாளத்தின் வீக்கமில்லாதவிடத்தில் கிறித் தொண்டிசெய்து அத்தொண்டியில் சிறிய மூங்கில்குழலை நுழைத்துக்கட்டி அதன்வழியாய் காற்று புகுந்துபோகும்படியாய்ச் செய்தால் செத்துப்போகவிருந்த அக்காலத்தின் கண்டம் நீங்கிப்போகும். தொண்டையின் வீக்கம் நீங்கிப்புண்ணுறிச் சுவாசமாட அனுகூலித்தபோது அக்குழலை யெடுத்துவிட்டு அக்குழலிருந்தவிடத்திற்கு ஏதாவது ஓர் முலாமைத் தடவினால் காயமாறிச் சொஸ்தமாவதோடு இரந்திரமும் மூடிப்போகும்.

---

## கழிச்சல்.

## DIARRHŒA, LOOSENESS OF BOWELS.

---

ஆகாரகோசங்களின் நிலையும் குடல்களின் நிலையும் கெட்டுப்போவதால் மலம் நீராயிளகி அடிக்கடிப்போய்க்கொண்டிருக்கும். அஜீரணத்தையுண்டுபண்ணும் புல் தழைமுதலியவைகளையும் விஷ மூலிகைகளையும், முன் கார் மழையினாலுண்டாகும் தளிர் புல் முதலியவைகளையும், சதா நீர் நின்றிருக்கும் பள்ளத்தாக்குகளில் முளைத்திருக்கும் புல் முதலிய மூலிகைகளையும், வேறு ஆகாரங்களையும் மிதமீறியுண்பதினாலும், கலங்கல் அழுகல்முதலிய நீர்களைக் குடிப்பதினாலும் இந்நோயுண்டாகும்.

வேனிற்காலத்தில் (கோடை காலத்தில்) அதிக வெப்பத்தினாலும், மழைகாலத்தில் அதிககாற்றுமழைகளின் குளிர்வாதையாலும் கழிச்சல் காண்பதுண்டு.

குறிகள்:—மிகவும் தெளிவான சாணத்தை மாடு அப்போதைக்கப்போது கழித்துக்கொண்டிருக்கும். இதுவே நீடிக்குமாயின் மாடு முக்கத்தொடங்கும். வயிற்றில் குலையிருப்பதாகத் தோற்றும். சில சமயத்தில் சாணத்துடன் இரத்தங்கலந்துபோகும். மாடு மேய்ச்சலையும் நீரையும் சரியாகக் கொள்ளும்.

சிகிச்சை:—உணவின் காரணத்தால் நோய் நேரிட்டிருந்தால் அவ்வுணவைநீக்கி வேறு நல்லபுல் முதலிய உணவுகளைக்கொடுக்கவேண்டும். வெப்பத்தினாலாவது அல்லது குளிர்காற்றின் மூலத்தினாலாவது இந்நோய் நேரிட்டிருந்தால்

மாட்டைத் தொழுவத்தில்கட்டி உபசரிக்கவேண்டும். குடிப்பதற்கு அரிசி கேழ்வரகு இவைகளின் கஞ்சிகளையேகொடுக்கவேண்டும். நெம்பர் ௰-வது மருந்தைக்கொடுக்கவேண்டியது. நோய் நெடுநாள்வரைக்கும் நீடித்திருந்தால் நெம்பர் ௯-வது அல்லது ௨௯-வது மருந்தைக் கொடுக்கவேண்டியது. மாடு மிகவும் மெலிந்துபோகுமாயின் நெம்பர் ௭-வது அல்லது ௯-வது மருந்தைக் கொடுக்கவேண்டும்.

---

## சீதபேதி, இரத்தபேதி.

## DYSENTERY, BLOODY FLUX.

---

பெரிய குடலினுடைய நுனியினது உட்பாரிசத்தில் இரத்தங் கட்டிக்கொண்டு புண்ணாகிச் சாணத்துடன் சீதம் இரத்தம் சீழ்முதலியவைகள் கலந்து போய்க்கொண்டிருக்கும்.

அஜீரணத்தை யுண்டுபண்ணும் புல் தழைகளைத் தின்பதினாலும், அழுக்குநீரைக் குடிப்பதினாலும், வேனிற்காலத்தில் பள்ளத்தாக்குகளில் விளைந்திருக்கும் புல்லைத் தின்பதினாலும் இராக்காலத்தில் குளிரிலும் பகற்காலத்தில் வெயிலிலும் இருப்பதினாலும் அதிகமான மழை காற்றுக்குளிரினாலும் இந்நோயுண்டாகும்.

கழிச்சல் பெரியநோவு முதலியவியாதிகளின் அந்தியத்தில் இவ்விரத்தபேதி காண்பதுண்டு.

குறிகள்:—நடுக்கலுடன் காய்ச்சல்வரும். அதன் பிறகு சிலபாகம் கெட்டியாயும் சிலபாகம் நீராயுமிருக்கும் சாணத்துடன் சீதமும் இரத்தமும் கலந்து அப்போதைக்கப்போது போய்க்கொண்டிருக்கும். சிலசமயம் ஆதியில் சிலநாள்வரைக்கும் நீராய்ப் பேதியாய்க்கொண்டிருந்து அதன்மேல் சீதமும் இரத்தமும் காணும். வயிற்றில் நோயிருக்கும். க்ஷணத்திற்குக்ஷணம் முக்கிக்கொண்டிருக்கும். இதனால் சிலசமயத்தில் குடல்கள் ஆசனத்தின் வழியாய் வெளிப்படுவதுமுண்டு.

இந்நோயில், ஈரல் பித்தசுத்தி செய்யாமலிருப்பதால் பித்தம் இரத்தத்துடன் சேர்ந்து சரீரமுழுதும் பாவிக் கண் வாய் சர்மங்களியாவற்றிலும் மஞ்சள் வருணமாய்க் காணப்படும்.

சிகிச்சை:—கால் சேர் முத்துக்கொட்டை யெண்ணெயை ஒரு தலாம் அபீமுடன்கலந்து கொடுக்க மலசுத்தியாய் குடலிலிருக்கும் நோயிற்குக்காரணமான அஜீரணபதார்த்தங்களெல்லாம் வெளிப்பட்டு ரோகம் குணப்படும். பின்னுரைத்திருக்கிறபடி கொதிக்கும்படியான நீரில் நனைத்துப் பிழிந்த கம்பளத்தினால் வயிற்றின்மேல் ஒற்றுதல் செய்து ஈரத்தைப்போக்கி வயிற்றின்மேல் உலர்ந்த கம்பளத்தைச்சுற்றிச்சூடாகவைத்து ஓதமில்லாத தொழுவத்தில் உலர்ந்த புல்லின் படுக்கைமேல் மாட்டைப் படுத்துக்கொள்ளச்செய்ய வேண்டும். நோயதிகரிக்குமாயின் சூட்டுக்கோலைக் காய்ச்சி வயிற்றின்மேல் நீளமாயும் குறுக்காயும் சூடுபோடவேண்டும்.

நெம்பர் ௰௧-வது மருந்தைக்கொடுக்கலாம். நோய் நெடுநாள் தங்குமாயின் நெம்பர் ௩௨-வது மருந்தைத் தினத்திற்கு இரண்டுதடவை கொடுக்கவேண்டும். அரிசி கேழ்வரகு இவைகளின் கஞ்சியை ஆகாரமாகக் கொடுக்கவேண்டும். சீதம் இரத்தமுதலியவைகள் வெளிப்படுவது நின்றுபோய் சாணமும் கெட்டியானபின்பு சிலநாள்வரைக்கும் சுலபமாய் ஜீரணமாகத் தகுந்த பச்சைப்புல்முதலிய ஆகாரங்களைக் கொடுக்கவேண்டும்.

---

## இரத்தமூத்திரம்.

## RED-WATER, BLACK-WATER, BLOODY URINE.

---

இரத்தம் உற்பத்தியாகத் தகுந்த ஆகாரயானங்கள் கிரமமாய் ஜீரணமாகாமலிருக்க அவைகளால் உண்டாகும் இரத்தம் மிகவும் தெளிவாயும் தோஷமுள்ளதாயுமிருப்பதினால் மாடு அதிகமாய் க்ஷீணித்துத் துர்பலமாகும். அன்றியும் மூத்திரத்துடன் இரத்தமுங் கலந்து போய்க்கொண்டிருக்கும்.

எப்போதும் நீர் நின்றிருக்கும் பள்ளத்தாக்கில் முளைந்திருக்கும் புல் தழைகளை மெல்லுவதினாலும் அங்கிருக்கும் (சேற்றுநிலத்தின்) அழுக்குநீரைக் குடிப்பதினாலும், வெட்டைப்பூமியிலுண்டாயிருக்கும் காடுமுரடான புல்முதலிய அஜீரணபதார்த்தங்களைத் தின்பதினாலும் உற்பத்தியாகும்படியான இரத்தம் தோஷமுள்ளதாயிருக்கும். அத்தோஷநிவர்த்திக்காகவே தேகசுபாவத்தை அனுசரித்து இந்நோயுண்டாகிறதென்றும் மூத்திரத்தின்வழியாய் அது வெளிப்படுமென்றும் காண்கிறது.

குறிகள் :—சுகங்கெட்டுப்போம். மாடு மயிர்க்கூச்சடைந்து முதுகை வளைத்துக்கொண்டு மேய்ச்சலையும் அசைபோடுதலையும் கொஞ்சம் வணாக்கும் விட்டுநிற்கும். இரண்டொருநாள் பேதியானபின்பு மலம்கட்டிக்கொள்ளும். வயிறும் உப்பியிருக்கிறதாகத் தோன்றும். மலம் கட்டிக்கொண்டபிறகு மூத்திரம் சிவப்புநிறமடையும். மூத்திரம்பெய்யும்போது வாதையிருக்கும். வரவர இம்மூத்திரமும் அதிகக் கறுப்பு நிறமாகும். அதில் துர்நாற்றமிருக்கும். வயிற்றில் சூலைநோயும் அதிகரிக்கும். மாடும் அதிகமாய் மெலிந்துபோகும். வாய், கொம்பு, காது, கால்கள் சீதளங்கொண்டிருக்கும், (குளிர்ச்சியடைந்திருக்கும்.) இரத்தமுங்குறைந்து வாய் கண்ணிமைமுதலியவைகளின் உட்பாரிசத்தில் வெண்மையாயிருக்கும். தேக ஆயாசத்தினால் மாடு படுத்துக்கொண்டு எழுந்திருக்கக்கூடாமல் கடைசியாய் சுவர்க்கஞ்சேரும்.

சிகிச்சை :—நெம்பர் ௨-வது பேதிமருந்தைக்கொடுத்து மலசுத்தி செய்விக்கவேண்டும். அதன்பிறகு நெம்பர் ௭-வது அல்லது ௯-வது அல்லது ௨௯-வது மருந்தைக் கொடுக்கவேண்டும். மாடு அதிக துர்ப்பலமானபோது நெம்பர் ௩௰-வது மருந்தைக் கொடுக்கவேண்டும். அரிசி கேழ்வரகு இவைகளின் கஞ்சியையும் சாராயத்தையும் கொடுத்துக்கொண்டுவரவேண்டும். இந்நோய் மந்தையில் கண்டபோது மாடுகளை அவைகள் அப்போது மேய்ந்துகொண்டிருந்த புற்புலங்களிலிருந்து வேறுபடுத்தி நல்ல பச்சைப்புல்லுடன் உப்பைக்கலந்து உண்பிக்கவேண்டும்.

---

## இருமல்.

## BRONCHITIS.

---

காற்று மழை குளிர் இவைகளிருக்கும் காலங்களில் வாயினுட் செல்லும் குளிர்காற்று சுவாசகோசத்திற்குப் போகும்வழியில் தொண்டைக்கும் சுவாசநாளத்திற்கும் பட்டு அவ்வவ்விடங்களில் இரத்தங்கட்டிக்கொண்டு இருமலையுண்டாக்கும்.

கன்றுகளின் தொண்டையிலும் சுவாசநாளத்திலும் நூலைப்போன்ற சிறிய கிருமிகள் சேர்ந்து இருமலையுண்டுபண்ணும்.

குறிகள் :—ஆதியில் கோழையில்லாத பொடியிருமலிருக்கும். மூச்சு அதிகமாகும். உச்சுவாச நிச்சுவாசங்களில் இரைதல்போன்ற ஓர்வகைச் சத்தம் கேட்கும். கடைசியாய் கோழை அதிகரித்து இருமும்போது கபமும்விழும். மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் கோழைவரும்.

கிருமிகள் காரணமாகக்கன்றுகளுக்கு இருமலுண்டானபோது கோழையில்லாத பொடியிருமல் க்ஷணத்திற்கு க்ஷணம் கண்டுகொண்டிருக்கும். கன்று முன்கால்களை சசாய்த்துத் தலையைத் தாழ்த்தி நின்றுகொண்டிருக்கும். கிரமமாக மெலிவடைந்து பதினைந்து அல்லது இருபது நாட்களுக்குள் மாடு மாணத்துக்குள்ளாகும்.

சிகிச்சை :—ஈரமில்லாதிருக்கும் தொழுவத்தில் உலர்ந்த புற்படுக்கைமேல் மாட்டைக் கட்டிவைக்கவேண்டும். இராக்காலத்தில் கழுத்து மார்புமுதலியவைகளின்மேல் முழுதும் கம்பளத்தைச் சுற்றிவைக்கவேண்டும். நெம்பர் ௩௨-வது மருந்தைக் கொடுக்கவேண்டும். தொண்டை சுவாசக்குழல்களின்மேல் காய்ச்சிய சூடுக்கோலினால் நீளமாயும் குறுக்காயும் சூடுபோடவேண்டும். இருமல் அதிகரித்திருந்தால் சூட்டுவரிகளின்மேல் நெம்பர் ௰௭-வது புண்ணுக்கும் மூலாமைத் தடவித் தேய்க்கவேண்டும். கந்தகத்தைத் தொழுவத்தில் புகையச்செய்து அரைமணிநேரம் அப்புகையை உட்கொள்ளச் செய்யவேண்டும்.

புழுவின்காரணத்தால் கன்றுகளுக்கு இருமல் கண்டிருந்தால் நெம்பர் ௩௨-வது மருந்தைக்கொடுக்கவேண்டும்.

அரிசி கேழ்வரகு முதலியவைகளின் கஞ்சியைச் சுடுகையுடனே கொடுத்துவரவேண்டும்.

---

## சுரம்-காய்ச்சல்.

## FEVER.

சரீரத்தின் இரத்த மாமிசாதிகளிலிருக்கும் உஷ்ணமானது இயற்கையாயிருப்பதைப்பார்க்கிலும் அதிகரித்திருந்தால் அதனைச் "சுரம்" அல்லது "காய்ச்சல்," என்று சொல்லப்படும்.

ஆகார நித்திரை வேலைமுதலியவைகளில் ஏற்றக்குறைச்சலாவதாலும் காற்று மழை குளிர் முதலியவைகளாலும் வரும் சுரம் சாதாரணச் சுரமென்றும் "பெரியநோவு," "கா

ல்சுரம்" முதலிய நோய்களால் வரும்சுரம் அந்த அந்த நோய்களின் குறியென்றும் அழைக்கப்படும்.

குறிகள்:—மயிர் சிலிர்சிலிர்த்துத் தேகம் நடுக்கல்கொண்டு வாய் தோல் கொம்பு கால்கள் இவையெல்லாம் உஷ்ணமாகும். வாய் உலர்ந்திருக்கும். கண் சிவப்பாயிருக்கும். ஜலமலங்கள் பந்தித்திருக்கும். தாகமதிகரித்திருக்கும். கறக்கும் மாடாயின் பால் வற்றிப்போகும். மாடு மேய்ச்சலைவிட்டு நின்றிருக்கும்.

சிகிச்சை:—நெம்பர் உ-வது மருந்தை முதலில் கொடுத்து மலசுத்தி செய்வித்துப் பிறகு நெம்பர் ச-வது அல்லது ரு-வது மருந்தைக் கொடுக்கவேண்டும். காற்று மழை முதலியவைகளால் நேரிடும் சீதளத்தின் வாதையில்லாத தொழுவத்தில் உலர்ந்த புற்படுக்கைமேல் கட்டவேண்டும். பச்சைப் புல்லையும் அரிசி கேழ்வரகு முதலியவைகளின் கஞ்சியையும் கொடுத்துவரவேண்டும்.

---

## வயிற்றுப்பிசம்.

## HOVEN, TYMPANY, FOGSICKNESS, DEW—BLOWN, "BLOWN."

வேனிற்காலத்தில் தகுந்த புல்முதலிய ஆகாரங்கள் கிடைக்காமல் பசியினால் வாதைப்பட்டுக்கொண்டிருக்கும்போது முன் கார்மழை சொரிந்து புல்தழைகள் தளிர்க்க அவைகளை மிதமீறி மாடு உண்ணும். இவ்வாறு உண்ட ஆகாரம் தகுந்தபடி ஜீரணமாகாமல் விபரீதவாயுவுண்டாகி ஆகாரகோசங்களில் அதிகமாய் நிறைந்து வயிற்றுப்பிசத்திற்குக் காரணமாகின்றது.

குறிகள்:—வயிறு ஊதிக்கொண்டிருக்கும். இடது பக்கத்துவயிறு அதிகமாய் ஊதிக்கொண்டிருக்கும். அதன்மேல் விரலைக்கொண்டு தட்டிப்பார்த்தால் மத்தளத்தொனி போன்ற சத்தமுண்டாய் வயிற்றில் காற்று நிறைந்திருப்பது தெரியும். விரலினால் அழுத்திப்பார்த்தால் கொஞ்சம் மெதுவாயும் உள்ளே காற்று நிறைந்திருப்பதாயும் காணப்படும். மாடு தேகத்தை இறுக்கிக்கொண்டு கழுத்தை முன்னுக்கு நீட்டி நிச்சுவாசிப்பதற்குக் கஷ்டமாய் வேதனைப்பட்டுக்கொண்டு நடக்கமுடியாமல் நின்றிருக்கும். வயிற்றுப்பிசம் விரைவில் விர்த்தியாகும். மாடு மூச்சைவிடுவதற்கும் உட்கொள்வதற்கும் முடியாமலும், நடப்பதற்கும் படுப்பதற்

கும் கூடாமலும் வருத்தப்பட்டு கடைசியில் மூச்சு பந்தித்துப் போவதால் பிராணனை விட்டொழியும்.

சிகிச்சை:—நோயின்னதென்று தெரிந்தவுடனே நெம்பர் அ-வது மருந்தைக்கொடுக்கவேண்டும். அதனால் எப்பமுண்டானால் வயிற்றிலிருக்கும் காற்று வெளிப்பட்டுப்போய்ச் சுகமாகும். உப்பிசமுதிர்ந்து மாட்டின் உச்சுவாசநிச்சுவாசங்களுக்கு அதிகவருத்தமுண்டாக்குவதைக் கண்டபோது கடைசிப் பக்கத்தெலும்புக்கும் இடுப்பெலும்புக்கும் மத்தியில் இடது அள்ளில் கூர்மையும் முனையுமுள்ள சிறிய கத்தியினால்குத்தி ஆகாரகோசத்திற்குத் துளைசெய்து அத்துளைக்குள் ஒருவிரல் பருமனான மூங்கிற்குழலையாவது அல்லது ரூக்காந்தட்டுக்குழலையாவது தகுந்த அளவு உள்ளே நுழைத்து அது வயிற்றிற்குள் தவிர்ந்து விழுந்துபோகாதபடி அதன் நுனிக்குச் சிறியகோலைக் குறுக்கேகட்டியிருக்கவேண்டும். அப்போது வயிற்றிலிருக்கும் காற்றெல்லாம் அக்குழலின்வழியாய் வெளிப்பட்டுப்போகும். அதன் பிறகு அக்குழலையெடுத்துவிட்டு காயத்தைத்தைத்து ஆற்றிக்கொள்ளவேண்டும். சில நாள்வரைக்கும் முதிர்ந்த பச்சைப்புல்முதலிய நல்ல ஆகாரங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்துவரவேண்டும்.

---

## அஜீரணம்.

### IMPACTION OF THE RUMEN, PLENALVIA, "GRAIN-SICK" "MAWBOUND."

சிலநாள் தகுந்த ஆகாரமில்லாதிருந்த் மாடு உலர்ந்த புல் தழை காம்பு முதலிய பதார்த்தங்களையும் நெல் முதலிய தானியங்களையும் மிதமீறி யுட்கொள்ளுவதினால் ஆகாரகோசம் மிதமீறி நிறையுமாயின் அக்கோசம் அவற்றை அப்பக்கமிப்பக்கம் புரட்டி ஜீரணிக்கச்செய்ய முடியாமையினால் அயர்தலாய் நின்றிருக்கும்.

குறிகள்:—மாடு அசைபோடாமல் ஆயாசத்துடன் நின்றிருக்கும். இடதுபக்கத்து வயிறு ஊதிக்கொண்டுவரும். அதன்மீது விரலைக்கொண்டு தட்டிப்பார்த்தால் நிலத்தின் மேல் அல்லது மரத்தின்மேல்தட்டிபடித்ததைப்போன்ற சத்தமுண்டாகும். அவ்விடத்தில் அழுத்திப்பார்த்தால் உள்ளே கெட்டியான பதார்த்தமிருப்பதுபோல் காட்டும். விரல் நுனியைக்கொண்டு அழுத்தினால் அங்கு குழிவிழும். விர

லையெடுத்தபிறகும் கொஞ்சநேரம் அக்குழிகாணும். மலம் கட்டியிருக்கும். உச்சுவாச நிச்சுவாசங்கள் அதிகரிக்கும். மாடு தனது காலைக்கொண்டாவது கொம்பைக்கொண்டாவது இடதுபக்கத்து வயிற்றைத் தேய்த்துக்கொண்டிருக்கும். வருத்தத்துடன் பல்லைக்கடித்துக்கொண்டு நின்றிருக்கும். கொஞ்சநேரம் படுத்தாலும் வலதுபக்கமாகவே படுக்கும். கடைசியாய் நிற்பதற்கும் படுப்பதற்கும் கூடாமல் கீழேவிழுந்து சுவாசம் பந்திக்கப்படுவதால் மாடு சொற்கலோகம் போய்விடும்.

சிகிச்சை:—நெம்பர் ௨-வது மருந்தோடு இரண்டொரு சட்டாக்குச் சாராயத்தைக்கலந்து வெந்நீரில் குடிப்பிக்கவேண்டும். இடதுபக்கத்து வயிற்றைக் கையினால் நன்றாகத் தேய்த்துக்கொண்டு வரவேண்டும். அதன்மேல் வெந்நீரில் நனைத்துப் பிழிந்த கம்பளத்தினால் ஒற்றுதல் செய்யவேண்டும். நெம்பர் ௨௪-வது மருந்தைக் கொடுக்கவேண்டும். ௩—௫ மணி நேரத்திற்குள் பேதி ஆகாமலிருந்தால் நெம்பர் ௨-வது மருந்தை மீளவும் கொடுக்கவேண்டும். மாடு வேதனைப் பட்டுக்கொண்டேயிருந்தால் நெம்பர் ௨௬-வது மருந்தை ஆறுமணிக்கொருமுறையாகக் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். மாடு குடிக்குமவ்வளவு வெந்நீராவது அல்லது தெளிவான கஞ்சியையாவது கொடுத்துவரவேண்டும். பேதியாகுமேயாயின் வயிற்றிலிருக்கும் அஜீரண சேஷ (மிச்சப்பொருள்) மெல்லாம் வெளிப்பட்டு மாடு சுகமடையும். பிறகு சிலநாள்வரையில் பச்சைப்புல் கஞ்சி முதலிய ஆகாரங்களைக் கொஞ்சங்கொஞ்சமாகக் கொடுத்துக் கொண்டுவரவேண்டும்.

பேதியாகாமல் மூச்சுவிடுவதற்கு அசக்தியாய் அதிக வருத்தப் பட்டுக்கொண்டிருந்தால் இடது பக்கத்து வயிற்றில் ஆறு அங்குல நீளம் சர்மத்தையும் ஆகாரகோசத்தையும் கத்தியால் கீறி ஆகாரகோசத்தில் அறுக்கப்பட்ட பக்கங்களைக் குறட்டினால் எடுத்துப் பிடித்துக் கோசத்திறகுள் கையை நுழைத்து அதனிடமிருக்கும் அஜீரண பதார்த்தங்களையெல்லாம் எடுத்து வெளியில்போட்டு இரண்டொருசேர் கஞ்சியை ஆகாரகோசத்திற்குள் வார்த்து பிறகு ஆகாரகோசத்தின் காயத்தைச்சேர்த்துத் தைத்துக் கடைசியில் சர்மத்தின் காயத்தையும் தைத்துக் குளிர்ந்த ஜலம் மூலாம் முதலியவைகளால் காயத்தை ஆற்றவேண்டும்.

## சொறி சிரங்கு.

## MANGE, ACARIASIS.

இது, ஒருவிதமான கிருமிகளினால் உண்டாகும் ஓர்வித சர்ம நோயாயிருக்கின்றது. இந்நோயிருக்கும் மாட்டைப் பரிசிக்கும் இதரமாடுகளுக்கும் அப்பூச்சிகள் தொற்றிக் கொண்டு அந்நோயை யுண்டாக்கும்.

முதலில் சிறிய சொறியாகக்கண்டு பின்பு கொப்புளங்களாகி யுடைந்து அவைகளுள் பிசினைப்போன்றிருக்கும் சீழ் காற்றினால் உலர்ந்து தோலின்மேல் பக்குகட்டி சாம்பல் வருணமாயிருக்கும். இக்கிருமிகள் சேர்ந்த விடங்களிலெல்லாம் மேற்சொல்லியபடி புண்ணும் மயிருதிர்ந்துபோய் விடும்.

சிகிச்சை :—அந்தமாட்டை வேறாகக்கட்டி மேய்க்கவேண்டும். வெந்நீர் சப்பு முதலியவைகளால் புண்ணை நனைத்துக் கழுவி பக்குகளை யெடுத்துவிட்டு அதனடியிலிருக்கும் புண்ணின்மேல் கந்தகப்பொடியையும் தேங்காயெண்ணெயையும் கலந்து செய்யப்பட்ட மூலாமைத்தடவி நன்றாகத் தேய்க்கவேண்டும். கந்தக மூலாமோடு "டார்" என்னும் கீலெண்ணெயைக் கலந்தால் உத்தமமாயிருக்கும். நெம்பர் 8-வது மருந்தைத்தடவித் தேய்க்க வேண்டும். அரை சேர் வெந்நீரில் ஒருதுலாம் புகையிலைப் பொடியைப்போட்டு ஒருமணிநேரம் மூடிவைத்து அக்கஷாயத்தைக் கொண்டு அப்புண்களைக் கழுவினால் பூச்சிகள் மாண்டுபோம். புண்களும் ஆறிப்போம்.

---

## முறிவு.

## FRACTURE.

பலவித அபாயங்களினால் தேகத்தில் கால்முதலிய நானாபாகங்களின் எலும்புகள் முறிந்துபோம். சிலசமயங்களில் எலும்பு முறிந்தவிடங்களில் சர்மமாமிசாதிகள் காயப்பட்டு அவ்வழியாய் முறிந்துபோன எலும்பு வெளியே காணும். இப்பேர்ப்பட்ட காயங்களை உபசரித்து ஆற்றாவிட்டால் அவை அழுகிப்போம். அவைகளில் புழுக்களும் சேரும். கடைசியில் மாடு மரணத்துக்குள்ளாய்விடும்.

சிகிச்சை :—மாட்டைப் படுக்கச்செய்து ஒடிந்த காலின் கீழும் மேலும் பிடித்திழுத்து எலும்பின் முறிந்த நுனிகளை

யொன்றுக்கொன்றைப் பொருத்திச் சமன்செய்து அதன்மேல் துணியைச் சுற்றவேண்டும்.

கைவிரலளவு அகலமாய்ச் சீவிய மூங்கில் தப்பைகளை ஒன்றன்பக்கமொன்றாய் வைத்துக் கயிற்றினால் நெய்து ஜோடித்து வேண்டிய அளவு அகலமாயும் நீளமாயும் செய்து அதனுட்பாகத்திற்குப் பழைய துணியை மடித்துவைத்து மிருதுவாகவிருக்கும்படிசெய்து அதனை முறிந்தகாலின்மேல் சுற்றிலும் சுற்றி அதன்மேல் துணியைக்கொண்டாவது கயிற்றைக்கொண்டாவது தகுந்தபடி பிகுவாய்க்கட்டி உள்ளே முறிந்திருக்கும் எலும்பின் முனைகள் அசைந்து பிசகிப்போகாதபடி வைத்திருக்கவேண்டும். இவ்வாறு கட்டுவதினால் அக்கட்டின் கீழ்ப்பாகத்தின் காலிலிருக்கும் இரத்தம் மேலுக்கு ஓடக்கூடாத வகையாய்ப் பிகிந்து கட்டக்கூடாது.

இவ்வகையாய்க்கட்டப்பட்ட எலும்பின் முறிந்த முனைகளின் சுற்றிலும் எலும்பாகத்தகுந்தபதார்த்தங்கள் உண்டாகிக் கிரமமாக ௧-௨ மாதத்திற்குள் முறிந்த எலும்பின் துனிகளை ஒன்றுக்கொன்று சேரச்செய்து ஊனமில்லாத வகையாய்ச் சரிசெய்யும்.

தோலின்மேல் காயமிருந்தால் அக்காயத்தின்மேல் வரும் மூங்கில் தப்பைகளை அறுத்துவிட்டுக் காயம் காணும்படியாய்ச்செய்து அத்துளையில் அவுடதங்களைப்போட்டுக் காயத்தை ஆற்றவேண்டும்.

கொம்புக[illegible]றிந்தால் இரத்தம் அதிகமாகப் பெருகிவரும். துணி[illegible] காயத்தின்மேல் சுற்றி நன்றாயமுக்கினால் இரத்தம்[illegible]விடும். நில்லாதாயின் காய்ந்திருக்கும் சூட்டுக்கோலினால் இரத்தம் வருமிடங்களில் சுட்டு இரத்தத்தை நிறுத்திய பின்பு அவுடதநீர் மூலாம் முதலியவைகளைத் தடவிக் காயத்தை ஆற்றவேண்டும்.

கீலெண்ணெய் (Tar-டார்) தடவிய துணியைச் சுற்றிக் காயத்தை ஆற்றவும் கூடும்.

---

## கீல்பிசகுதல் - பொருத்துப்பெயர்வு.
## DISLOCATION—LUXATION.

சிலவகை அபாயங்களினால் தொடை கால் முதலியவைகளின் எலும்பின் முனைகள் தத்தம் கீல்களிருக்குமிடத்திலிருந்து நழுவி வேறிடத்தில் சேரும். மாடு அவ்வாறு கீல் பிசகிய காலை யூன்றிநிற்பதற்கும் அதனால் நடப்பதற்

கும் கூடாமலிருக்கும். அக்கினில் ஏற்றக் குறைச்சல் காணும். கீல் பிசகிய கால் அசைக்கக்கூடாமல் பிருவடைந்திருக்கும்.

துடையின் கீல் பிசகித் துடையெலும்பின் தலைமேலுக்கு நழுவியிருந்தால் அந்தக்கால் நீளத்தில் குறைந்து நிலத்தில் பதியாமலிருக்கும்.

முழங்காலின் கீல் பிசகினால் பின்னுக்கு நீட்டப்பட்டுக் குளம்பின்நுனி நிலத்தில் பட்டிருக்கும். சிலவேளைகளில் முன்கால்களின் கீல்கள் பிசகிப்போம்.

சிகிச்சை:—மாட்டைப் படுக்கச்செய்து கீல் பிசகியிருக்கும் காலுக்குக் கயிற்றைக்கட்டி அதற்குக்குறுக்காக ஓர் மூங்கிலைக்கட்டி அம்மூங்கிலைச் சிலர் இழுத்துக்கொண்டிருக்குங்காலத்தில் ஒருவன் அவ்வெலும்பின் தலையைக் கையால் தள்ளி அதன் கீலினிடம் சேர்த்தால் கீல் கூடிவிடும். அப்போது "லொட்" டென்னும் சத்தம் உண்டாகும்.

பின்காலின் முழங்காலிலுள்ள கீல் பிசகிக் கால் பின்னுக்கு நீட்டப்பட்டிருக்கும்போது கணுக்காலில் கயிற்றைக் கட்டி அக்கயிற்றை அதன் கழுத்திற்குச்சுற்றிப் பலமாக முன்னுக்கிழுத்தால் கீல்கள் கூடிக்கொள்ளும். அதன்பிறகு சிலநாள்வரைக்கும் அக்கயிற்றைக் கழுத்திலேயே கட்டிக் கால் பின்னுக்கு நழுவாமல் வைத்திருக்கவேண்டும்.

துடையின் கீல் பிசகியிருந்தால் அக்காலுக்குக் கட்டின மூங்கிலை இருவர் முதுகின்மேல் வைத்துக்கொண்டு அத்துடையின் குறுக்கில் நுழைத்த மற்றொரு மூங்கிலுக்குக் கால்களை வைத்து நிமிர்ந்திழுக்கும்போது இன்னொருவன் துடையெலும்பின் தலையை அதன் கீலுக்குப்போய்ச் சேரும்படி உருவித்தள்ளினால் கூடிவிடும். அப்போதும் "லொட்" டென்னும் சத்தம் கேட்கும். கீல் சேர்ந்த பிறகு பிசகியிருந்த கீலின்மேல் சக்ராகாரமாகச் (வட்டமாக) சூடுபோடவேண்டும்.

---

## குடல் வெளிப்படல்.

## PROLAPSUS OF RECTUM.

பலகாரணங்களால் வயிற்றினுள் மலம்பந்திக்கப்பட்டிருக்க மலத்தைக் கழிக்கவேண்டுமென்று மாடும் அதிகமாய் முக்கும்போது ஆசனத்தின் அருகிலிருக்கும் குடல் அவ்வழியாய் வெளியே வந்துவிடும். இரத்தபேதி யுண்டாயிருக்

கும்போதும் பசுக்கள் கன்றைப் பெறும்போதும் அதிகமாய் முக்குவதினால் குடல் வெளிப்படுவதுமுண்டு. குடல் வெளிப்பட்டபிறகு ஆசனத்துவாரம் பந்தி[illegible]க வெளியிலிருக்கும் குடலில் இரத்தம் நிறைந்து வீங்கிப்போகும். பிறகு தனக்குத்தானே வயிற்றிற்குள் போகாமல் தொங்கிக்கொண்டிருக்கும். காலவிளம்பமானால் வெளிப்பட்டிருக்கும் அப்பாகம் அழுகிப் புண்ணாய்க் கரைந்துபோய்விடும்.

சிகிச்சை:—குடல் வெளிப்பட்டவுடனே அதனை உள்ளேதள்ளிவிடுவது சுலபம். கால விளம்பமானால் கொஞ்சம் வருத்தமாகும்.

வெளியிலிருக்குங் குடலைத் தண்ணீரினால் மெதுவாகக்கழுவிக் கைக்கு ஆமணக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு ஆசனத்துவாரத்தினிடமிருக்கும் பாகத்தை முன்னும் வெளியிலிருக்கும் பாகங்களைக் கிரமக்கிரமமாய்ப் பின்னும் மெதுவாக வயிற்றிற்குள் தள்ளவேண்டும். குடல் வீங்கியிருந்தால் பருத்த ஊசியினால் ஆங்காங்குக் குத்திப்பிதுக்கினால் இரத்தநீர் வெளிப்பட்டுக் குடலின் வீக்கம் குறைந்துபோகும். அதன்பிறகு குடலை உள்ளே தள்ளவேண்டும். பிறகு குடல் வெளிவிழுவதற்குவிடாமல் ஆசனத்தைப் பிகுவாகப் பந்தித்து வைபபதற்காக ஒருதுலாம் அபினைக் கொடுக்கவேண்டும். நல்ல பச்சைப்புல்லை மாட்டிற்குப போடவேண்டும்.

---

## கர்ப்பகோசம் வெளிப்படுதல்.

## PROLAPSUS OF UTERUS.

பசு, கன்றைப் பெறும்போது பலவித அசந்தர்ப்பங்களினால் கற்பகோசம் வெளிப்படுவதுண்டு. அவ்வாறு கற்பகோசம் வெளிவிழுந்தபிறகு கால விளம்பத்தின்மேல் அதில் இரத்தம் நிறைந்து வீங்கிக்கொள்ளும். அதனைச்சரியாக உள்ளேதள்ளிப் பொருத்தாமற்போனால் புண்ணாய் அழுகிவிடும். பசுவும் கடைசியில் இறந்துபோம்.

சிகிச்சை:—கற்பகோசத்தைத் தண்ணீரினால் கழுவிப் பசுவின் முன்கால்களைக் கொஞ்சம்பள்ளமானவிடத்திலும் பின்கால்களைக் கொஞ்சம்மேடானவிடத்திலும் ஊன்றிநிற்கச்செய்து கற்பகோசத்தை மெதுவான துணியினால் மேலுக்கெடுத்து பசுவின் சரீரத்திற்குச் சமீபித்திருக்கும் கோசத்தின் பாகத்தை முன்னாகவும் இப்புறத்திருக்கும் பாகத்தைக்

கிரமமாய்ப்பின்னாகவும் உள்ளுக்குத்தள்ளி கற்பகோசத்தையெல்லாம் வதிற்றினுள் சரியாய்ச் சேர்க்கவேண்டியது. அதன்மேல பசு முக்காமலிருப்பதற்கு ஒருதுலாம் அபீமைத்தின்னச்செய்யவேண்டும்.

ஒருசாண் அகலமாயும் வேண்டிய அளவு நீளமாயுமுள்ள துணியை வேண்டியவிடத்தில்தக்கவாறு கிழித்துக் கழுத்திலிருந்து முதுகின்மேல்போக்கி வாலின்கீழ் இழுத்துத் தொடைநடுவில் நுழைத்து வயிற்றின்கீழ்செலுத்தி இடுப்பின்மேல் பிருவாகக்கட்டி மலமூத்திரங்கள் வருமிடங்களில் அதைத்தக்கவாறு கிழித்துத் துளைசெய்யவேண்டும். இவ்வகையாய் சிலநாள்வரையில் கட்டிவைத்துச் சரியானபிறகு அவிழ்த்துவிடவேண்டியது.

---

## பிரசவம்—கன்றுபோடுதல்.

## PARTURITION.

பசுக்கள் கருப்பந்தரித்தபின் சற்றேறக்குறைய ௨௮௰ நாட்களில் கன்றைப்பெறும். கருப்பந்தரித்தபின் ௨௬௨ நாட்களுக்குள் வெளிப்படும் கன்று பிழைப்பது அசாத்தியம். சிலசமயத்தில் ௩௱—௩௱௰ நாட்கள்வரைக்கும் கருப்பம் நின்று கன்றைப்பெறுவதுமுண்டு. படுத்துக்கொண்டோ அல்லது நின்றுகொண்டோ பிரசவிக்கும்.

பிரசவிக்கும்போது முதலில் கன்றின் முன்கால்கள் துணையாய்ச்சேர்ந்து நீண்டு வெளிப்படும். பிறகு இக்கால்களின்மேல் சாய்க்கப்பட்டதலை வெளிவரும். அதற்குமேல் கிரமமாய் சரீரத்தின் பிற்கூறுவரும்.

சிலகாரணங்களால் சிலசமயங்களில் இக்கிரமமாய்ப்பெறுவதிலும், சிலசமயங்களில் இக்கிரமம் தப்பிப்போவதிலும் கன்றின் ஜனனத்திற்குத் தடையுண்டாய் கன்றும் பசுவும் எமலோகமடையும்.

சிகிச்சை:—மேற்சொல்லிய கிரமப்படி கன்றைப்போடுவதில் தடையுண்டாய் காலதாமதமானல் பலமானமெல்லிய கயிறுகளின் நுனிகளில் சுருக்குகள்போட்டு அச்சுருக்குகளை விரல்களின் சந்துகளினல் பிடித்துக்கொண்டு அந்தக்கையைக் கருப்பைக்குள் நுழைத்து ஒருசுருக்கைக் கன்றின் கீழ்தவடைக்கும் மற்றிரண்டு சுருக்குகளை முன்கால்களின் கணுக்கால்களுக்கும் போட்டு அக்கயிறுகளினல் நிதானமாய் கன்றை யிழுத்து வெளிப்படுத்தவேண்டும்.

மேற்சொல்லிய கிரமந்தப்பி

(க) தலையும் முன்காலிலொன்றும் முன்னாக வெளிவந்திருந்தால், தலையையும் அக்காலையும் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு கயிற்றின் சுருக்கைக் கையினால் பிடித்து அந்தக் கையைக்கருப்பப் பைக்குள்செலுத்தி மடித்துக்கொண்டிருக்கும் மற்றொரு முன்காலைப்பிடித்து அதன்கணுக்காலில் இச்சுருக்கைப்போட்டு அக்கன்றின் மார்பைப்பிடித்துக் கொஞ்சம் முன்னுக்குத்தள்ளிக் கயிறுகட்டியிருக்கும் காலை யிழுத்து வெளிப்படுத்திய பிறகு இரண்டு கால்களையும் தலையையும் இழுத்துக் கன்றை யெடுக்கவேண்டும்.

(உ) தலைமாத்திரம் காணப்பட்டுக் கால்கள் வெளியே வராதிருந்தால், கீழ்த்தவடைக்குக் கயிறுகட்டிப் பிடித்துக்கொண்டு தலையை வயிற்றிற்குள்தள்ளிக் கையை உள்ளே நுழைத்து இரண்டு முன்கால்களுக்கும் கயிற்றைப் பிருவாய்க்கட்டி அவைகளினாலிழுத்துக் கன்றை வெளியே கொண்டுவரவேண்டும்.

(ங) கால்களிரண்டும் வெளிவந்து தலைவராமல் பின்னுக்கு வளைந்திருந்தால், கால்களுக்குக் கயிற்றைக்கட்டிப்பிடித்துக்கொண்டு கையை உள்ளேபோக்கிக் கீழ்த்தவடைக்குக்கயிற்றைக்கட்டி இரும்பு அல்லது மரக்கொக்கியைக் கைப்பக்கத்தில் நுழைத்துக் கன்றின் கட்குழியில் மாட்டிக் கன்றின்மார்பை உள்ளேதள்ளித் தலையை வெளியே இழுக்கவேண்டும்.

(ச) தலையும் பின்னுக்குத்திரும்பிக் கழுத்துமாத்திரம் காணப்படுமாயின், மேல் மூன்றாவதில் சொல்லப்பட்ட வகையாகவே செய்யவேண்டும்.

(ரு) புறங்கழுத்துக் காணப்பட்டுக் காலொன்றுமாத்திரம் வெளியேவந்தால், அக்காலைக் கயிற்றினால் கட்டிப்பிடித்துக்கொண்டு பின்பு மூன்றாவதில் சொல்லியிருக்கும் முறையாகச் செய்யவேண்டும்.

(சு) கன்றின் பின்கால்களிரண்டும் முன்னேவந்தால் அவைகளைப்பிடித்து இழுத்து அப்படியே கன்றை வெளியாக்கவேண்டும்.

## கண்ணோய்.

## OPHTHALMIA.

எவ்வகையிலாவது கண்ணிற்கு அடிபடுவதினாலும், புல்-காம்பு-மணல்முதலியவைகளின் பொடிகள் கண்ணில் வி

ழுவதினாலும் எரிச்சலையுண்டாக்கும். புகைபடுவதினாலும் சில்லென்றிருக்கும் குளிர்காற்றுத் தாக்குவதினாலும் கண்ணோயுண்டாகி முழிகளின் மேற்போர்வையிலும் கண்ணிமைகளின் உள்ளிட்ட போர்வையிலும் இரத்தங்கட்டிக்கொண்டு சிவப்பாய் கண்களிலிருந்து நீர்வடிந்து வெளிச்சத்தைப்பார்ப்பதற்குக் கூடாமற்போம்.

சிகிச்சை:—இமைகளைப் புரட்டிப்பார்த்துப் புல்-கொம்பு முதலியவைகளின் பொடி யேதேனுமிருந்தால் எடுத்துவிட்டுப் பிறகு மெல்லிய துணியைத் தண்ணீரில் நனைத்துக் கண்களின்மேல் போட்டு அதனை அப்போதைக்கப்போது நீரினால் நனைத்துக்கொண்டுவந்தால் நோய் குணமாகும்.

இதனால் குணமாகாவிட்டால் கால்துலாம் படிக்காரத்தைக் கால்சேர் தண்ணீரில் கரைத்து அந்நீரில் கொஞ்சம் கண்களில் விடவேண்டும். அன்றியும் அந்நீரில் மெதுவான பழையசலவைத்துணியை நனைத்துக் கண்ணின்மேல்போட்டு அதன்மேல் அந்நீரையே எப்போதும் வார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

பச்சைவருணத்துணியை அக்கண்ணிற்கெதிராய் அல்லது அதற்குமேல்கட்டி அக்கண்ணினால் வெளிச்சத்தைப் பார்க்காமலிருக்கும்படியாய்ச் செய்யவேண்டும்.

---

## பால்மடி நோய்.

## MAMMITIS.

கொழுத்திருக்கும் தலையீற்றுப்பசுக்கள் தலையீற்றுக் கன்றுகளைப் பெறுங்காலத்தில் மடியில் பால்நிறைந்திருந்தாலும், வெய்யிற்காலத்தில் தேகத்தில் அதிகசூடாயிருக்கும்போது குளிர்ந்தகாற்று அதிகமாய்ப் படுவதாலும் “கால்நோய்” முதலிய சிலநோய்களின் காரணத்தாலும், மடியில் பால்நிறைந்திருந்தால் அதனைச் சமயமறிந்து அவசியம் கறக்காமல் நெடுநேரம் விட்டிருப்பதாலும், கறக்கும்போது பூர்த்தியாய்க்கறக்காமல் விடுவதாலும் பால்மடிநோயுண்டாகும்.

குறிகள்:—மடி வீங்கிக்கெட்டியாயும் தொட்டால் நோயுமிருப்பதாய்க்காணும். அதன் மேற்றோல் சிவப்பாயிருக்கும். பின்காலொன்றுக்கு நொண்டுதலுண்டாகும். காய்ச்சல்காணும். பால் அதிகமாய் வற்றிப்போம். கறந்தால் கெட்ட

உடைந்தபாலாவது அல்லது ஒருவகை நீராவது வருவதோடு இரத்தமும் சேர்ந்துவரும். இதற்குள் நோய்பின்னடைந்து சுகமாவதுமுண்டு. அவ்வாறுகாதபோது மடியெல்லாம் அல்லது ஓர்பாகத்தில் சீழும்கட்டியு முண்டாகியுடைந்து ஒழுகிப்புண்ணாகி அழுகி விபரீதமாகும்.

சிகிச்சை:—நெம்பர் க-வது அல்லது உ-வது பேதிமருந்தைக்கொடுத்து மலசுத்தி செய்விக்கவேண்டும். ஒருநாளைக்கு இரண்டுதடவை ஒவ்வொருதுலாம் பொட்டிலுப்பைக் குடிக்கும் நீரில்கலந்து கொடுக்கவேண்டும். கறப்பதினாலாவது, கன்றுக்கு ஊட்டுவிப்பதினாலாவது மடியிலிருந்து பாலை யெச்சமின்றி நீக்கவேண்டும். அதற்குமேல் வெந்நீரில் நனைத்துப்பிழிந்த கம்பளத்தினால் ஒற்றுதல்செய்து "எக்ஸ்ட்ராக்ட் ஆப் பெல்லடோனா" (Extract of Belladona) என்னும் மருந்தை மடியின்மேல்தடவி மடிதொங்கியாடாமலிருக்கும்படி துணியினால் எடுத்து இடுப்பிற்குக் கட்டிவைக்கவேண்டும்.

மடிக்குள் கட்டியெழும்பிச் சீழ் நிறைந்திருப்பது தெரிந்தவுடனே கோணியூசியினாலாவது, சிறியமுனையும் கூர்மையுமுள்ள கத்தியினாலாவது குத்திச் சீழை வெளிப்படுத்தி அரிசி யல்லது கேழ்வாகின்மாவை நீரில் வேகவைத்துத் தெளிவாகச் செய்யப்பட்டிருக்கும் களியை அகலமான துணியின்மேல் மந்தமாகத்தடவி அக்காயத்தின் மேலும் மடியின் மேலும் போட்டுத் துணியினால் பிகுவாய்க்கட்டவேண்டும். இவ்வாறு தினத்திற்கிரண்டு மூன்றுதடவை கட்டிப் புண்ணிலிருந்து சீழொழுகுவதின்று புண் சிவப்பானபோது நெம்பர் உ௫-வது எண்ணெய் மருந்தையாவது அல்லது நெம்பர் ௰௫-வது முலாமையாவது போட்டுப் புண்ணை ஆற்றவேண்டும்.

# அவுடதப்பிரகரணம்.

---

மேற்சொல்லியிருக்கும் நாலுவிதநோய்களுக்குச் சமயமறிந்து கொடுக்கத்தரும் அவுடதமுதலிய அநுபானங்களை அளவுப் பிரமாணங்களுடன் கலந்து அவைகளின் குணப்பிரயோகங்களை அனுசரித்துச் சூரணம், இலேகியம், கஷாயங்கள் முதலியவை செய்யத்தகுந்த கிரமங்களை முறையாக இதனடியில் விவரித்திருக்கின்றேன்.

## பேதி அவுஷதங்கள்.

### நெம்பர் ௧.

| | | |
|---|---|---|
| எப்சம் ஸால்டு என்னும் உப்பு | ௰ (10) | துலாம். |
| கந்தகச்சூரணம் | ௭½ (7½) | ,, |
| சுக்குச்சூரணம் | ௧¼ (1¼) | ,, |

இவைகளையெல்லாம் கலந்து இரண்டுசேர் வெந்நீரில் கலக்கி ஆறவைத்து ஒருதடவை குடிப்பிக்கவேண்டும்.

### நெம்பர் ௨.

| | | |
|---|---|---|
| உப்பு | ௩௰ (30) | துலாம். |
| மூசாம்பரம் | ௧¼ (1¼) | ,, |
| கந்தகச்சூரணம் | ௫ (5) | ,, |
| சுக்குச்சூரணம் | ௨½ (2½) | ,, |
| வெல்லப்பொடி | ௰ (10) | ,, |

இவைகளையெல்லாம் ஒருசேர் நீரில்கலந்து குடிப்பிக்க வேண்டியது.

### நெம்பர் ௩.

| | | |
|---|---|---|
| நேர்வாளத்தின் பருப்பு | ⅛ (⅛) | துலாம். |
| உப்பு | ௰௫ (15) | ,, |

மேற்சொல்லிய இரண்டையும் பொடிசெய்து அரிசிக் கஞ்சியில் குடிப்பிக்கவேண்டும்.

---

## சுர அவுடதங்கள் (சுரஹரி).

### நெம்பர் ௪.

| | | |
|---|---|---|
| பொட்டிலுப்பு | ௧½ (1½) | துலாம். |
| உப்பு | ௨½ (2½) | ,, |
| நிலவேம்பின்சூரணம் | ௨½ (2½) | ,, |
| வெல்லம் | ௭½ (7½) | ,, |

இவைகளைச் சூரணித்து வெந்நீரில்கலந்து குடிப்பிக்க வேண்டும்.

நெம்பர் ரு.

கற்பூரம் ஜ ($\frac{3}{4}$) துலாம்.
பொட்டிலுப்பு ஜ ($\frac{3}{4}$) ,,
ஊமத்தையின் விதை வஹ ($\frac{5}{8}$) ,,

இவைகளைச் சூரணஞ்செய்து அரை *சட்டாக்குச் சாராயத்தில் நலந்து அரைசேர் அரிசிக்கஞ்சியில் குடிப்பிக்க வேண்டும்.

---

## ஜீரண சக்தியை உண்டாக்கித் தேகத்திற்குப் பலத்தைக்கொடுக்கும் ஔஷதங்கள்.

நெம்பர் சா.

அன்னபேதி உஹ ($\frac{5}{8}$) துலாம்.
நிலவேம்பு கவ ($1\frac{1}{4}$) ,,

இவைகளைச் சூரணித்து அரிசிக்கஞ்சியில்கலந்து குடிப்பிக்கவேண்டும்.

நெம்பர் எ.

நிலவேம்பு கவ ($1\frac{1}{4}$) துலாம்.
சுக்கு கவ ($1\frac{1}{4}$) ,,
மிளகு கவ ($1\frac{1}{4}$) ,,
உப்பு ரு (5) ,,

இவைகளின் சூரணத்தை வெல்லத்துடன்சேர்த்து அரிசிக்கஞ்சியில் கொடுக்கவேண்டும்.

நெம்பர் அ.

சுக்கு ச (4) துலாம்.
மிளகு கஉ ($1\frac{1}{2}$) ,,

இவற்றைச் சூரணஞ்செய்து ஐந்து சட்டாக்குச் சாராயத்துடன் வெந்நீரில்கலந்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

---

## மலம் இரத்தம் முதலியவைகளைப் பந்திக்கும் மருந்துகள்.

நெம்பர் கூ.

மயில்துத்தம் வ ($\frac{1}{4}$) துலாம்.

இதைச் சூரணித்து அரைசேர் நீரில்கலக்கி வெகுநாளாயிருக்கும் பேதிக்குக் கொடுக்கவேண்டும்.

---

* அம்ச ரூபாயுடைட நவதானியத்தைக் கொண்டது ஒருசேர். அதன் 16 பாகத்தி லொருபாகம் ஒரு சட்டாக்கு.

நேம்ப...

| | | |
|---|---|---|
| சீமைச்சுண்ணும்பு | ங (3) | துலாம். |
| காசுக்கட்டி | உஉ (2½) | ,, |
| அபீம் | வஹ (⅜) | ,, |
| நிலவேம்பு | கவ (1¼) | ,, |

இவைகளைச் சூரணித்து ஒரு சட்டாக்குச் சாராயத்துடன் ஒருசேர் அரிசிக்கஞ்சியில் கலந்து குடிப்பித்தால் பேதி நிற்கும்.

நேம்பர் கக.

| | | |
|---|---|---|
| சீமைச்சுண்ணும்பு | ரு (5) | துலாம். |
| காசுக்கட்டி | உஉ (2½) | ,, |
| சுக்கு | கவ (1¼) | ,, |
| அபீம் | வஹ (⅜) | ,, |

இவைகளைப்பொடிசெய்து ஒருசட்டாக்குச் சாராயத்துடன் அரிசிக்கஞ்யில்கலந்து குடிப்பிக்கவேண்டும்.

---

## புண்களின்மேற் போடவேண்டிய பஸ்பம்.

நேம்பர் கஉ.

| | | |
|---|---|---|
| சீமைச்சுண்ணும்பு | ய (10) | துலாம். |
| படிக்காரம் | கவ (1¼) | ,, |
| மயில்துத்தம் | கவ (1¼) | ,, |
| அடுப்புக்கரி | உஉ (2½) | ,, |

இவைகளையெல்லாம் இடித்து வஸ்திரகாயஞ்செய்த பின்பு காயத்தின்மேல் போடவேண்டியது.

---

## புண்களுக்குப் போடும் முலாம்கள்.

நேம்பர் கங.

| | | |
|---|---|---|
| மயில்துத்தம் | வஹ (⅜) | துலாம். |
| கற்பூரதைலம் | வஹ (⅜) | ,, |
| தேங்காயெண்ணெய் | உ (2) | சட்டாக்கு. |
| தேன்மெழுகு | ய (10) | துலாம். |

மெழுகை எண்ணெயில்போட்டு உருக்கி அத்துடன் மற்றவைகளைக்கலக்கி ஆறியபின் துணியில்தடவி வெகுநாளாக ஆருமலிருக்கும் புண்களுக்குப்போடவேண்டும்.

நேம்பர் கச.

| | | |
|---|---|---|
| படிக்காரச்சூரணம் | உஉ (2½) | துலாம். |
| தேங்காயெண்ணெய் | கஉ (1½) | சட்டாக்கு. |

| | | |
|---|---|---|
| தேன்மெழுகு | ௭௨ (7½) | துலாம். |
| கற்பூரதைலம் | ௧வ (1¼) | ,, |

மெழுகையும் எண்ணெயையும்சேர்த்துருக்கி அதில் மற்றவைகளைக்கலந்து ஆறினபின்பு துணியின்மேல்தடவிப புண்க [illegible]ல்போடவேண்டியது.

நெம்பர் ௧௫.

| | | |
|---|---|---|
| தேன்மெழுகு | ௰ (10) | துலாம். |
| தேங்காயெண்ணெய் | ௧௨ (1½) | சட்டாக்கு. |
| அயோடோபாரம் வேண்டிய அளவு. | | |

மெழுகை எண்ணெயில் உருக்கி ஆறினபின் அதன் எட்டுப்பாகத்திற்கு அயோடோபார (Iodoform) த்தின் சூரணம் ஒருபாகம் நன்றாகக்கலந்து துணியின்மேல்தடவிப் புண், காயம் முதலியவைகளின்பேரில் போடவேண்டியது.

இஃது மூலாம்களில் சர்வ உத்தமமானது. இதனைப் போட்டால் புண்ணின்மேல் ஈயும்மொய்க்காது. அழுகியபுண்களது துர்வாசனையும்போய் புண்ணும் ஆறிப்போம்.

நெம்பர் ௧௬.

டார் என்னும் கீலெண்ணெய்......கற்பூரதைலம்.
கடுகெண்ணெய்.

இவைகளைச் சமபாகமாகக்கலந்து கந்தகத்தின் பொடியையும்சேர்த்துக் கிருமியினாலுண்டாயிருக்கும் சொறி சிரங்குமுதலியவைகளுக்குத் தடவித்தேய்த்தால் கிருமிகள் இறந்து இரணமும் ஆறிப்போகும்.

நெம்பர் ௧௭.

திலமுகி (மைலாப்ரீல்—வீகோரியை) என்னும்

| | | |
|---|---|---|
| பூச்சியின் சூரணம் | ௧ (1) | பாகம். |
| தேன்மெழுகு | ௬ (6) | ,, |
| தேங்காயெண்ணெய் | ௬ (6) | ,, |

மெழுகை எண்ணெயுடன்கலந்து உருக்கி அதில் பூச்சியின் சூரணத்தைக் கலந்துவைத்துக்கொண்டு காகிதத்தின்மேல்தடவிச் சர்மத்தின்மேல்போட்டுப் பிகிர்ந்துகட்டினால் சர்மம் சுடப்பட்டு கொப்புளமெழும்பும்.

சூடுபோட்ட காயத்தின்மேல் இம்மூலாமைப்போட்டுத்தேய்த்தால் அவ்விடம் வெந்துபோகும்.

நெம்பர் ௧௮.

| | | |
|---|---|---|
| கந்த[illegible]ந்தின் சூரணம் | ௭½ (7½) | துலாம். |
| டார்[illegible]ஒரும் இலைஎண்ணெய் | ௨½ (2½) | ,, |
| கற்பூரதைலம் | ௧¼ (1¼) | ,, |
| தெங்காயெண்ணெய் | ௧ (1) | சட்டாக்கு. |

இவைகளையெல்லாம் கலந்து பேனும் ஈ[illegible]யும் இருக்கும் இடத்தில் போட்டுத் தேய்த்தால் அவை நாசமாகும்.

நெம்பர் ௧௯.

| | | |
|---|---|---|
| கற்பூரம் | ௧ (1) | பாகம். |
| கற்பூரதைலம் | ¼ (¼) | ,, |
| தேங்காயெண்ணெய் | ௪ (4) | ,, |

இவைகளையெல்லாம் அரைத்துக்கலந்து புழுக்களிருக்கும் புண்களுக்குத்தடவினால் புழுக்களும் சாகும். புண்ணு மாறும்.

நெம்பர் ௨௦.

| | | |
|---|---|---|
| அன்னபேதி | ¾ (¾) | துலாம். |
| சுக்கு | ௧¼ (1¼) | ,, |
| மூசாம்பரம் | ௧¼ (1¼) | ,, |
| வெல்லம் | ௧½ (1½) | சட்டாக்கு. |

இவைகளைச் சூரணஞ்செய்து கலந்து அரிசிக்கஞ்சியில் இரண்டுநாளைக்கோர்தடவை குடிப்பிக்க நாளடைவில் ஜீரணசக்தி யுண்டாய் இரத்தவிர்த்தியாகி தேகம் சுகமாகும்.

நெம்பர் ௨௧.

| | | |
|---|---|---|
| கந்தகம் | ௨½ (2½) | துலாம். |
| பொட்டிலுப்பு | ¾ (¾) | ,, |
| சுக்கு | ௨½ (2½) | ,, |

இவைகளைச் சூரணித்துக்கலந்து அரிசிக்கஞ்சியில் தினத்திற்கோர்முறை குடிப்பித்தால் நெம்பர் ௨௦-ல் சொல்லிய குணம் காணும்.

நெம்பர் ௨௨.

| | | |
|---|---|---|
| உப்பு | ௨½ (2½) | துலாம். |
| கந்தகம் | ௨½ (2½) | ,, |

இவைகளைக்கலந்து தினத்திற்கு இரண்டொருதடவை கஞ்சியில் கொடுத்துவந்தால் நெம்பர் ௨௦-ல் சொல்லியவாறு சுகம் உண்டாகும்.

## காயம், புண்முதலியவைகளைக் கழுவவேண்டிய அவுடதங்கள்.

### நெம்பர் உ௩.

| | |
|---|---|
| ...லிக் ஆசிட் | ௧ (1) பாகம். |
| வெந்நீர் | ௫௰ (50) ,, |

இவை இரண்டையும் நன்றாகக்கலந்து காயங்களையும் புண்களையும் கழுவுவதற்கும் துணியில் நனைத்து அவைகளின்மேல் போடுவதற்கும் உபயோகிக்கலாம். இதனைப் போடுவதால் அழுகிய புண்களிலிருக்கும் துர்நாற்றம் போகும். ஈ மொய்த்துக்கொண்டு புழுவிழாது. புண் சீக்கிரத்தில் ஆறிப்போகும்.

### நெம்பர் உ௪.

| | |
|---|---|
| படிக்காரம் | ௧வ (1¼) துலாம். |
| நீர் | ௨ (½) சேர். |

படிக்காரத்தை நீரில்கரைத்து அதனால் புண்ணைக் கழுவுவதற்கும் அதன்மேல் போடுவதற்கும் உபயோகமாகும்.

### நெம்பர் உ௫.

| | |
|---|---|
| கார்போலிக் ஆசிட் | ௧ (1) பாகம். |
| தேங்காயெண்ணெய | ௬ (6) ,, |

இவ்விரண்டையும் நன்றாய்க்கலந்து பஞ்சியில்நனைத்துப் புண்களின்மேல் போட்டால் அவைகளிலிருக்கும் துர்நாற்றமெல்லாம் போய் புண்களும் வெகுசீக்கிரமாகக் குணப்படும்.

### நெம்பர் உ௬.

| | |
|---|---|
| சுக்கு | ௧வ (1¼) துலாம். |
| மிளகு | ௧வ (1¼) ,, |
| ஓமம் | ௧வ (1¼) ,, |
| ஏலரிசி | ௧ (1) ,, |
| பெருங்காயம் | ௧ (1) ,, |
| சாராயம் | ௩ (3) சட்டாக்கு. |

இவைகளைச் சூரணம்செய்து சாராயத்துடன் சேர்த்து வெந்நீரில் குடிப்பிக்கவேண்டியது.

### நெம்பர் உ௭.

| | |
|---|---|
| கற்பூரம் | ஓ (¾) துலாம். |
| ஊமத்தைவிதையின் பொடி | ஓ (⅛) ,, |
| சாராயம் | உ (2) சட்டாக்கு. |

கற்பூரத்தைச் சாராயத்தில்கரைத்து அதில் அந்தச்சூரணத்தைக்கலந்து அரிசிக்கஞ்சியில் கொடுக்கவேண்டியது.

நேம்பர் ௨௮.

புகையிலைச் சூரணம் ௧வ ($1\frac{1}{4}$) துலாம்.
வெல்லம் ௨ [illegible]

இரண்டையும் நன்றாகக்கலந்து வெந்நீரில் குடிப்பிக்கவேண்டியது.

நேம்பர் ௨௯.

கார்போலிக் ஆஸிட் ௬ (6) சட்டாக்கு.
க்ளிசரீன் ௨ (2) ,,
சோடா பை கார்பநெட்ஸ் ௩௰ (30) துலாம்.
(Soda BiCarbonatis.)

இவைகளைக்கலந்து மூன்று நான்கு சிறியகரண்டி (எண்ணெய்க்கரண்டி) நிறைய எடுத்து ஓர்குப்பி வெந்நீரிற்கலந்து வொருவேளையைப்போல் தினத்திற்கு இரண்டொரு தடவை பெரியநோவு வந்திருக்கும்மந்தையில் நோய்கொள்ளாதிருக்கும் மாடுகளுக்குக் குடிப்பித்தால் முன்னுக்கு நோயுண்டாகாதென்று சொல்லுவார்கள்.

நேம்பர் ௩0.

சிமைச்சுண்ணம்பு ௫ (5) துலாம்.
காசுக்கட்டி ௨½ ($2\frac{1}{2}$) ,,
அபீம் ⅜ ($\frac{3}{8}$) ,,
சுக்கு ௧வ ($1\frac{1}{4}$) ,,
சாராயம் 1 சட்டாக்கு.

இவைகளையெல்லாம் கலந்து அரைசேர்நீரில் குடிப்பித்தால் பேதிநிற்கும்.

நேம்பர் ௩௧.

முருக்கம்விரையின் பருப்பு (Plaspapada) ௧ (1) துலாம்.
சுக்கு ௧ (1) ,,
வெல்லம் ௨ (2) ,,

இவற்றின் சூரணத்தை இரண்டு மூன்று தினத்திற்கொருதரம் காலையில் கஞ்சியில் சேர்த்துக்கொடுக்க வயிற்றில் கிருமிகளிருந்தால் மாய்ந்துபோம்.

நேம்பர் ௩௨.

ப்ளம்பை அஸீட்ஸ் (ஸமேதா) ⅛ ($\frac{1}{8}$) துலாம்.
சிமைச்சுண்ணம்பு ௨½ ($2\frac{1}{2}$) ,,
அபீம் ¾ ($\frac{3}{4}$) ,,

இவைகளை மந்தமான கஞ்சியில் கலந்து கொடுத்தால் வெகுநாளாயிருக்கும் இரத்தபேதி நீங்கும்.

நேம்பர் ௩௩.

| | |
|---|---|
| டர்பென்டைன் (கற்பூரதைலம்) | ௧ (1) சட்டாக்கு. |
| ...ல்லெண்ணெய் | ௩ (3) ,, |
| மிளகின்பொடி | ௧½ ($1\frac{1}{2}$) துலாம். |

இவைகளையெல்லாம் கலந்து ஒருசேர் சூடாயிருக்கும் கஞ்சியில் தினத்திற்கொருதடவை அல்லது இரண்டுதடவை கொடுத்துவந்தால் இருமல் குணமாகும்.

---

## ஹேஜில்டன்துரை அவர்கள் கோமாரிக்குக் கொடுக்கும் அவுடதங்கள்.

நேம்பர் ௩௪.

| | |
|---|---|
| ஆளிவிதையின் எண்ணெய் (Linseed Oil) | வ ($\frac{1}{4}$) சேர். |
| சாராயம் ... ... | ௧½ ($1\frac{1}{2}$) சட்டாக்கு |
| கார்போலிக் ஆசிட் ... | ௪௰ (40) துளி |

இவைகளையெல்லாம் கலந்து அரைசேர்கஞ்சியில் நோய்கண்டவுடனே கொடுக்கவேண்டும்.

நேம்பர் ௩௫.

| | |
|---|---|
| ஓமம் | ௨ துலாம். |
| கஞ்சா | ௧ ,, |
| காசுக்கட்டி | ௧ ,, |

இவைகளையெல்லாம் சூரணித்து மூன்று சட்டாக்குச் சாராயத்துடன் கலந்து அரைசேர்கஞ்சியில் பேதி தொடங்கியபோது நாள்ஒன்றுக்கு இரண்டுதடவை குடிப்பிக்கவேண்டும்.

நேம்பர் ௩௬.

அன்னபேதி ௧ துலாம்.

இதைப் பொடிசெய்து அரைசேர்கஞ்சியில் கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டுவேளையாகப் பேதிநின்றுபோகும் வரைக்கும் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

நேம்பர் ௩௭.

| | |
|---|---|
| வேப்பம்பட்டையின் உட்பாகம் | ௪௰ துலாம். |
| உப்பு ... ... | ௫ ,, |

பட்டையை இரண்டுசேர் தண்ணீரில்போட்டு ஒருமணிநேரம் வரைக்கும் வேகவைத்துப் பிறகு வடிகட்டி ஆறவைத்து உப்பைக்கலந்து, இதில் ஒருவேளைக்கு அரைசேராக நாள் ஒன்றுக்கு இரண்டுதடவை ரோகங்கண்ட ஆரம்பத்தில் குடிப்பிக்கவேண்டும்.

நெம்பர் ங அ.

| | | |
|---|---|---|
| நிலவேம்பு | ங | துலாம். |
| சோம்பு (Aniseed) | ங | ,, |
| கற்பூரம் | க | ,, |
| பெருங்காயம் | க | ,, |
| பொட்டிலுப்பு | உ | ,, |

இவைகளைச் சூரணித்து அரைசேர் கஞ்சியில் கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டுதடவையாக ரோகங்கண்ட ஆரம்பத்தில் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

---

## இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் இங்கிலீஷ் ஔடதங்கள்.

---

கார்போலிக் ஆசிட். Carbolic Acid.
ஐயோடோபாரம். Iodoform.
டர்பென்டைன் (கர்பூரத்தைலம்). Turpentine.
ப்ளம்பை அசிடஸ். Plumbi Acetas.
ப்ரெபேர்ட்சுண்ணாம்பு. Prepared Chalk.
க்ளிஸரீன். Glycerine.
டார் (என்னும்கில் எண்ணெய்). Tar.
நிலமுகி பூச்சி. Mylabris Cichorii.
எப்சம் ஸால்ட். Epsom Salt or Magnesia Sulphas.
மெக்டேகல்ஸ் பௌடர். McDougall's Powder.
எக்ஸ்ட்ராக்ட் ஆப் பெல்லடோனா. Extract of Belladonna.

இவையெல்லாம் இங்கிலீஷ்மருந்துகள் விற்கும் இடங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் சொற்பவிலைக்கு அகப்படும்.

முற்றிற்று.

11/5/09